# தொல்காப்பியர் பொருட்படலம்

## அகத்திணையியலும்,

பேராசிரியர்
இளசைகிழார். ச. சோ. பாரதியார், M. A., B. L.
உயரறமன்ற வழக்கறிஞர்
எழுதிய

## புதிய உரையும்.

முதற் பதிப்பு
(அனைத்துரிமையும் ஆக்கியோற்கே)

1942.

விலை ரூ. 1—0—0

# தொல்காப்பியர்

# பொருட்படலம்

## அகத்திணையியலும்,

55
தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
தஞ்சாவூர்

பேராசிரியர்

இளசைகிழார். ச. சோ. பாரதியார், M. A., B. L.

உயர்மன்ற வழக்கறிஞர்

எழுதிய

## புதிய உரையும்.

முதற் பதிப்பு

(அனைத்துரிமையும் ஆக்கியோற்கே)

1942.

விலை ரூ 1—0—0

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
தஞ்சாவூர்



உயர்மன்ற அறவாதி,

பேராசிரியர் :

இளசைகிழார் ச. சோ. பாரதியார், M.A., B.L.



7083

இளசை வளநாட்டு வேந்தர், மாட்சிமிக்க திருவளர்ச் செம்மல்,

**ராஜ ஜெகவீர ராம**
**முத்துக்குமார வெங்கடேசுர**
**எட்டப்ப நாயக்க ஐயனவர்கள்பால்**

எழுமையும் தொடரும் உழுவற் கையுறையாய்

**அகத்திணையியற் புத்துரையைச் ஒப்புவிக்கும்**

# உரிமையுரை.

---

*மூவேந்தர் குடிமுடிந்து முத்தமிழும் வீழாமல் முழங்க வைப்போர்,*
*பாவேந்தர் பாட மறப் பகைமன்னர் பாராட்டப் பாராள் வேந்தர்,*
*நாவேந்தர் வாழ்த்தவளர் புகழறம்பல் கலைகளெலாம் நாளுந்தங்கள்*
*கோவேந்த ரென்றுரிமை கொண்டாடக் கொற்றமுயர் வாகை*
*[கொள்வோர்.*

*பேரால நிழலமர்ந்து பேசாமல் மெய்யுணர்த்தும் பெரியோன்*
*[முன்னாள்*
*ஓரால முண்டதற்குக் கடவுளரால் இறைவனென உயர்த்தப்*
*[பெற்றான்;*
** ஊரால மைந்திணையுண் டோங்கறங்காத் தெண்டிசையு மாணை*
*[போக்கும்*
*ஏரால மைந்திறைவர் எட்டமரென் றிசைபெறுத லியல்பாமன்றே.*

*தென்னிளசை மன்னர்வெங்க டேசுரெட்டர் சீர்மரபு சிறக்கத்*
*[தோன்றி*
*மன்னுபுகழ் மணந்துமகிழ் மகிபனிளவயதில் முதிர் மதியின்*
*[மிக்கான்,*
*கன்னிமுதல் வடவரையுங் கடந்துயரும் புகழ்மரபின் கடவுட்*
*[சால்பால்*
*தன்னுலகிற் கலிதொலையத் தள்ளாத வளமலியத் தரணி*
*[யாள்வோன்.*

---

* (ஊராலம் ஐந்து = பாஞ்சாலங்குறிச்சி.)

மதிமரபன், குளிர்வெண்முழு மதிக்குடையை நிழற்றியறம்
[வளர்ப்போன், வாய்மைப்

பதி,படிறு சதித்தடியப் பரிவறியான், பாவியற் பகைவன்,மேலோர்
துதிமுத்துக் குமாரவெங்க டேசுரெட்ட துரையென்பால் சுரக்கு
[மன்பால்


முதியதமிழ்க் காப்பியரி னகத்திணைக்கென் புதியவுரை முடித்துத்
[தந்தேன்.

பிறந்ததின முதலாகப் பெற்றெடுத்த குரவரினும் பெருகுமன்பாற்
சிறந்தவெலாஞ் செய்துதவிச் சிறியேனை யாளாக்கி திருவார்கல்வி
துறந்தவரும் விரும்புதமிழ்ச் சுவைஅறிவு தந்தோர்தம் மருகன்,
[செவ்வேட்

கிறந்தாலும் பிறந்துழைப்பேன் இவ்வுரையைக் கையுறையாய்
[உரித்தாக்கின்றேன்.


'மலையகம்'
பசுமலை,
1—10—42.

ச. சோ. பாரதி.



மாட்சிமிக்க

எட்டையபுரம் மன்னர் அவர்கள்



# தொல்காப்பியர் - பொருட்படல உரைப்பாயிரம்.

மக்கள் பேசு மொழிகளில் புலமை சான்ற செய்யுட் செல்வமும் சொற்சிறப்ப வளமும் நிரம்பியவை மிகச் சிலவேயாம். அவையனைத்தும் மிகத் தொன்மையும் விரிந்து வரம்புறுத்திறுகிய இலக்கண யாப்புறவும் பெற்றுள்ளன. வளமிகுந்த பிற்காலப் புதுமொழிகள் சுருங்கி நெகிழ்ந்த இலக்கண நொய்மையுடையனவாய் வழங்குகின்றன. திட்பமும் விரிவும் ஒட்பமும் சிறந்த பண்டை மொழிகள்பல தம் பரந்து செறிந்த இலக்கணப் பொறையால் நலிந்து நடை தளர்ந்து வழக்கிழந்து, பழமை பாராட்டுவாரளவில் பயிற்சி குறுகிப்பெரும்பாலோர்க்குப் பெயர் தவிரப் பிறிதறியக்கூடாத மறைமொழிகளாகி விட்டன. யவனம், இலத்தீன், எபிரேயம், பழைய பாரசீகம், ஆரியம்போன்ற பழம் பெரு மொழிகள் எல்லாம் வேண்டாது வியத்தற்குரிய பொருட்காட்சி சாலை வியப்புக்களும், தேடுவார் எளிதிற் தெளியாத இருட் புதர்களுமாயிருக்கின்றன. அவற்றிலமைந்த ஆன்றோர் செய்யுட்சிறப்பை விரும்புவோர் அவற்றை அரும்பொருட் சுரங்கங்களாக் கொண்டகழ்ந்தாராய்ந்தும், சமையக்கோள் வரலாறு சொற்சிறப்ப வளர்ச்சிகளைத் தேடுவோர் அவை புதைந்த பாழ்பழம் பரப்புகளாய்த் துருவியும் பேணுவதால், அவைகளிறந் தறவேமறக்கப் படாமலிருந்து வருகின்றன.

தொன்மை, சொற்சிறப்பவளம், செய்யுட் சிறப்பு, நூற்றிட்பங்களில் முதுபெரு மொழியினத்திற் சேர்ந்து, பிற பல மொழிகளைப்போல வழக்கழியாமல், தளராது

வளரும் உயிர்த்திறமும் இறவா இளமை வளமும் பெற்றுச் சாவாமொழி மூவாத்தமிழொன்றே.

ஆழ்ந்தகன்ற நூற்பெருமை செப்பனிட்ட சொற் செவ்விகளில் வடவாரியம் மேல்புலயவனம் முதலிய எதற்கும் இளையாச் சிறப்புடையது தமிழ். என்றாலும், வழக்கொழிந்த பிற முதுமொழிகள் வினைத்திட்ப மொன்றே குறிக்கோளாய்க்கொண்டமைத்த நூற் பொறையால் நலிவுற்றன. அவ்வாறன்றி, எழுத்து, சொல், செய்யுள், பொருள், எல்லாம் திட்பமும் திகழும் ஒட்பமும் செழித்து, முதிரா இளநலம் தழையுயிர் திறனும் ஒளிர்ந்தொழுகி இழையும் செவ்வியும் நிறைந்து யாப்புற வுற்றது தமிழ்நூல். பிற பெருமொழிகளை நலிவித்த வளர்ச்சியைத் தளர்க்கும் செயற்கைக் கட்டுப்பாடுக ளின்றி, இயல்போடியைந்த தன் நயத்தகுநூலே கொழு கொம்பாகத் தமிழ்மொழி நாளும் உயர்ந்து வளர்ந்தது. செறிவும் நிறைவும் செய்யாளழிலும் தழையத் துணை சால் நூல்வளமுடைமை தமிழின் சிறப்பு. அதனல் மூவாமுதலாத் தமிழ்மொழி இறவா இளநலம் திகழத் தளரா வாழ்வும் வளரெழில்வளமும்பெற்று என்றும் நின்று நிலவுகிறது.

தற்காலம் தமிழில் தலைசிறந்து நிலவுவது தொல் காப்பியர் நூலே. அது, ஆரியப் பாணினிக்கும் தூரிய மேல்புலயவன அரித்தாட்டிலுக்கும் காலத்தால் முந்திய தொன்மையுடையது; பாணினியின் செறிவும், பதஞ் சலியின் திட்பமும், அரித்தாட்டிலின் தெளிவும், அவை யனைத்திலுமில்லா வளமும் வனப்பும் அளவைநூன்முறை யமைப்புப்பெற்றுச் செறிவும் தெளிவும் செறியாநெகிழ் வும் நிரப்பியமைந்தது. இத் தமிழ் நூல் பாணினிக்குப்

பல நூற்றாண்டுகட்கு முந்தியது. வான்மீகர் பாராட்டிய கடல்கொண்ட கபாடம் அழியுமுன், அம்மூதூரிலாண்ட பாண்டியன் "நிலந்தருதிருவில் நெடியோன்" காலத்தில், அவனவையை அணிசெய்த புலவருள் தலைமை தாங்கிய பெரியார் 'ஒல்காப்புகழுடைத் தொல்காப்பியரே' (தம் பெயரால்) இத்தமிழ்ப் பெருநூலை இயற்றினரென்று அந்நூற்பாயிரம் இயம்புகிறது. ஒரு நூற்கு ஏற்ற பெயரிடுவதும், அன்றி அதை ஆக்கியோன் பெயராலமைப்பதுமே பழைய தமிழ் வழக்கு. பாயிரமில்லது பனுவலாகாதென்பர் தமிழ்ச் சான்றோர். பாயிரம் கூற வேண்டிய பலவற்றுள் நூற்பெயரும் நூலியற்றியோர் பெயரும் இன்றியமையாதன. இந்நூலையாக்கியோர் பெயர் தொல்காப்பியரென்றும், அவர் பெயரே அந்நூற் பெயராக்கப்பட்டதென்றும் இந்நூற்பாயிரம் இயம்புகிறது.

பண்டைத் தமிழகத்தில் "காப்பியர்" எனும் இயற்பெயர் தமிழரிடைப் பெருவழக்குடைத்தென்பது, அப்பெயருடைய புலவர் பலர் பண்டைத் தொகைச் செய்யுட்கள் செய்தவராய்க் கூறப்பெறுவதால் நன்கறியலாம். ஒருபெயருடையார் பலரிருப்பின் அவரிடை வேற்றுமை விளக்கவேண்டி ஏற்புடை அடைகள் அவரவர் பெயரொடு தொடுக்கப்படுஞ் செவ்வியமுறையும் தொன்றுதொட்டின்றுவரை நின்றுவரு முண்மை யாவருமறிந்ததே. பல்காப்பியர், காப்பியாற்றுக் காப்பியனார், சேந்தன்தந்தை காப்பியனார், எனக் காப்பியரெனும் பெயருடைய புலவர் பலரைக் கேட்கின்றோம். அப்பெயருடையார் எல்லார்க்கு மிந்நூலுடையார் காலத்தால் முந்தியவராதலின், இவர் இயற்பெயரொடு தொன்மை

சுட்டுங் குறிப்படைகூட்டித் தொல்காப்பியரெனப் பண்டைப் புலவரால் பாராட்டப்பெற்றனராதல் வெளிப் படை.

தமிழ்ப்பெரியார் அனைவரையும் ஆரியக்கலப்புடை யராக்கித் தலைசிறந்த தமிழ்நூல்களுக்கு வடநூற் சார்பு கற்பித்துக்கொள்ளுவதே பெருமையெனக் கருதிய இடைக்காலத்தவர், இறந்த ஆரிய அகத்தியரை எழுப்பி தமிழ்நூற்கே அவரை முழுமுதற் குரவரென்றொரு கதை கிளப்பி, தமிழ்த் தொல்காப்பியரை ஆரியப் பார்ப் பனராக்கியதோடமையாமல், அவரை இல்லாவகத் தியற்குப் பொல்லா மாணக்கருமாக்கி முடித்தார். "காப்பியன்" எனும் தமிழ்ச் சிறப்பியற்பெயரை "காவியன்" எனும்வடசொற்றிரிபாக்கி, "கவி" மரபுடைய சுக்கிரன் குடிப்பிறப்பைச் சுட்டும் காரணப் பொதுப் பெயராக்கி, இரண்டாமூழித் துவக்கத்தில் இராமனுக்கு மூத்த பரசுராமனுக்கு இவரைத் தம்பியாக்கி, பிறகு மூன்றாமூழி யிறுதியில் வடமதுரையாண்ட கண்ணன் உதவிபெற்றுத் தமிழகத்து வந்து குடியேறியவராக ஒரு பொய்ப்புராணமும் புனையப்பெற்றது. இதற்கு வட நூல்களிலும் பழைய தமிழ்ச்செய்யுட்களிலும் ஆதரவு யாதுமில்லை. இவ்வாறரும்பாடுபட்டுத் தமிழ்க் காப்பியனை ஆரியக் கவிக்குலப் பார்ப்பனனாக்கியதோடமையாமல், "தொல்காப்பியர்" எனும் அவர் தமிழ் நூற் பெயரையும் தொல்காப்பியமென வட நூற் தத்திதாந்த விதிப்படித் திரித்து வழங்கலாயினர். இது, இந்நூற்பாயிர வரலாற் றுக்கும் தமிழிலக்கண மரபுக்கும் முற்றிலும் முரணும் தவறு. தொல்காப்பியன் என்பதே இந்நூலியற்றியார்க் கியற்பெயரும், அவர் நூலுக்காகுபெயருமாம்.

இவர் தந்நூலிற் பலவிடத்தும், வடநூல் வழி கொள்ளாது தமிழ்மரபு தழுவியும்,(அகத்தியரைச் சுட்டாமல்) தமக்கு முந்திய தமிழ்ச் சான்றோரியற்றிய பல முதனூல்களைத் தழுவியுமே தாம் இந்நூலை எழுதியதாகத் தெள்ளத்தெளிய விளக்குகிறார். பாயிரமும் இதனைத் தெளித்து வற்புறுத்துகிறது. எனினும், இவ்வுண்மையை எண்ணாமலும், ஆரியர் வருமுன் தமிழில் விரிந்த பல நூலும் தனிவேறு மரபுகளும் வழங்கிய வரலாறறியாமலும், வடமொழி வல்லார் இடைக்காலத்தில் தாமறிந்த வடநூன் முடிபுகளை இத்தமிழ்ப் பெருநூலுட் புகுத்தி உரை கூறினர். அவருரை முடிபுகளைத் தொகுத்துப் பிற்காலத்தில் பன்னூல் பிறந்தன; அவற்றுட் சிறந்தது நன்னூல்.

முப்பதாண்டுகளுக்கு முன் ஓராராய்ச்சிக்காகத் தொல்காப்பியரின் சொற்படலத்தில் சிற்சில பகுதியைத் துருவ நேர்ந்தது. அவ்வளவில் முன் நன்னூலில் நான் கண்ட சில ஐயமகன்று தெளிவுபெற்றதுடன், தமிழ்ப்பழமரபு தழுவா வழுவால் முன் உரைகளிலும், அவற்றைப் பின்பற்றிய பன்னூல்களிலும் பொருந்தா முடிபுகள் புகுந்த நெறியும் அறியலானேன். உடனே தொல்காப்பியரின் சொற்படலத்தைப் பழையபல உரைகளுடன் ஆய்ந்து துருவி முழுதும் படித்தேன், எழுத்தையும் ஒருமுறை தொடர்ந்தாய்ந்து முடித்தேன். அக்காலத்திலேயே என் பெருமதிப்பையும் உழுவலன்பையும் உரிமைகொண்ட இருமொழி இலக்கியப் பெருநிலைவிளக்காயிலகிய (தற்போது மகாமகோபாத்தியாயராய் விளங்கும்) பண்டிதமணி கதிரேசப் பேராசிரியர் அவர்களோடும், காலஞ்சென்ற இலக்கணக்கடலனார் அரசஞ் சண்முகனாரோடும்,

தொன்னூலொடு நன்னூலை ஒத்துநோக்கிக்கண்ட உண்மைகள் சிலவற்றை எடுத்தளவி இன்பமும் பயனுமெய்தினேன்.

பிறகு, தொகைச் செய்யுட்களைத் துருவுங்கால் பற்பல பாட்டினுட்கோள் தொகுத்தாரின் துறைக்குறிப்பொடு பொருந்தாமை தோன்றியது. அவ்வையமகற்றி உண்மைதெளியவேண்டித் தொல்காப்பியர் பொருட்படலத்தை பல பழைய உரைகளுடன் ஆராய்ந்தேன். எழுத்தினும் சொல்லினும்விடப் பொருட்பகுதியில் உரைகாரர் தொல்காப்பியர் நூற்கருத்தைப் பல்காலும் பிறழக்கொண்டு மயங்குமுண்மை ஒருவாறு உணரலானேன். பொருளிலக்கணம் தமிழுக்குத் தனிச்சிறப்பாதலானும், அஃமுறையில் வரையறுத்து வடித்தமைத்த வடநூன் முடிபுகளின்மையானும், தமிழ்மரபுகள் மொழி வளர்ச்சியின் மெய்வரலாறுகளைக் கருதாமலுரைகாரர் தத்தமக்குத் தோற்றியவாறு வடநூன் முடிபுகளை வலிந்து புகுத்தி இந்நூலொடுந் தம்முள்ளும் மாறுபட்டு வெவ்வேறு பொருள் கூறி மயங்கவைத்த பெற்றிமையும் உற்று நோக்க ஓரளவு வெளியாயிற்று. அதன் பிறகு இருபதாண்டு சென்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்தலைமைபெற்று உயர்வகுப்பு மாணவருக்கு இத்தமிழ்ப் பெருநூற் பொருட்படலம் உரைக்குங்கால், பழைய உரை விளங்காத பலவிடத்தென்புதியவுரை சொல்லி வந்தேன். அக்கழக ஆராய்ச்சிக்கட்டுரை அயன சஞ்சிகையில், விளங்காமல் மயங்கவைக்குஞ்சில அரிய நூற்பாக்களைப் பழையஉரைகளுடனுய்ந்து நான் கண்ட முடிபுகளை விளக்கி ஒருசில கட்டுரைகள் வெளியிட்டேன். சில கூட்டங்களிலும் நண்பரிடையும் சில

வற்றைச் சொல்லி வந்தேன். உண்மையிலூன்றிய உளச் செல்வரான புலவர் சிலர் பொருட் பகுதிக்கேனும் தொடர்ந்தென் புதியவுரையை எழுதி வெளியிடுமாறு வற்புறுத்தினர். தொடர்ந்திருந்து எழுதிவர உடல் நலமும் பிற துணையும் குறைந்ததனால் இடையிடையே எழுதிய என் குறிப்புகளைத் தொகுத்து வெளியிடத் துணிந்தேன்.

அகத்திணையியல் முழுவதற்கும் முறையே முதலில் உரையெழுதி முடிந்து அண்ணாமலைப் பல்கழக ஆராய்ச்சிச் சஞ்சிகையில் வெளிவந்தது. அதைப் புத்தக வடிவில் அச்சிட உதவிய தமிழ்ப் புரவலரும், இளசை வளநாட்டு வேந்தருமான மாட்சிமிக்க ராஜ ஜெகவீர ராம முத்துக் குமார வெங்கடேசுர எட்டப்ப நாயக்க ஐயனவர்களுக்கு அவ்வுரையை அவர்களனுமதிபெற்று உரிமைசெய்தேன். அதன் பிறகு, மக்கள் வாழ்வில் பெரும்பகுதியை விளக்கும் புறத்திணையியலுக்கு உரையெழுதிமுடித்து வெளியிட முயன்றேன். அதையறிந்தவுடன் அறிவு வளர்ச்சியில் பெரிதுங் கருத்துடைய செட்டிநாட்டரசர், மாட்சிமிக்க அண்ணாமலை வள்ளலார் அவ்வுரை வெளியிடும் செலவுக்கு மறு தபாலில் பொருளுதவி ஊக்கினார்கள். அவர்கள் பெருந்தகைமைக்கு அப்புத்துரையை அப்பெரியார்க் குரித்தாக்கி மனமார வாழ்த்துவதன்றி இம்மையில் எம் மனோர் செயற்குரியதெதுவுமுண்டோ? என் மெய்ப்பாட்டியலுரையைப் புலவருக்கும் தமிழ்பயிலும் மாணவர்க்கும் உரித்தாக்கியுள்ளேன். சால்புடைய தமிழ்ப் புலவர் தந்தகவால் என்னுரையை இகழாமல், இந்நூலின் மெய்ப் பொருளாராய்ச்சிக்குத் துணையாந் தூண்டுகோலாய்க் கொள்வரென நன்கறிவேன்; மற்றவரின் அழுக்காற்றை மதித்தல் மிகை.

இவ்வுரை முறையாகத் தொடர்ந்து எழுதப்பெறாமல், வாய்த்தபொழுது நினைவுவந்த நூற்பாக்களைப் பெயர்த்தெடுத்து கெட்டிடைகழிய விட்டுவிட்டெழுதி வெவ்

வேறு சஞ்சிகைகளில் வெளியிட்டதனால், சிற்சில விடங்களில் சில குறிப்புக்கள் மீண்டும் கூற நேர்ந்தது; இக் குற்றம் பொறுத்தற்குரியது.

வழுவின்றி எழுதுதற்கும் அச்சிலெழும் பிழை திருத்தி யுதவுதற்கும் உறுதுணைவர் மதுரையில் நான் பெறுவதரிதானதனால், இப்பதிப்புப் பிழைபெருகி, மலர் கனிகள் மனைவாமல் "இலைமலிந்த சருக்க" மயமாயினது. அதனுள்ளும் பயன்காணும் அருளுடைமை தமிழறிஞர் கடவுட்சால்பாதலினால், நடுவிகவாத் தமிழரிதைப் நகைக்கமாட்டார்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல"; ஆதலின் என் புத்துரையை வித்தகர் வெறுக்கார்; உண்மைநாடியுவக்கும் மாணவர் இஃதவரைச் சிந்திக்கத் தூண்டுந் துணையாகப்பேணுவர். அழுக்காறுடையார் வழுக்கான முயல்வது அவரியல்பாதலின், அதற்கு வருந்தல்வேண்டா. கண்ட உண்மையைக் கரவாதுரைப்பதென்னியல்பு. என் பல பனுவல்களை மறுப்பொல்லாது வெறுப்பவரும், புதிய என் முடிபுகளைத் தமதாக்கி என் பெயர் குறியாமலே வெளியிட்டுப் புகழ்பெறுபவரும் பலருளர். விலையின்றிக் கொண்டாலும் என் உரைகளிலெதனையுமே படித்துண்மை யுணர்த்தியவர் யாருமிலர். பல கலைக்கழகங்கள் உலகியலறிவை விலை பகர்பவரின் நிலைக்களகமாக நிலவுகின்றன. எனினும், தமிழருக்குத் தமிழில் ஒரு புத்துணர்ச்சி பிறந்து வளர்வதால், இப் புத்துரை அத்துறையில் ஆராய்வார்க்குதவுமென எண்ணி வெளியிடத் துணிந்தேன்.

*தமிழோங்க! தமிழறமும் தமிழகமும் என்றும் தழைக!*

'மலையகம்'
பசுமலை,
1—11—1942.

ச. சோ. பாரதி.

# தொல்காப்பியர்

## பொருட் படலம், அகத்திணை இயல்.

எழுத்துஞ் சொல்லும் செய்யுளுக்கு இன்றியமை யாத உறுப்புக்களாதலின், அவற்றை முறையே முன்னிரண்டு பகுதிகளாக வகுத்துக்கூறின தொல் காப்பியர், புலவர்க்குரிய பொருட்பகுதியைப் மூன்றும் படலமாக வகுத்தார். மக்கள் கருத்துக்களை விளங்க வெளிப்படுத்துங் கருவியனைத்தும் செய்யுளெனப்படும். செவ்விதாய உளப்பாடு, அதாவது உளத்துறுங்கருத் தைக் கேட்போருளத்துறக் கூறுதற்குரிய சொற்றொடர்க ளெல்லாம் செய்யுளாகும். பாட்டே செய்யுளென்பது பிற்காலப் பிழைவழக்கு. உரை, பாட்டு, நூல், பிசி, குறிப்புமொழி, மறைமொழி, பழமொழி எனப்பலவகை யானும் பல்வேறுருவிற் றோன்றி நின்று பொருள்பயப் பனயாவும் செய்யுளேயாம். செய்யுளெல்லாம் பொருள் பற்றியவே யாகலானும், பொருளொன்றே மக்கள்குறி யாகலானும் அப்பொருள்பற்றியும், அப்பொருளுரைக் குங் கருவியாகும் செய்யுள்பற்றியும், அவையிற்றுக் குறுப்பும் துணையுமாவன பிறபற்றியும் கூறுவனவற்றின் தொகுதி தொல்காப்பியரின் பொருட்படலமாகும்.

இனி, ஆரியர் செய்யுள் அனைத்தும் அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றுள் ஒன்றும் பலவும் பொருளா கக் கொண்டே அமைதல் வேண்டுமென்பர். தமிழ்ப் புலவர் மக்கள் பொருளாக மதிப்பன எல்லாம் செய்யுளுக்

குரியவாகும் எனக் கொள்வர். அப்பொருளெல்லாம் மக்கள் வாழ்வொடு படுவவாகலானும், மக்கள் வாழ்வும் அகமும் புறமுமென இரண்டிலடங்குவதாகலானும், பொருளை அகமும் புறமுமென இருகூறாய் வகுத்துக் கூறுவதே தமிழ் மரபாகும். அம்மரபு மேற்கொண்டு தொல்காப்பியரும் தமிழ்ச் செய்யுட்பொருளை அகப் பொருளும் புறப்பொருளுமாக இருகூறாக்கி, அவற்றின் பொது இயல்புகள் அல்லது இலக்கணங்களைத் தம் நூலின் பொருட் படலத்தில் முதற்கண் அகத்திணையியல்—புறத்திணையியல் என முறையே வகுத்தமைத்து, பிறகு அவற்றுள் அகத்தின் சிறப்பியல்புகளை களவியல் கற்பியல் பொருளியல்களில் விளக்கி, அவற்றின் பிறகே அப் பொருள்களை அறியக் கூறும் கருவியாகிய செய்யுளியல்புகளை மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல் எனு மூன்று பகுதிகளிற்கூறி, இறுதியில் செய்யுள் செய்வார் தமிழ் மரபு பிறழாமற் காத்தற்கு வேண்டியனவற்றை மரபியலில் தொகுத்து விளக்கிப்போந்தார்.

இதில் முதற்கண்ணதாய இவ்வகத்திணையியல் மக்களின் அகவொழுக்கம் அல்லது காதலற வழக்குகளின் பொதுவிலக்கணம் கூறுகிறது. அகமாவது, காதலர் உளக்கிடையும், அவர் காதல் கதிர்த்து வினைப்பட்டு அன்னோர் மனையறவாழ்க்கையிற் றொடர்புறுவதுமாகும். திணையாவது ஒழுக்கம். ஆகவே, அகத்திணை என்பது காதல்கண்ணிய ஒழுகலாறும். அவ்வொழுக்கப் பொது வியல்புகள் கூறும்பகுதி அகத்திணையியலெனப் பெயர்

பெற்றது. (அதுவேபோல், புறத்திணையென்பதும் அக வாழ்க்கைக்குப் புறமான மக்களின் சமுதாயத் தொடர் புடைய ஒழுக்கமாகும். அதுபற்றிக் கூறுமிலக்கணப் பகுதி புறத்திணையியலெனப்படும்.) திணைச்சொல் முத லில் ஒழுக்கத்துக்கு இயற்பெயர். குறிஞ்சி முதலிய திணைப்பெயர்களும் நிரலே புணர்வு முதலிய ஒழுக்க பொருட்டாம். அவை அவ்வத்திணைக்குரிய நிலங் குறிப்பது ஆகுபெயர் நிலையில்; அவற்றின் முதற் பொருள் ஒழுக்கவகையே. இப்பழந் தமிழ் மரபே தொல்காப்பியர் சொல்வது. நானிலங்களுக்கு ஒழுக்கங் களை வகுத்தனர் என்னுமல், நடுவணதொழிய நடுவணைந் திணை தமக்கு வையநானிலத்தை வகுத்தவாறென இவ் வியற் றுவகத்தது அவர் விளக்குதல் காண்க. புணர்தல் முதலைந்தும் "திணைக்குரிப்பொருளே" என மீட்டும் கூறும் தொடருமிதனை வற்புறுத்தும். ஒழுக்கம் கருதா மல் நிலம்பற்றித் திணைவகுத்தல் பழமரபுணராது முரணப்படைத்த புது வழக்காம்.

இனி, அவர்காலத் தமிழ் நூல்வழக்கை மேற் கொண்டு, அகப்புற வொழுக்கங்களை தொல்காப்பியர் முறையே ஒன்றற்கொன்றியைபுடைய எவ்வேழுதிணை களிலடக்கி யமைத்தார். அவற்றில் அக வொழுக்கங்களை முறையே கைக்கிளை-முல்லை-குறிஞ்சி-பாலை-மருதம்-நெய் தல்-பெருந்திணை எனமுறைப்படத் தொகுத்தார். காதல் ஒருவர் பாற்கதிர்த்து, மற்றையோர் மாட்டுப் பருவமன் மையாற் பால்விளியுணராப் பான்மையிற் சிறக்கத்

தோன்று நிலையே கைக்கிளை. எனில், இந்நிலை, கன்றிய காதலன் "காமஞ்சாலா இளமையோள் வயின்"—தனக் கேமம் சாலப்பெறுனெனினும், தன்னலம் விழையாமல் பழிபடு பிழையொழித்து அவணலம் பேணியொழுகும் காதற்பெற்றிய தாகலின், அதனை முதலில் வைத்து, இரு பாலும் காதலொத்துக் கனிந்து சிறந்த அப்பினைந்திணை களை அதன்பின்னமைத்து, அவற்றின் பின் காதல் கன் ணுது கழிகாமப்பழிபிறங்கும் பெருந்திணையைப் பிரித்து நிறுத்தி முறைப்படுத்தினர். இவ்வெழுதிணைகளையு மிம் முறையாற் றெகுத்துக் காட்டினரெனினும், விரிக்குங் கால் இலக்கணம் நிறைந்த ஐந்திணைகளையும் தொடர்புடன் பலபட விளக்கி, தம்மியல் கூறுமளவில் அமைவனவான் கைக்கிளை பெருந்திணைகளி னிலக்கணங்களை முறையே இறுதியிரண்டு தனிச் சூத்திரங்களாற் றெளித்து முடிப்பர்.

இவ்வகத்திணையியற் சூத்திரங்களின் வைப்புமுறை வருமாறு:—

முதற் சூத்திரத்தில் அகத்திணைகள் ஏழெனத் தொகை வரையறைப்பட்டது. அவ்வேழனுள் முதலும் இறுதியுமாக தமக்கென நிலத்தொடர்பில்லாத கைக் கிளை பெருந்திணைகளை விடுத்து, மற்ற ஒத்த காதல் திணை கள் ஐந்தனுள் பிரிவாம்பாலையைப் பொதுவாக்கி, ஏனைய நான்கினையும் தத்தமியல்பால் நால்வகைப்பட்ட 'தமிழ் கூறும்' நல்லுலக நானிலப் பகுதிகளில் ஒவ்வொன்றிற்கும் முறையே சிறப்பியைபுபற்றி வகுத்துப் பொருத்திய

மரபு இரண்டாஞ் சூத்திரத்திற் கூறப்படுகிறது. காடும், மலையும், ஊருங் கடலுமான நானிலப்பகுதிகளும், அவ்வந்நிலத்தில் சிறந்த முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனும் அடையாளப் பூக்களால் அழைக்கப்படுதலின், அவ்வப்பகுதிக்குச் சிறந்தியைந்த அகவொழுக்கங்களும் அவ்வந்நிலப் பூப்பெயர்களே கொள்வனவாயின. பூப்பெயர்கொள்ளும் இம்முறையைத் தழுவியே ஏனைப் பிரிவொழுக்கமும் நானிலங்களிலடங்காத சுரங்களிற் பெரும்பாலான பாலைப்பூவின் பெயரால் வழங்கலாயிற்று.

இனி, அகப்பொருள் முதல் கரு உரியென மூன்று கூறுபடுமென்பது மூன்றாஞ் சூத்திரத்தாலும், அவற்றுள் முதல் பொருள் நிலமும் பொழுதுமென்றிருவகைப் படுமென்பது நாலாஞ் சூத்திரத்தாலும் விளக்கப்பட்டன. ஐந்தாஞ் சூத்திரத்தில் நிலமுதற்பொருளின் இயல்பும் வகையும் கூறப்பட்டன. சு முதல் ௰க வரையுள்ள ஆறு சூத்திரங்களால் காலமுதற்பொருள் அன்புத்திணை ஐந்தனொடு பொருந்தும் இயைபு விளக்கப்பட்டது. ௰உ, ௰ங-ஆம் சூத்திரங்களில் அகவொழுக்க வகைகளும் முதற்பொருளின் கூறுகளும் முன் விளக்கிய முறையேயன்றி வேறுபட்டுத் தம்முள் விரவி வருதலுமுண்டெனக் குறிக்கப்பட்டது. ௰ச-ஆம் சூத்திரத்தில் உரிப்பொருட்குச் சிறந்த ஒத்தகாதலொழுக்கச் சிறப்புவகை யைந்தனியல்பும், ௰ரு, ௰சா-ஆம் சூத்திரங்களில் அவ்வைந்தனுளடங்காது அவைபோலவே சிறப்புடைய பொதுவகை அகவொழுக்கங்கள் சிலவும் கூறப்பட்டன. ௰எ-ஆம் சூத்தி

ரம் உரி கருப்பொருள்கள் பலவேறு வகைப்படுவன போலன்றி, முதற்பொருள் நிலம்பொழுதிரண்டே வகைப்படுமென்னதை வலியுறுத்துகிறது. ௰அ, ௰௯-ஆம் சூத்திரங்கள் அகப்பொருள் வகை மூன்றனுள் எஞ்சிய கருப்பொருள் வகைகளும் முறையே அகவொழுக்கங் களுக்கு ஏற்ற பெற்றிஇயைந்தும் இயையாமலும் வரு மாறு கூறும்.

உ௰ முதல் உச வரையுள்ள சூத்திரங்களால் அக வொழுக்க மரபுகளுக்குப் பலதிறப்பட்ட தமிழ் மக்களின் உரிமை விளக்கப்பட்டது. உ௫ முதல் ௩௩ வரையுள்ள சூத்திரங்களில் அகவொழுக்கங்களிற் பெருவரவிற்றாய பாலை, பிரிவின் நோக்கம்பற்றி அறுதிறப்பட்டு ஒவ் வொரு வகையும் வெவ்வேறு வகுப்பினருக்குச் சிறந்து பொருந்துமியையுடன் விளக்கப்பட்டது. ௩ச-ஆம் சூத் திரத்தில் கடற்செலவும், ௩௫-ஆம் சூத்திரத்தில் மடற்றிறமும் மடவார்க்குக் கடியப்படுந் தமிழ்மரபு சுட் டப்படுகிறது. ௩௬ முதல் ச௰ வரையுள்ள சூத்திரங்களில் தாயர், தோழி, கண்டோர், தலைவன் மற்றையோர் களுக்கு அகத்துறையில்கூற்று நிகழ்தற்கேற்ற இடங்கள் கூறப்பட்டன. ச௩, சச-ஆம் சூத்திரங்கள் முன் ௰௫, ௰௬-ல் கூறிய பெருவரவான உரி ஒழுக்கம்போல் ஐந்திணை யிலக்கணத்திலடங்காது, சிறுவரவிற்றாய் உரிப்பொருட் டுறைகளாகுமிரண்டைச் சுட்டுகின்றன. ச௫-ஆம் சூத் திரம் உரிப்பொருட் புறனடையாய், முன் சுட்டியவற்று ளடங்காது உரிப்பொருளாதற்குப் பொருந்திய பிறபல, மரபுமுரணுவாறு வருவனவுமுள, வெனக்கூறுகின்றது.

சச முதல் சக வரையுள்ள சூத்திரங்கள் அகத்துறைகளுள் உள்ளுறையும் பிறவுமாய உவமங்கள் பயிலுமாறு கூறுகின்றன. ருய-ஆம் சூத்திரம் கைக்கிளை இயலையும், ருக-ஆம் சூத்திரம் பெருந்திணையியல் வகைகளையும், நிரலே விளக்குகின்றன. இவற்றுள் பின்னைய பெருந்திணையை விலக்கி, முன்னதான கைக்கிளைக்கும் அன்பினைந்திணைகளுக்கும் பொருந்தவருவனவாய் முன்னே சுட்டப்பட்ட (1) நிகழ்ந்தது நினைத்தல், (2) நிகழ்ந்தது கூறிநிலையல், (3) மரபுதிரியாப்பிற உரிப்பொருள்கள் விரவல், (4) உள்ளுறை திணையுணர் வகையாதல், என்னும் நான்கும் வந்து பயிலுமென ருஉ-ஆம் சூத்திரம் கூறுகின்றது. ருங-ஆம் சூத்திரத்தில் இயற்பா வகைகளுள் கலியும் பரிபாடலுமே அகப்பொருட்குச் சிறந்துரியவாமென்பது சுட்டப்படுகிறது. ஈற்றிலுள்ள சூத்திரமிரண்டும் அகத்துறையில் தலைமக்கள் கூற்றுக்களில் இயற்பெயர் சுட்டுவது மரபன்றெனக் கூறுகின்றன.

சூத்திரம்:—1. கைக்கிளைமுதலாப் பெருந்திணையிறுவாய்
முற்படக்கிளந்த வெழுதிணையென்ப.

கருத்து:—இது, அகத்திணைகள் ஏழென வரையறுக்கின்றது.

பொருள்:—கைக்கிளைமுதலாகப் பெருந்திணை இறுதியாக முன்னே சொல்லப்பட்ட அகத்திணை ஏழாமென்று கூறுவர் தமிழ் மொழி வல்லார்.

குறிப்பு:— இச்சூத்திரத்தில் அகத்திணையேழும் நிரலே கூறப்பெறாமையானும், கிளக்கும் என்னாது கிளந்த என இறந்தகால எச்சம்பெய்த பெற்றிமை யானும், இதன் பிறகுள்ள சூத்திர வைப்புமுறையில் கைக்கிளையை முதலாகவும் அதனையடுத்து அன்பினைந் திணையும் இறுதியிற் பெருந்திணையுமாக அமைத்துக் கூறப்பெறாமல், முதற்கண் அன்பினைந்திணை கூறி அவற் றின்பின் கைக்கிளைபெருந்திணைகள் தொடர்ந்து கூறப் படுவதாலும், "முற்படக்கிளந்த வெழுதிணை" என்பது அகத்திணையியலில் இச்சூத்திரத்தின் பின் அமைத்துக் கூறப்பட்ட முறையைச் சுட்டாதென்பது வெளிப்படை. எனவே, ஈண்டு "முற்படக்கிளந்த" என்பது இடத்தால் முற்படக்கூறும் அமைப்பு முறையோடு பொருந்தாமை யால், காலத்தால் முற்படக்கிளந்த வொன்றனையே குறிக்குமென்பது தேற்றமாகும்.

ஆகவே, பொருட்படலத்தின் முதலில், பொருள் அகம் புறமென இருவகைப்படுமென்பதும், அவற்றுள் பின் கூறப்பெறும் புறத்திணை ஏழாதல் போலவே அகத்திணை யும் ஏழாமென்பதும், அவ்வகத்திணையும் கைக்கிளை அன் பினைந்திணை பெருந்திணை என ஏழாக வகுக்கப்படு மென்பதும், ஆகிய இவற்றைச்சுட்டிய சில சூத்திரங்கள் அகத்திணையின் முதற்கண் இச்சூத்திரத்திற்கு முன்னே ஆசிரியரால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ் வாறாயின் மட்டும் 'முற்படக்கிளந்த' எனுமிச்சூத்திரச் சொற்களுக்குப் பொருளமைதியும், 'கைக்கிளை முதலா' எனுந்தொடர்க்குப்பொருளும் அமைவதாகும். இப்பழ

நூற் சூத்திரங்கள் சில கடல்கோளாலும் புலம்பெயர் தலாலும் வீழ்ந்து மறக்கப்பட்டிருத்தல் கூடுமென்பது களவியலுரையாலும், "தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப்பழமையால் (ஏடு) பெயர்த்தெழுதுவோர் விழ எழுதினார்போலும்" என்னும் இளம்பூரணர் உரைக் குறிப்பாலும் தெளியப்படும். அவ்வாறு கொள்ளாக்கால் இச்சூத்திரச் சொற்றொடர்கள் பொருந்தும் பொருளமைதி பெறுமாறில்லை. ஆதலாலும் 'முற்படக் கிளந்த' என்னுந் தொடருக்கு 'இதற்கு முன்னே ஆசிரியர் கூறிப்போந்த' என்று அமையப்பொருள் காண்பதே பொருத்தமாகும்.

சூத்திரம்:—2. அவற்றுள்,

நடுவணைந்திணை நடுவணதொழியப்
படுதிரைவையம் பாத்தியபண்பே.

கருத்து:—இது, மேற்குறித்த திணைஏழனுள், தமக்கென நிலஉரிமையுடையன நான்கெனக் குறிக்கின்றது.

பொருள்:—அவற்றுள் நடுவணைந்திணை = முன்னைச் சூத்திரத்துட்கூறிய ஏழுதிணைகளுள் முதலுங்கடையுமான கைக்கிளை பெருந்திணைகளை நீக்கி, நடுநின்ற முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் எனும் ஐந்திணை;

நடுவணதொழிய = தம்முள் நடுநிலைத்திணையாகிய [பாலையொழிய;

படுதிரைவையம் பாத்தியபண்பே = கடல் சூழ்ந்த [நிலத்தைப்பகுத்த இயல்பிற்று.

குறிப்பு:—இதில் ஐந்திணை - எழுவாய்; பாத்திய பண்பே-பயனிலை; 'ஒழிய' என்னும் வினையெச்சம் 'பாத்திய' எனும் பெயரெச்சங்கொண்டும், அப்பெய ரெச்சம் 'பண்பே' எனும் பெயர்கொண்டும் முடிந்தன. வையம், பாத்திய என்னும் வினைக்குச் செயப்படுபொருள். வையம் 'நானிலம்' எனப்படுதலானும், அது குறிஞ்சி முல்லை மருதம் நெய்தலென திணைக்குரிய நிலத்தியல்பு பற்றிப் பகுக்கப்படுதலானும், பாலைக்குத் தனித்துரிய நிலம் பிறிதின்மையானும், முல்லைமுதல் நெய்தலீறான நிலங்களையே அவ்வத்திணைக்களனாகப் பொருள் நூலு டையார் கொள்ளுதலானும், வையத்தை நாற்கூறாகப் படுத்த இயல்புடைத்து பாலை யொழிந்த நாலுதிணையும் என்பதை இச்சூத்திரம் விளக்கிப் போந்தது. இதனால் திணையே அகவுரிப்பொருளாய், அதற்குப் பொருந்த நிலம் பிரிவு கொண்டது என விளக்கப்பட்டது.

சூத்திரம்:—3. முதல்கருவுரிப்பொரு ளென்றமூன்றே
நுவலுங்காலை முறைசிறந்தனவே,
பாடலுட்பயின்றவை நாடுங்காலை.

கருத்து:—இது, அகப்பொருள் முதல் கரு உரி என முத்திறப்படும் மரபு கூறுகிறது.

பொருள்:—பாடலுட்பயின்றவை நாடுங்காலை = புல வர் செய்யுளில் வந்து பயிலும் வழக்குகளை ஆராயுங்கால், முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே = முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருளென வகுத்த

மூன்றுமே; நுவலுங்காலை முறைசிறந்தனவே=செய்யுளுக்குரிய புலனெறி வழக்கம் கருதுங்கால் முறையே ஒன்றினொன்று சிறந்தனவாம்.

குறிப்பு:—முறை சிறந்தன என்பதனால் முதலிற் கருவும், கருவின் உரியும், ஒன்றினொன்று முறையே மேற்சிறப்புடைத்தாமெனவும், சிறந்தன என்பதனால் சிறவாப்பிறபொருளும் உளவாமெனவும் பெறுதும். அகப்பாட்டுக்களில் உரிப்பொருளே தலையாயதென்பதும், அதற்கு முதலுங் கருவும் சிறப்புதவுந்துணையாகச் சார்ந்துவருபொருள்களா மென்பதும் வெளிப்படை. இனி, இம்மூன்றுமேயன்றி இவைபோலச் சிறவாத பிற பொருளும் உளவாதல் அகத்திணையியல் "மரபுநிலை திரியா மாட்சியவாகி, விரவும் பொருளும் விரவுமென்ப" என்னும் 45ஆம் சூத்திரத்தால் தெளியப்படும். இதில் மூன்றே என்பதில் ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாம். சிறந்தனவே என்பதிலேகாரம் இசை நிறையாகவேனும் அசை நிலையாகவேனுங் கொள்ளுக.

சூத்திரம்:—4. முதலெனப்படுவது நிலம்பொழுதிரண்டி
னியல்பெனமொழிப இயல்புணர்ந்தோரே.

கருத்து:—முன்னைச் சூத்திரங்கூறும் மூன்றனுள் முதற்பொருளினைத்தெ‌ன இச்சூத்திரம் விளக்குகிறது.

பொருள்:—முதலெனப்படுவது = முதற்பொருளென்று கூறப்படுவது; நிலம் பொழுதிரண்டினியல்பு =

நிலமும் பொழுதுமாகிய இரண்டினியல்பார்; என மொழிப இயல்புணர்ந்தோரே = என்று சொல்லுவார் பொருளிலக்கணம் உணர்ந்த புலவர்.

குறிப்பு:—இதில் ஈற்றேகாரம் அசை நிலை.

சூத்திரம்:—5. மாயோன் மேய காடுறையுலகமும்
சேயோன்மேய மைவரையுலகமும்
வேந்தன்மேய தீம்புனலுலகமும்
வருணன்மேய பெருமணலுலகமும்
முல்லைகுறிஞ்சி மருதம்நெய்தலெனச்
சொல்லியமுறையாற் சொல்லவும்படுமே.

கருத்து:—இது மேலே இரண்டாஞ் சூத்திரத்துட் கூறியாங்கு, நானிலம் முறையே நான்குதிணைக்கு உரிமை பெறு முறை கூறி, நிலமுதற்பொருள் திணையுரிப் பொருளொடியையுமாறு விளக்குகிறது.

பொருள்:—மாயோன்மேய காடுறையுலகமும் = கருநிறக்கடவுள் உறைவிடமாகிய நிரைமேயும் காட்டுநிலப் பகுதியும்; சேயோன்மேய மைவரையுலகமும் = செவ்வேளுறையும் மஞ்சுதவழும் மலைநிலப்பகுதியும்; வேந்தன்மேய தீம்புனலுலகமும் = இந்திரனுக் கிருப்பிடமாகிய இனிய புனல்நிறை நிலப்பகுதியும்; வருணன்மேய பெருமணலுலகமும் = கடல்கெழுகடவுளாகிய வருணன் விரும்பும் அகன்ற மணல்நிலப்பகுதியும்; முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே = முறையே முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற திணைவரிசையாற் சொல்லவும்படும்.

குறிப்பு:—சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே என்பதனால், இந்த நாற்றிணைக்குரிய நானிலங்களும் ஈண்டுச்சொல்லாத வேறுமுறையாலும் கூறப்பெறும் என்பது பெறப்படும். இதில் நானிலப்பகுதியும் அவற்றிற்குரிய திணைப்பெயரும் நிரனிரையால் கூறப்பெற்றன. ஈண்டுக்கூறப்பெற்ற மாயோனுஞ் சேயோனும், கருநிறக் கடவுளுஞ் செவ்வேளுமாகத் தொன்றுதொட்டுத் தமிழர் தொழும் கடவுளராவர். கருநிறத்தைப் பழிப்பதன்றிப் பாராட்டுதல் தொல்லாரியர் வழக்கன்று; தமிழிலோ எழில் பாராட்டி "மாயோன்" எனவும் "மாயோயே" எனவும் வரும் பழம்பாட்டுக்களின் தொடர்களும் குறிப்புக்களும் இங்குச் சிந்திக்கத்தக்கனவாம். இனி, இந்திரனும் வருணனும் ஆரியர் வழிபடுங் கடவுளராய்க் கருதப்பெறினும், அறப்பழங்காலத்தே அவர் திராவிடர் வழிபட்ட தெய்வங்களாகவும், பிறகு அவரிடம் ஆரியர் வாங்கித் தம் வழிபடுகடவுளராக்கிக் கொண்டனரெனவும் சில மேனாட்டுப் புலவரின் ஆராச்சிக்கட்டுரைகளால் அறிகின்றோம். உண்மையெதுவாயினும் பண்டைக் காலமுதல் இக்கடவுளர் பெயரும் வழிபாடும் தமிழகம் அறிந்ததென்பது தெளியப்படும்.

இச்சூத்திரத்தானும் முன்னைய சூத்திரத்தானும் முதற்பொருளின் முதற்பிரிவான நிலத்தியல்பும் திணைத் தொடர்பும் கூறப்பெற்றன. இனிவருஞ் சூத்திரங்களால் அதன் இரண்டாம் பிரிவான காலவியல்பும் பாகுபாடுகளும் கூறப்படும்.

சூத்திரம்:—6. காருமாலையு முல்லை; குறிஞ்சி
கூதிர்யாம மென்மனார் புலவர்.

கருத்து:—இதுமுதல் ௰௧ வரை ஆறு சூத்திரங்கள் காலமுதற்பொருள் திணையுரிப்பொருளுக்கு உரிமை கொள்ளுமாறு கூறுகிறது.

பொருள்:—காரும் மாலையும் முல்லை=கார்காலமாகிய பெரும்பொழுதும், மாலைப்பொருளாகிய சிறுபொழுதும் முல்லைத்திணைக்குச் சிறந்தன; குறிஞ்சி கூதிர் யாமம்= கூதிரென்னும் பின்பெயற் காலமாகிய பெரும்பொழுதும், நள்ளிரவாகிய யாமமென்னுஞ் சிறுபொழுதும் குறிஞ்சித் திணைக்குச்சிறந்தன; என்மனார் புலவர்=என்று கூறுவர் புலவர்.

குறிப்பு:—ஓராண்டு - இளவேனில், முதிர்வேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என இவ்விரண்டு திங்கள் கொண்ட பருவம் அல்லது பெரும்பொழுது ஆறாகப் பகுக்கப்படும். இதில் கார்காலம் முன்பெயற்காலமான ஆவணியும் புரட்டசியும் எனத் திங்களிரண்டு கொண்ட பெரும் பொழுதாகும்.

பகல்—விடியல் அல்லது காலை, நண்பகல், எற்பாடு எனவும், இரவு—மாலை, யாமம், வைகறை யெனவும், பகல் மூன்று இரவு மூன்றாக ஆறு சிறுபொழுதுகள் கூடியது ஒரு நாளாகும். ஈண்டு 'யாமம்' என்பது நள்ளிரவு (இரவின் நடுக்கூறு) குறிக்கும் தமிழ்ச்சொல்; ஏழரை நாழிகைகொண்ட நாளின் எட்டிலொரு பகுதி சுட்டும்

ஜாமம், வடசொல். இவற்றை ஒன்றெனக்கருதி மயங்குதல் தவறு.

காரு மாலையும் முல்லைக்குச் சிறத்தலுக்குச் செய்யுள்:—

"முகைமுற் றினவே முல்லை, முல்லையொடு தகைமுற்றினவே தண்கார், வியன்புலம் வாலிழை, நெகிழ்த்தோர் வாரார், மாலைவந்தன்றென் மாணலங்குறித்தே." (குறுந்-188) இதில், குறித்த பருவத்தில் வாராத்தலைவன் பிரிவால் வருந்தி இருக்கும் தலைவிக்குக் காரும் மாலையும் துன்பம் தருதல் கூறுதலால், முல்லைக்குரிய பருவமும் பொழுதும் ஒருங்குற்ற பெற்றி யறிக.

"பழ மழை கலித்த..................
......................................
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசிற் றோழி, பொருட்பிரிந்தோரே"
(குறுந்-220)

என்பது மிதுவே.

இனிக் கூதிரும் யாமமும் குறிஞ்சிக் காதற்குச் செய்யுள் வருமாறு:—

"சிறைமணி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறரும் கேட்குந ருளர்கொல்? உறைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
தான் நுளம் புலம்புதொ றுளம்பும்
நானவில் கொடுமணி நல்கூர் குரலே". (குறுந்-86)

இதில், கூதிரும் யாமமும் கூடுதலாகிய காலம் குறிஞ்சிக் குரிததெனல் காண்க. "காம மொழிவதாயினும்" எனும் கபிலர் குறும்பாட்டில் (42) யாமமும், "யாது செய்வாங்கொல் தோழி" எனும் நன்னாகையார் குறும்பாட்டில் (197) கூதிரும் குறிஞ்சிக்குரிமை குறிக்கப்படுதலுமறிக.

சூத்திரம்:—7. பனியெதிர் பருவமு முரித்தெனமொழிப.

கருத்து:—இதுமேலைச்சூத்திரத்திற் கோர்புறனடை; முன் பனியும் குறிஞ்சிக் குறித்தாமெனக் கூறுகிறது.

பொருள்:—பனியெதிர் பருவமும்=முன்பனிக் காலமும், உரித்தென மொழிப=குறிஞ்சித் திணைக்குரிய தெனக் கூறுவர் (புலவர்).

குறிப்பு:—பனி எதிர்பருவம் எனவே, மாலையிற் பனி தோன்றும் முன்பனிக் காலமாயிற்று. முன்பனிக்காலமாவது மார்கழி தை எனுந்திங்களிரண்டு கொண்ட பெரும் பொழுதாம். 'பருவமும்' என்பதிலும்மை குறிஞ்சித்திணைக்குக் கூதிரேயன்றி இப்பருவமும் உரியதாம் எனப்பொருள்தருதலால், இறந்ததுதழீஇய எச்சவும்மை. 'மொழிப' என்பதனால் அதற்குரிய எழுவாயான புலவர் என்பது அவாய் நிலையாற் கொள்ளப்படும். முன்பனிப்பருவம், கூடற்குரியது, பிரிவரியது, என்பதற்குச் செய்யுள்:—

"உள்ளார் கொல்லோ, தோழி!
மழைகழி விசும்பின் மாறி ஞாயிறு
விழித்திமைப் பதுபோல் விளங்குபு மறைய
எல்லை போகிய பொழுதின் எல்லுறப்
பனிக்கால் கொண்ட பையுள் யாமத்துப்
பல்லிதழுண்கண் கலுழ
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே".

எனும் நற்றிணை (241-ம்) பாட்டில், பின்பெயலாகிய கூதிர்கழிந்தபின் முன்பனிப்பருவ யாமப்பொழுது குறிஞ்சியாகிய கூடற்குரிமையும் பிரிவருமையும் ஆதலறிக. "கொண்டலாற்றி" எனும் நற்றிணை (89-ம்) பாட்டில்,

"மாமழை அழிதுளி கழிப்பிய
வழிபெயற் கடைநாள் இரும்பனிப்பருவத்து,
இன்னும் வருமே தோழி, வாரா
வன்கணாளரோ டியைந்த
புன்கண் மாலையும் புலம்புமுந் துறுத்தே".

என்பது மது. இதில் வழிபெயற் கடைநாள் இரும் பனிப்பருவம் எனவே, பின்பெயற் கூதிர்கழிந்த முன் பனி எனத் தெளிக்கப்பட்டது.

சூத்திரம்:—8 வைகுறு விடியல் மருதம்; எற்பாடு
நெய்தலாதன் மெய்பெறத் தோன்றும்.

கருத்து:—இது, மருதம் நெயதல் திணைகளுக்குப் பருவமும் பொழுதும் குறிக்கின்றது.

பொருள்:—வைகுறு விடியல் மருதம் = பொழுது புலராத இரவினிறுதிப் பகுதியான வைகறையென்னும் சிறுபொழுதும், பொழுதுபுலர்ந்து எல்லெழுங் காலையான விடியலென்னும் சிறுபொழுதும், மருதத்திணைக்குச் சிறந்தனவாகும்; எற்பாடு நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும் = சுடர்படும் பகற்கால மூன்றாம் பகுதியாகிய சிறுபொழுது நெய்தற்றிணைக்கு உரியபொழுதாதல் பொருள்பெறத் தோன்றுவதாகும்.

குறிப்பு:—இதில், "வைகுறிள வேனில் மருதம்" எனும் பாடம் மருதத்திணைக்கும் பொழுதும் பருவமும் வழுவாதுரைக்கும் சிறப்புடைத்து இனி, எல்படும் பொழுதை எற்பாடென்பது தமிழ் வழக்கு. இன்றும் தமிழ் வழக்கழியா மேல் கடற்கரையில் படுஞாயிற்றின் திசையைப் 'படுஞாறு' எனவழங்குதல் உலகறிந்தசெய்தி. இதில் வைகுறு என்பது வைகறையின் மரூஉ. "வைகறை விடியல்" என்றே இளம்பூரண அடிகள் பாடங்கொண்டிருப்பதும் இதனை வலியுறுத்தும். "வைகுறு விடியல்" என்பதில் எண்ணும்மை சூத்திரச்செறிவுநோக்கித்தொக்கது. இனி, 'வைகுறு விடியல்' என்ற தொடரை வைகுறுதலாகிய விடியல் எனக்கொண்டு பொழுதுபுலர்தற்கு முற்பட்ட இறுதியிரவுக்காலத்தையே குறிக்குமென்றும், எற்பாடு என்பது சுடரொழுந்து வெயிலெறிக்கும் காலைப் பொழுதைக் குறிக்குமென்றும் ஆசிரியர் சிவஞான முனிவர் தம் முதற்சூத்திரவிருத்தியில் கூறுகின்றார். வைகறையும் விடியலும் ஒருபொருட் கிளவிகள் என்னுமவர்

கொள்கை பண்டைத் தமிழ்ப்புலவர்க் குடன்பா டன்றென்பது பழைய தொகைநூல்களில் பலவிடங்களிலும் பயின்றுவரும் குறிப்புக்களால் தெளியப்படும்.

வைகறையும் விடியலும் முன்னும் பின்னுமாக வரும் இருவேறு சிறுபொழுதுகளே யென்பது மதுரைக்காஞ்சி யடிகளா லினிதுவிளங்கும்.

"........................ இல்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிடி விடியல் எய்த (662, 663, 664)

என்ற அடிகளில் "இருள் மாய்ந்து கதிர்விரியும்", காலையை விடியலென்றும், பிறகு "இரவுத்தலைப்பெயரும் ஏமவைகறை" என்று அதேபாட்டில் 686-ஆம் வரியில் வைகறையை விடியலினின்றும் வேறுபிரித்து அது இரவுத்தலைப்பெயரும் ஏமஞ்செய் காலமென்றும், மாங்குடிமருதனர் கூறுதலால் அது வலிபெறுவதாகும். அன்றியும் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனர் தாம்பாடிய மலைபடுகடாத்தில்,

"வேய்ப்பயில் விளையுட் டேக்கட் டேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்ற அனந்தல் தீர" எனும்

171, 172, 173 வது அடிகளில் வைகறைப் பொழுதைக் கூறி, பிறகு அடி 195, 196ல்

......................." நள்ளிருளலரி
விரிந்த விடியல் வைகினிர் கழிமின் " என்று

இருள் புலர்ந்து பகல் மலர்ந்து கதிர்விரிந்த விடியற் காலத்தை வேறுபிரித்தோதினர். இஃது, இவ்விருபொழுதையும் இவ்வாறே வெவ்வேறாக மதுரைக் காஞ்சியில் விளக்கிய மாங்குடி மருதனார் கொள்கையே அடிப்பட்ட தமிழ் வழக்கென்பதனை வெள்ளிடை மலைபோல் விளக்குவதாகும். ஈண்டுப்பெருங்கௌசிகனார் " நறவுமகிழ்ந்து வைகறைக் காலேத்தே அனந்தல் தீர, கடமான் கொழுங்குறையும்........பயினிணைப் பிளவை.........தடியொடு விரை இ.........குறமகளாக்கிய வாலவிழ்வல்சி அகமலியு வகை யார்வமொடளை இ......மனைதொறும் பெறுகுவிர்" என்று முதற் கூறி, பிறகு அவ்வாறுண்ட நீவிர் விடியல் வரை வைகி விடிந்தபிறகு கழிவீராக; ஏனெனில், நீர் போகும் ஆறு,..................." பாலவற்போழ்விற்

கரந்துபாம் பொடுங்கும் பயம்புமாருளவே", (அதனால்)
" குறிக்கொண்டு......................நோக்கி
வறிதுநெறியொரீஇ வலஞ்செயாக் கழிமின் ", எனக்

கூத்தருக்கு வைகறைப்பொழுதில் வழிக்கொண்டு பாம் பொடுங்கும் பள்ளங்களில் வீழ்ந்திடர்ப்படாமல் தங்கிக் கதிர்விரிந்த விடியற்காலத்தே புறப்படுமாறு கூறுதலால், இவ்விரு காலமும் இருவேறு சிறுபொழுதுகளே என்பது தெள்ளத்தெளியக்கிடப்பதாகும். இன்னும் மலைபடுகடாத்திலேயே

"வான்கண் விரிந்த விடியலேற் றெழுந்து" என 257 வது வரியிலும்,

> "நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
> பனிசே ணீங்க வினிதுடன் றுஞ்சிப்
> புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்"

என 446 முதல் 448 வது வரிகளிலும் வைகறையின் வேறுபட்ட விடியற்காலத்தை ஐயமற விளக்கியிருப்பது பாராட்டிச் சிந்திக்கத்தக்கது. இனி, அகநானூற்றில் 37, 41-ஆம் பாட்டுக்களில்

"வைகுபுலர் விடியல் வைபெயர்த் தாட்டி" எனவும்
"வைகுபுலர் விடியல் மைபுலம் பரப்ப" எனவும்
முறையே இரவுபுலர்ந்து கதிர்விரியும் விடியற்காலம் இனிது விளக்கப்பெற்றும், 42 வது பாட்டில் "பெரும் பெயல் பொழிந்த ஏமவைகறை" எனவும், 308 வது பாட்டில்..................." கங்குல்.............................................ஆலி யழிதுளி பொழிந்த வைகறை" என வைகறை விளக்கப்பெற்று மிருக்கிறது. இன்னும், இரவிருள் கழிந்து பகலொளியெழுந்து படரும் புலரியே 'விடியல்' என்பதும், இருளற வொழியாத இரவினிறுதியே 'வைகறை' என்பதும் பல பழம் பாட்டுக்களால் விளக்கமாகும். "பெரும்புலர் விடியல்" (குறுந். 224.) (நற். 60), "தண்புலர் விடியல்" (60), "வைகுபுலர் விடியல்" (12) எனப் பலவிடத்தும் புலரும்பொழுதே விடியல் என உரைக்கப்படுதலால், இரவிருள் புலர்ந்து

பகலொளியலர்ந்த நாட் காலையே விடியல் என விளங்குகிறது. புலரி, வைகல், விடியல், என்பன நாட்காலை எனும் ஒரு பொருள் குறிக்கும் பல பெயர்களாகப் பயிலுதலுமிதனை வலியுறுத்தும். இனி, வைகறை இருள் கழியாத இரவினிறுதியென்பது விளங்க, "வைகுறு மீனின் இனையத்தோன்றி" (நற். 48.) என மீனொளி மறையாத இருள் தங்கும் வான்சிறப்புடைய வைகறை என வருதலானுமறிக.

"குக்கூ என்றது கோழி, அதனெதிர்
....................................
தோள் தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றாலெனவே"

(குறுந். 157) என்பதில், வைகறை தலைக்கோழி கூவும் விடியாப்பொழுதென விளக்கப்படுதலும் காண்க. சிவஞான முனிவர் எடுத்துக்காட்டும் முருகாற்றுப்படையடிகளும், அவர் கொள்ளும் பொருளில், வைகறையும் விடியலுமொன்றெனற்குமாறாக அவை இருவேறு பொழுதுகளெனவே விளக்குகின்றன.

"முட்டாட் டாமரைத் துஞ்சி, வைகறை
கட்கமழ் நெய்த லூதி, எற்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்".
(முருகு. வரி 73-76)

என்பதவ்வடிகள். இதில், வண்டினம் இரவில் தாமரையில் தூங்கி, வைகறையில் நெய்தல்மலரூதி, பிறகு ஞாயி

றெழும் விடியலில் சுனைப்பூக்களி லொலிக்கும் எனக்கூறி, இரவு, வைகறை, விடியல் என மூன்றும் மூவேறு பொழுதென தெளிக்கப்படுகின்றது. எனில், இதில் "எல்பட" என்பதற்கு "ஞாயிறு எழ" எனப்பொருந்தாப் பொருள் கூறுவதினும், "ஞாயிறடையும் பகலிறுதிப் பொழுதில்" எனக் கொள்ளுவதே சொல்லும் மரபும் சுட்டும் நல்ல கருத்தாகும்; எனவே விடியலுக்கு முன் வைகறையில் விழித்தெழும் வண்டினம் நெய்தலூதி, மாலைக்குமுன் பகல் மாய்ந்து சுடர்படும் எற்பாட்டில் சுனைமலர்களிலொலிக்கும் என்பதே இவ்வடிகளுக்குநேரிய செய்பொருளாகும். இனி, வைகறை விடியல் எனுமிரு சிறுபொழுதும் ஒழிய எற்பாடு இவற்றின் வேறாய பகலிறுதிப்பொழுதென்பது,

"பகன்மாயந்திப் படு சுடரமையம்" என அகம் 48-ஆம் பாட்டிலும் தெளிக்கப்படுகிறது. இன்னும்,

"படுசுட ரடைந்த பகுவாய் நெடுவரை
முரம்புசேர் சிறுகுடிப் பரந்தமாலை" (நற். 33)

எனும் இளவேட்டனர் பாட்டும், இரவின் முதற்பொழுதான மாலையை எற்பாட்டின் பிற்பொழுதாகக் கூறுதலும், பகலிறுதிப்பொழுதைப் படுசுடர் எனச் சுட்டுதலும் காண்க. "நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுக,—கல் சேர் மண்டிலம் சிவந்துநிலம் தணிய" எனும் ஔவை நற்றிணை (187)ம் பாட்டுமதுவே கூறுகிறது. "ஒன்றுது மென்ற தொன்றுபடு நட்பில்" (நற். 109) எனும் பெரும்பதுமனர் நற்றிணைப் பாட்டிலும் "உலமரக் கழியுமிப்

பகல்மடி பொழுதே" என வருதலறிக. இன்னும் இரவின் முதற்பொழுதா மாலைக்கு முந்திய பகலிறுதிப் பகுதியை "கல்சுடர் சேரும் கதிர்மாய் மாலை" (321) என மள்ளனாரும் கூறுதல் காண்க. இனைய பல பழம் புலவர் பாட்டுக்களால் பொழுது புலர்ந்து கதிர் விரியும் இள வெயிற் காலையாய பகற்பொழுதின் முதற்பகுதியே விடிய லென்றும், இருள் புலருமுன்னுள்ள இரவின் இறுதிப்பகுதி நேரமே வைகறையென்றும், சுடர்படும் பகலிறுதிக்காலமே எற்பாடென்றும் மயக்கத்திற் கிடனின்றித் தெளியக்கிடக் கின்றது.

இன்னும், "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை யென முறைசெய்தற்கேது, மாலையாமம், வைகறை, காலை, நண்பகல் என்னும் சிறுபொழுதின் கிடக்கைமுறையே யன்றி வேறின்மையானும், ஏனைத்திணைகட்குச் சிறுபொழுது ஒரோவொன்றேயாகலின் மருதமாத்திரைக்கிரண்டு கோடல் பொருந்தாமையானும், அஃதுரையன்றென மறுக்க" என்னும் சிவஞானமுனிவர் கூற்றும் பொருந் தாமையறிக. சிறுபொழுது ஐந்து மாலைமுதல் நண்பகல் வரையெண்ணி நிறுத்தப்படின், ஒருநாளுலப்புறுமல் பிற் பகல் பெயரும் பயனுமின்றி வீணே விடப்படுமாகலின், ஈண்டு எண்ணப்பெறாத பிற்பகலாகிய சிறுபொழுதொன் றுண்மையும், அதுவே எற்பாடாவதும் விளக்கமாகும்.

அன்றியும், அன்பினைந்திணைமுறை சிறுபொழுதின் கிடக்கை முறைபற்றியதேயாகும் என்பதற்கு முனிவர வர்களின் கூற்றைத் தவிரப் பிறிதாதாரமின்மையானும்,

பெரும்பொழுதாறினை ஐந்து திணைக்கு ஒரோவொன்றாய்க் கொடுத்தமையாததாலும், சிறுபொழுதுகளுமவ்வாறமைதல் வேண்டா. குறிஞ்சிக்குக் கூதிரொடு முன்பனியும், பாலைக்கு வேனிலொடு பின்பனியும் ஆக இவ்விரண்டு பருவந்தந்துவைத்தும், மருதத்திற்கும் நெய்தலுக்கும் பெரும்பொழுதெதுவும் பிரித்துரிமை செய்யாமலும் சூத்திரிக்கும் ஆசிரியர் முறையிற் பொருத்தம் காணும் முனிவரவர்கள் மருதத்திணை யொன்றற்குச் சிறுபொழுதிரண்டமைத்தலில் பொருந்தாப் பெருந்தவறு காணுதற்குரிய நியாயத்தை விளக்கினார்களுமில்லை. இனி, பிற்றைய நாற்கவிராஜ நம்பியார் சிறுபொழுதைந்தென்று கூறுதலால், பண்டைப்புலவர் பாட்டுக்களைப் பொய்யாக்கித் தொல்காப்பியர் சூத்திரங்களுக்கும் புதுப்பொருள் காண்பது உரையறமாகாது. மேலும் வைகறையும் விடியலும் மருதத்திணையான ஊடலுக்கு உரித்தமாறும், மாலையையும் யாமத்தையும் பரத்தையர் வீட்டிற் கழித்த தலைவன் தன்மாட்டு மீட்டுவரும் வைகறை விடியற்காலங்களில் தலைவி அவனோடூடுதல் இயல்பாவதும், பிறகு பொழுதேறி விருந்தினர்க்கு வேளாண்மை செய்தலால் ஊடல் தீர்தல் முறையென்பதும், மருதக்கலி நெய்தக்கலி முதலிய பண்டைய அகத்துறைப் பாட்டுக்களால் இனிது விளங்கும்.

"ஊடுதல் காமத்திற்கின்பம்; அதற்கின்பம்
கூடி முயங்கப்பெறின்" எனும் குறளால்

ஊடுமிடத்தெல்லாம் கூடுதலின்றியமையாமை பெறுதற்கில்லை. 'கூடிமுயங்கப்பெறின்' அதற்கின்பம் எனவள்ளுவர் விதந்து கூறுதலாலேயே, ஊடுந்தொறும் உடனே

கூடல் ஒருதலையாகாது, கூடப்பெறாப் பொழுதுகளும் உளவாதல் இயல்பென்பதூ பெறப்படும். அன்றியும், ஊடல், அதன்பின் கூடநேர்ந்துழி, அக்கூட்டத்திற்கு இன்பம் மிகுக்கும் என்பது இக்குறட்பொருள் ஆவ தன்றி, உடனே கூட நேராப் பொழுதெல்லாம் ஊடல் நிகழாது என்பது கருத்தாகாமை வெளிப்படை. இனி,

> " காலையும் பகலும் கையறு மாலையும்
> ஊர்துஞ்சு யாமமும் விடியலு மென்றிப்
> பொழுதிடை தெரியிற் பொய்யே காமம் "

எனும் அள்ளூர் நன்முல்லையாரின் குறுந்தொகைப் பாட்டில் காலையும் விடியலும் வேறாக்கி விரிகதிர் விடியலைக் காலை யென்றபின் வைகறையை விடியலென்று கூறிய தனால், வைகறையின் வேறுபட்ட விரிகதிர் விடியலும் பகலிறுதியின் எற்பாடும் உண்டெனப் பண்டைப் புலவரின் பல பாட்டுக்கள் கூறுவதை மறுக்கவொண்ணாது. அதுவேபோல் அப்பாட்டில் எற்பாடு கூறப்பெறாமை கொண்டு 'பகல் மாயந்திப்படு சுடர்ப்' பொழுதான எற்பாடு இல்லையெனலும் இயலாது. கூறப்பட்டதொன்று உண்டெனலாமன்றிக் கூறப்பெறாமைகொண்டு உள்ள தொன்றை இல்லையெனத் துணிதற்கு அளவைநூ விடந் தராது. மேலும், இப்பாட்டினடிகளில் சொற்றொறும் வருகின்ற உம்மை எண்ணும்மையேயாகும். 'என்று இப்பொழுதைந்தும்' என முற்றும்மை பெறாமையானும் சிறுபொழுதைந்தேயாம் என்னுமுடிவிற்கு இக்குறுந் தொகைப் பாட்டடிகள் இடந்தராவாம்.

எவ்வாற்றானும் பண்டைச்சான்றோர் பாட்டுப் பலவற்றுள்ளும் வைகறையும் விடியலும் இருவேறு சிறுபொழுதுகளாமென விதந்து கூறப்பெற்றிருத்தலானும், இச்சூத்திரத்தில் வைகறையையும் விடியலையும் கூறி அவற்றின் வேறாய எற்பாடும் கூறப்பெறுதலானும், இரவுக்குச் சிறுபொழுது மூன்றாவதுபோல் பகலுக்கும் மூவேறு சிறுபொழுது உண்மையானும், ஈண்டு வைகுறு, விடியல், எற்பாடு என்பனமூன்றும் முறையே கங்குலிறுதிப்பொழுதான வைகறையும், வெயிலொடு விரிகதிர் விடியலான பகல் முதற் சிறுபொழுதாகிய காலையும் மருதத்துக்கும், பகலிறுதியில் சுடர்படும் பொழுதான எற்பாடு நெய்தலுக்கும் சிறப்புறவருமெனும் உரையே உண்மையுரையாமெனத் தெளிதலெளிதாம். அதனால் நச்சினார்க்கினியரொடு இளம்பூரண அடிகளும் இதுவே இச்சூத்திரப் பொருளாகக் கூறுதல் அமைவுடைத்தாகும்.

1. விடியல் அல்லது காலை மருதப்பொழுதாதற்குச் செய்யுள் :—

“காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதென
தெறுவதம்ம இத்திணைப் பிறத்தல்லே” (குறுந்.45)

“நிரைதார் மார்பன் நெருநலொருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்

.......................................

பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவ என்றிழிந்தனன்......

.......................................

மகனொடு தானேபுகு தந்தோனே. யானது
தடுத்தன ளாகுதல் நாணி இடித்திவற்
கலக்கினன் போலுமிக் கொடியோ னெனச்சென்
றலைக்குங் கோலொடு குறுக, தலைக்கொண்டு

.......................................

அழுங்கின னல்லனோ அயர்ந்ததன் மணனே"
(அகம். 66.)

இதில், கூடாமலே தலைவி காலையில் ஊடியதிறம் கூறியதறிக.

"சேற்றுநிலை முனைஇய" எனும் அகப்பாட்டும் (46) "உணர்குவ னல்லேன், உரையல் நின் மாயம்" எனும் (226-ஆம்) அகப்பாட்டுமதுவேயாம்.

2. வைகறை மருதப் பொழுதாதல்,

"பொதுக்கொண்ட கௌவையிற் பூவனை பொலிந்தநின்
வதுவையுங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை".

(கலி. 66) எனவரும் கலிப்பாட்டடியிற் காண்க.

3. இனி எற்பாடு நெய்தற்கு வருதல்,

"நெடுவெண்மார்பி லாரம்போல்" எனவரும் (120) அகப்பாட்டாலறிக.

சூத்திரம்:—9. நடுவுநிலைத் திணையே நண்பகலவேனிலொடு
முடிவுநிலைமருங்கின் முன்னியநெறித்தே.

கருத்து:—இது பாலைக்குப் பருவமும் பொழுதும் கூறுகிறது.

பொருள்:—நடுவுநிலைத்திணையே = அன்பினைந்திணையுள் நடுநின்ற பாலைத்திணை; நண்பகல் வேனிலொடு முடிவுநிலை மருங்கின் = நடுப்பகல் முதிர்வேனிலொடு கூடப்பொருந்துமிடத்து; முன்னிய நெறித்து = அது பிரிவுக்குச் சிறந்ததாகக் கருதும் முறைமையுடைத்தாகும்.

குறிப்பு:—ஏகாரம், முன்னது இசை நிறை, பின்னது அசை.

நண்பகலாகிய சிறுபொழுதும் முதிர்வேனிலாகிய பெரும்பொழுதும் பாலைத்திணையாகிய பிரிவிற்குத் தனித்தனியுரிமை கொள்ளுதலேயுமன்றி, இவை தம்முட் கூடிய நிலையில், முதிர்வேனிலின் நண்பகல் பிரிவுக்கு மிகவும் சிறப்புரிமையுங் கொள்ளுமென்பது இச்சூத்திரத்தில் விளக்கப்படுகிறது. முதிர்வேனிற்காலம் ஆனியும் ஆடியுமாகிய திங்களிரண்டுமாம். இதில், வேனிலென்பது முதிர்வேனிற் பருவத்தையே குறிக்கும்; அதுவே பிரிவுக்குரித்தாகலின். முதிர்வேனிற் பிரிந்தார் கார்காலத்தில் கூடுவர். இளவேனில் கூடுதலுக்கே உரிய பருவமாகும். பின்பனிக்காலத்தில் பிரிந்தார் இளவேனிற் கூடுவர். முதிர்வேனில் பிரிவுக்குரித்தாதற்குச் செய்யுள்:—

"உறைதுறந் திருந்த புறவிற் றனாது
செங்கதிர்ச் செல்வன் தெறுதலில், மண்பக,
உலகு மிகவருந்தி அயாவுறு காலைச்
சென்றன ராயினும் நன்றுசெய் தனரெனச்
சொல்லித் தெளிப்பவும் தெளிதல் செல்லாய்.
செங்கோல் வாளிக் கொடுவி லாடவர்
வம்ப மாக்க ளுயிர்த்திறம் பெயர்த்தென
வெங்கடற் றடைமுதற் படுமுறை தழீஇ
உறுபசிக் குறுநரி குறுகல் செல்லாது
மாறுபுறக் கொடுக்கும் அத்தம்
ஊறில ராகுத லுள்ளா மாறே". (நற். 164)

சூத்திரம்:—10. பின்பனி தானு முரித்தெனமொழிப.

கருத்து:—இது, பிரிவுக்குப் பின்பனியும் உரித்தாதல் கூறுகிறது.

பொருள்:—(முதிர்வேனிலேயு மன்றி) பின்பனிக்காலமும் பிரிவுசுட்டும் பாலைத்திணைக் குரித்தாகுமென்று கூறுவர் (புலவர்).

குறிப்பு:—பின்பனிப்பருவம் மாசியும் பங்குனியுமாகிய திங்களிரண்டும் கொண்டதாகும். பின்பனி பிரிவுப்பருவமாதல், பின்வரும் ஆலத்தூர்கிழாரின் குறும்பாட்டிற் காண்க.

"அம்ம, வாழி, தோழி! முன்னின்று
'பனிக்கடுங் குரையம், செல்லாதீ'மெனச்
சொல்லின மாயிற் செல்வர் கொல்லோ?

ஆற்றயலிருந்த இருந்தோட்டஞ்சிறை
நெடுங்காற் கணந்துள் ஆளறி வுறீஇ
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கானம் நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே".
(குறுந். 350)

பின்பனிப் பிரிந்தோர் இளவேனிற் கூடுவதற்குச் செய்யுள் :—

"கோங்கங் குவிமுகை யவிழ ஈங்கை
நற்றளிர் நயவர நுடங்கு
முற்று வேனின் முன்னிவந் தோரே" (நற். 86.)

"........புணர்மினோ என இணர்மிசைச்
செங்க ணிருங்குயி லெதிர்குரல் பயிற்று
மின்ப வேனிலும் வந்தன்று". (நற். 224.)

என்னும் பெருங்கடுங்கோலின் நற்றிணைப் பாட்டடிகளும், பிரிந்த காதலர் திரும்பக்கூடும் "காமர் வேனின் மன் இது" என்னு மகப்பாட்டடியும்,

"ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னாணை
கூடுமி னென்று குயில்சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாண் மென்பூந் திருமுகத்
கானற்பா ணிக்கலந்தாய் காண்". [தைக்

எனவரும் சிலப்பதிகார வெண்பாவும், பின்பனிக்காலம் பிரிவுக்கும், இளவேனில் கூடலுக்குமே ஏற்புடைத்தென்பதை வலியுறுத்தல் காண்க.

சூத்திரம்:—11.

இருவகைப்பிரிவும் நிலைபெறத்தோன்றினும்
உரியதாகு மென்மனார்புலவர்.

கருத்து:— இது முதிர்வேனிலிற் பிரிந்தார் கார்காலத்து மீண்டுவந்து கூடலும், பின்பனிக்காலம் பிரிந்தார் இளவேனிலில் கூடலும் மரபென்பதை விளக்குகிறது.

பொருள்:—இருவகைப்பிரிவும்=முன்னையிரு சூத்திரங்களிலும் கூறப்பெற்ற வேனிற்பிரிவும், பின்பனிப்பிரிவும்; நிலைபெறத்தோன்றினும் = பிரிதனிமித்தங்களாக அமையாது, பிரிந்துநின்ற பாலையாகவே உருப்படினும்; உரியதாகும் என்மனார் புலவர்=அது பாலைக்குரியதே யாகும் என்று கூறுவர் புலவர்.

குறிப்பு:—இதில் இருவகைப் பிரிவென்பதற்கு உரையாசிரிய ரிருவரும் இருவேறுரைகள் தருவாராவர். தொல்காப்பியர் தம் இலக்கண நூலில் யாண்டும் தாம் நுதலும் பொருளை ஐயமற வரையறுத்து விளக்குவதைக் கடனாகக்கொண்டொழுகும் பான்மை பாராட்டத்தக்கது. உரைகாரர் கூறும் பிரிவுவகைகளை அவர் கருதினராயின், அவற்றை இங்கு விளக்காமல் இருவகைப் பிரிவெனப் பொதுவிற்கூறி வேண்டுவோர் வேண்டியாங்கு மாறிப் பொருள் கொள்ளுமாறு வைக்கமாட்டார். தானே வகைகளை விளக்காது தொகையைமட்டும் கூறுவது இலக்கண நூலார் மரபாகாது அதனால் ஈண்டு 'இருவகைப்பிரிவு' என்னுந் தொடர் சுட்டும் வகையிரண்டும், இதனொடு

தொடர்புபடத் தொல்காப்பியர் தாமே கூறியவாதல் வேண்டும். முதிர்வேனிற்பிரிவை முன் ஒன்பதாஞ் சூத்திரத்திலும், பின்பனியிலும் பிரிவுண்டென்பதைப் பத்தாஞ் சூத்திரத்திலும் கூறியமைத்தாராதலின், இவ்விரு வகைப்பிரிவு என இச்சூத்திரத்தில் அவற்றைத் தொகுத்துச் சுட்டினரென்பதே பொருந்துவதாகும். காலிற்பிரிவும் கலத்திற் பிரிவுமென நச்சினார்க்கினியர் கூறுவதே தொல்காப்பியர் கருத்தென்பது அவர் சூத்திரங்களில் யாண்டும் சுட்டப்பெறாமையாலும் அஃது இங்கு கருத்தன்மையறிக.

இனி, இளம்பூரணர் கொள்கையும் அமைவுடைத்தன்று. "தலைமகளைப் பிரிதலும், அவளையுடன் கொண்டு தமர்வரைப் பிரிதலும்" என்று பிரிவிருவகைத்தாமென்பதிவர் கூற்று. இது தொல்காப்பியர் நூலில் யாண்டும் ஆதரவுபெறாததோடு, தலைமகன் தலைமகளைக்கொண்டு தலைக்கழிதலையும் பாலையென்று பொருளோடு பொருந்தாப்பெயரிடும் இவர் பிழைக்கு தொல்காப்பியரை யாட்படுத்துவதுமாகும். பிரிவும்,புணர்தலேபோல்,தலைமகன் தலைமகள் தம்முளாவதோர் ஒழுக்கமேயாதல் வேண்டும். கொண்டு தலைக்கழிதலில் இவ்விருவரும் தலைக்கூடித் தம்முட்பிரியாமல் ஒருங்கு செல்வராதலால், அஃதவர் காதற்றிணையில் பாலையாமாறில்லை. அவர் கூடியிருக்கவும், தலைவி தலைவனுடன் செல்லும்பொருட்டுத் தன்தமரைப்பிரிந்து செல்லல் பாலையெனில், தலைவியைக் காணவருந் தலைவன் தன் தமரையும் பாங்கரையும் பிரிந்துவரலும் பாலை

யாதல் வேண்டும். இவ்வாறு யார் யாரைப் பிரிந்தாலும் பாலையென்று கொள்ளுதற்கு இலக்கணநூலிடந்தராது. அகத்திணைகளனைத்தும் காதற்றலைமக்கள் தம்முள்நிகழும் அன்பொழுக்கம் பற்றியதேயாகுமன்றி, அவருள் ஒருவருக்கும் அயலவர்க்கும் இடைப்பட்ட ஒழுக்கத்தையும் தொடர்புகளையும் சுட்டமாட்டா. ஆதலானும், காலத்தால் வேறுபட்ட பிரிவிரண்டையும் இதற்குமுன் தனியிரண்டு சூத்திரங்களில் ஆசிரியர் விளக்கினாராகலானும், இச்சூத்திரத்தில் அவற்றையே இருவகைப் பிரிவுமெனத் தொகுத்துக்கூறி நிறுத்தினர் எனக்கொள்ளுதலே பொருத்தமாகும்.

1. வேனிற்பிரிவுக்குச் செய்யுள்மேலே "நடுவு நிலைத்திணையே" எனும் 9-ம் சூத்திரத்தின்கீழ்க்காட்டிய "உறைதுறந்திருந்த" எனவரும் நற்றிணைப்பாட்டாலறிக.

இன்னும், பின்வரும் காவன்முல்லைப் பூதனார் பாட்டும் முதிர்வேனிற் பிரிவு கூறுதல் காண்க.

"அஞ்சி லோதி ஆய்வளை நெகிழ
நேர்ந்துநம் அருளார், நீத்தோர்க் கஞ்சல்
எஞ்சினம்வாழி, தோழி! எஞ்சாத்
தீய்ந்த மராஅத்த ஓங்கல் வெஞ்சினை
வேனி லோரிணர் தேனொ டூதி
ஆரா துபெயரும் தும்பி
நீரில் வைப்பிற் சுரனிறந் தோரே".

(குறுந். 211.)

இதில், "தீய்ந்த மராமரத்தின் ஓங்கிய கிளையில் உண்டான ஒரே பூங்கொத்திலும்கூட தேன் எனும் பெண்வண்டோடு தும்பி எனுமாண்வண்டு ஊதி அளைந்து தேடியும் உண்ணத்தேனின்றி மீளும்" எனலாலும், நீரின்மை சுட்டுதலாலும், பருவம் முதிர்வேனிலாதல் வெளிப்படை. அதில் தலைவன், தலைவியை அருளாதகன்று சுரனிறத்தலால், அவ்வேனில் பிரிவுப்பருவமாதலறிக.

2. இனி, வேனிற்பிரிந்தார் காரிற்கூடுதல் கீழ் வருஞ் செய்யுளிற்காண்க.

"விருந்தெவன் செயகோ? தோழி! சாரல்
அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கைச்
சுரும்பிமி ரடுக்கம் புலம்பக் களிறட்
டுரும்பி லுள்ளத் தரிமா வழங்கும்
பெருங்கல் நாடன் வரவறிந்து விரும்பி
மாக்கடல் முகந்து மணிநிறத் தருவித்
தாழ்நீர் னனந்தலை யழுந்துபடப் பாஅய்
மலையிமைப் பதுபோல் மின்னிச்
சிலைவல் லேற்றொடு செறிந்தவிம் மழைக்கே".

(நற். 112.)

இன்னும், "இலையில் பிடவம் ஈர்மலரரும்ப" எனும் பெருங் கண்ணனார் நற்றிணைப் பாட்டிலும், இத்துறை வருதலறிக.

"கார் தொடங்கின்றே காலை; வல்விரைந்து
செல்க, பாக! நின் தேரே. உவக்காண்,
கழிப்பெயர் களரிற் போகிய மடமான்
விழிக்கட் பேதையொ டினனிரிந் தோடக்
காமர் நெஞ்சமொ டகலாத்
தேடூஉ நின்ற இரலை யேறே".

(நற். 242.)

இன்னும்,

"உலகிற் காணி யாகப் பலர்தொழப்
பலவயி னிலைஇய குன்றிற் கோடுதோ
றேயினை உரைஇயரோ, பெருங்கலி எழிலி!
படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்
பெழீஇ யன்ன உறையினை; முழவின்
மண்ணார் கண்ணி னிம்மென இமிரும்
வணர்ந்தொலி கூந்தன் மாஅ யோளொடு
புணர்ந்தினிது நுகர்ந்த சாரல் நல்லூர்
விரவு மலருதிர வீசி
இரவுப் பெயல்பொழிந்த உதவியோயே".

(நற். 139.)

எனும் பெருங்கௌசிகனார் பாட்டும் முதுவேனிற் பிரிந்தார் காரிற்கூடியின்புறலை விளக்கும் பரிசு களித்தற் குரியது.

3. இனி, பின்பனிப் பிரிவுக்குப் பாட்டு:—

"அம்ம வாழி தோழி! காதலர்,
நூலறு முத்திற் றண்சித றுறைப்பத்

தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியும் நாளும் பலவா குவவே".

(குறுந். 104.)

"அம்ம வாழி தோழி! முன்னின்று
பனிக்கடுங் குரையம் செல்லா தீமெனச்
சொல்லின மாயிற் செல்வர் கொல்லோ
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே".

(குறுந். 350.)

4. பனியிற்பிரிவார் இளவேனிலில் கூடுவதற்குச் செய்யுள் :—

"........................................
ஆற்றறல் நுணங்கிய நாட்பத வேனி
லிணர்துதை மாஅத்த புணர்குயில் விளித்தொறும்
நம்வயினினையும் நெஞ்சமொடு கைமிகக்
கேட்டொறுங் கலுழுமால் பெரிதே
..........................................
நுண்பஃ றித்தி மாஅ யோளே". (நற். 157.)

இன்னும்,

"அன்பினர், மன்னும் பெரியர்.........
..........................................
செங்க ணிருங்குயில் எதிர்குரல் பயிற்றும்
இன்பவேனிலும் வந்தன்று; நம்வயிற்

பிரியல மென்று தெளித்தோர் தேஎத்
தினியெவன் மொழிகோ யானே.........
வெம்முனை அருஞ்சுர முன்னி யோர்க்கே".
(நற். 224.)

எனவருமிப் பெருங்கடுங்கோ பாட்டும், "ஈங்கே வருவர்; இனையல்" எனும் கச்சிப்பேட்டு நன்னாகையார் குறும்பாட்டும் இத்துறையையே விளக்குதல் காண்க.

சூத்திரம்:—12.

திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே;
நிலனொருங்கு மயங்குத லின்றென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே.

கருத்து:—இதுவும் இதையடுத்த 'உரிப்பொருளல்லன' என்னுஞ் சூத்திரமும் முன் ஐந்தாவது சூத்திரத்திற் கூறிய முல்லை முதலிய நிலவகைகளுக்கும், பின் 'புணர்தல் பிரிதல்' எனும் 14-வது சூத்திரத்திற் கூறும் குறிஞ்சி முதலிய திணைவகைகளுக்கும் உள்ள இயைபு முரண்களை, நடுநிலை விளக்காய் நின்று, எடுத்துக்காட்டி ஐயமகற்ற எழுந்த சூத்திரங்களாகும்.

பொருள்:—திணை மயக்குறுதலுங் கடிநிலையிலவே = குறிஞ்சி முதலிய அன்பினைந்திணைகளான புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற ஐந்தொழுக்கங்களும் தத்தமக்குச் சிறப்புரிமையுடைய முறையே குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் என்னும் நிலங்

களில் நிகழ்வதுடன், அவ்வாறு சிறப்புரிமையற்ற பிற நிலங்களில் நிகழ்வதுடன், அவ்வாறு சிறப்புரிமையற்ற பிற நிலங்களில் வந்து கலத்தலும் விலக்கப்படா; நில னொருங்கு மயங்குதல் இன்றென மொழிப=(இவ்வாறொ ழுக்கங்கள் தமக்குரிமையற்ற நிலங்களில் நிகழ்ந்து மயங் குதலமையு மெனினும்) அவ்வொழுக்க மயக்கம் பற்றி தம்முள் நிலங்கள் மயங்குதலில்லை யென்று கூறுவர்; புலன் நன்குணர்ந்த புலமையோரே=புலனெறி வழக்கங் களை நன்கறிந்த அறிவுடையோர்.

குறிப்பு:—இதன் முதல் மூன்றுமடிகளின் ஈற்றே காரங்கள் அசைநிலை. உம்மை திணைக்கும் மயக்கம் சிறப்பின்மை உணர்த்தும். இதனால் ஒவ்வொரு நிலத்திற் கும் ஒவ்வொருதிணை சிறப்புரிமை யுடையதென்பதும், அவ்வுரிமை முறையன்றி நிலங்களுந் திணைகளும் தம்முள் மயங்குதல் சிறவாதெனினும் விலக்குமாறில்லை என்பதும் தெளியப்படும். மயக்கம், தனக்குச் சிறப்புரிமையற்ற நிலத்தில்பிற ஒழுக்க நிகழ்ச்சி குறிக்கும்; எந்நிலத்தும் திணைகள் தம்முட்டா மயங்குதல் கூடாமையின், அது கருத்தன்மை தேற்றம். ஒருங்கு, உடனிகழ்ச்சிப் பொருட்டு.

அகத்துறைகளில் முதலில் ஒழுக்கங்களுக்கே உரிய குறிஞ்சி முதலிய பெயர்கள் பின் நிரலே அவ்வொழுக்கங் களுக்குச் சிறந்துரிய நிலங்களுக்கும் ஆகுபெயராய் வழங் கலாயின. அவைகள் நிலங்களுக்கே உரிய பெயர் களெனல் பிற்காலப் பிறழ்வுணர்ச்சி. எனவே, சிறப்புக்

குறியாகப் புணர்தல் முதலிய ஐந்திணைகளையும், ஆகு பெயராய் அவற்றிற்குச் சிறந்துரிய நிலங்களையும், குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் எனும் பொதுப் பெயர்களாற் கூறுதல் பழைய தமிழ் நூல் மரபு. எனில், பெயரொற்றுமையால் திணைகளும் நிலங்களும் யாண்டும் ஒருநீர்மைய வெனக்கொண்டு, திணை மயங்குந்தோறும் நிலமயக்கமும் உண்டெனக் கொள்ளுதல் கூடாதென வற்புறுத்தி ஐயமகற்றுவதே ஈண்டிச்சூத்திரக் கருத்தா கும். திணையென்பது ஒழுக்கத்திற்கே சிறந்துரிய பெய ராகும். 'திணைக்குரிப்பொருளே' என்னுஞ் சொற்றொ டரும் இதனை வலியுறுத்தும். ஒவ்வோரொழுக்கமும் அவ்வதற்குச் சிறப்புரிமை கூறிய ஒரு நிலத்திற்கே தனி யுரிமை யுடைத்தன்று. ஒவ்வொருநிலமக்களும் அவ்வந் நிலத்தில் ஐந்திணையொழுக்கங்களையும் கையாளுதலியல்பு. ஆகவே, ஒவ்வொரு நிலத்தும் அதுவதற்குச் சிறந்துரிய ஒழுக்கமேயன்றிப் பிறவொழுக்கங்களையும் தொடர்பு படுத்திப் புலனெறி வழக்குஞ்செய்தல் தவறுகாது. ஒரு நிலத்து நிகழும் ஒழுக்கவேறுபாட்டால் அந்நிலத்தி யல்பும் மாறினதாகக் கருதலாகாது. மயங்கி நிகழும் ஒழுக்கத்தோடு ஒருங்கே நிலமயக்கங்கொள்ளுதல் மர பன்று என்பதும், ஒவ்வொரு திணையும் ஒவ்வொரு நிலத்திற்குச் சிறப்புரிமையுடையதாகக் கூறப்படினும் அதுகொண்டு அந்நிலத்து அவ்வோர் ஒழுக்கமே நிகழ வேண்டும் என்றவரையறையின்றி நிலத்தியல் கருதாமல் திணைமயக்கம் (அதாவது பிறவொழுக்க நிகழ்ச்சி) கூறுத லும் மரபென்பதும், தொல்காப்பியர் இச்சூத்திரத்தால்

விளக்கிப்போந்தார். எனவே, எங்கு எவ்வொழுக்கம் நிகழினும் அதனால் நிலத்தியல் மாறாது; காடு புணர்ச்சி நிகழ்வதால் குறிஞ்சியாகாது, முல்லைநிலமேயாம். பிரிவாற்றாக் குறமகளிரங்குவதால் மலைநிலம் நெய்தலாகாது; குறிஞ்சியேயாம்.

தத்தம் இயல்மாறாத நிலம் யாதாயினும், அதில் நிகழும் ஒழுக்கம்பற்றித் திணை வகுப்பது பழைய மரபு; ஒழுக்க இயல் கருதாது, நிலவகையால் திணையமைப்பது பிழைபட்ட பிற்கால வழக்கு. அது தொல்காப்பியர்க் குடன்பாடன்று என்பது இச்சூத்திரத்தால் தெற்றென விளங்கும். புணர்தல் முதலிய ஒவ்வொரு திணை அல்லது ஒழுக்கத்திற்கும், முறையே மலை முதலிய நிலங்களைப் போலவே, கூதிர் யாம முதலிய காலவகைகளும் தத்தம் இயற்பொருத்தம்பற்றித் தனிச்சிறப்புரிமை கொள்ளுமெனினும், ஒரு திணைக்கு ஒரே காலந்தான் கூறல் வேண்டுமெனும் வரையறையில்லை. எந்தத்திணையும் தன் இயல்பற்றி அதற்குச் சிறந்துரியதல்லாத பிறநிலம் பிற காலங்களில் நிகழ்தல் கூடுமாதலின், ஒவ்வொரு திணையும் எல்லா நிலங்களிலும் போலவே எல்லாக்காலங்களொடும் கலந்து நிகழ்வதும் கடியப்படாது என்பதும் வெளிப்படை. எனவே, ஒவ்வோரொழுக்கமும் அதற்குச் சிறந்துரியதாகக் கூறப்பெற்ற நிலம்பொழுதுகளிலேயே நிகழும் என ஒருதலையாக் கொள்ளல் கூடாது; உரிப்பொருள்களாகிய எல்லா ஒழுக்கங்களும், நிலமும் பொழுதுமாகிய முதற்பொருள் வகைகளில் ஒரோவொன்றைத்

தத்தமக்கு இயலியைபுபற்றிச் சிறப்புரிமை கொள்ளினும், எல்லா நிலங்களினும் எல்லாப் பொழுதுகளினும் எத்திணையும் ஏற்றபெற்றி கலந்து நிகழ்தலுங் கடியப் படாது என்பதே இச்சூத்திரக் கருத்தாதல் தெளிவாகும். இனி, இச்சூத்திரத்தில் முதற்பொருளிரண்டில் பொழுதுகூறுமல் நிலம் விதந்து கூறப்பட்டது, பொழுது போலன்றித் திணையொடு நிலம் குறிஞ்சி முதலிய பொதுப் பெயர் பெற்று மயங்குதலால் வரும் ஐயமகற்றற் பொருட்டு. திணையொடு பெயரொற்றுமையில்லாத பொழுதுகள் பற்றி அத்தகைய மயக்கத்திற்கிடனில்லை யாதலின், பொழுது மயங்காமை விதந்து கூறவேண்டிற் றில்லை.

இதற்கு "ஒரு நிலத்து இரண்டுரிப்பொருள், அதாவது இரண்டொழுக்கம் தம்முண் மயங்குதலன்றி, இரண்டு நிலம் ஒரோவொழுக்கத்தின்கண் மயங்குத லில்லை" என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். மேலும், "உரிப்பொருள் மயக்குறுதல் என்னுது, திணை மயக்குறுதலுமென்றூர், ஒருரிப்பொருளொடு ஒருரிப் பொருள் மயங்குதலும்........இவ்வாறே காலமயங்குதலும், கருப்பொருள் மயங்குதலும் பெறுமென்றற்கு" எனச் சிறப்புக்குறிப்பும் கூட்டிவிரித்தார். இதனுல் ஒரு நிலத் தொருகாலத்து ஒன்றன்மிக்க பலதிணைகள் மயங்கு மென்பது கருத்தாயின், அது கூடாமைதேற்றம். அன்றி ஒருதிணை பல நிலத்தும் மயங்கும் இயல்பையே இவ்வாறு கூறினர் எனின், அதுமிகையாவதோடு வேறு

பாட்டில்லாத ஒரு மாறுபாட்டைத் தானேபடைத்து மயங்குவதுமாகும். ஒவ்வொரு நிலத்தும் அதற்குரிய வல்லாப் பிறவொழுக்கங்கள் நிகழ்தலமையும் என்பதனுலேயே, ஒவ்வோரொழுக்கத்திற்கும் அதற்குரிய நிலமேயன்றிப் பிறநிலங்களையுந் தொடர்பு படுத்திக் கூறுதல் அமைவுடைத்தென்பதும் தெளியப்படும். ஒரு நிலத்துப் பலவொழுக்கம் நிகழும் என்றபின், பலநிலத்து ஓரொழுக்கம் நிகழும் (அதாவது ஒவ்வோரொழுக்கத்தோடும் பல நிலத்தொடர்பு அமையும்) என்பதை விலக்குமாறில்லை. எனவே, நச்சினார்க்கினியர் கூறுவதே ஈண்டுக் கருத்தாயின், 'திணைமயக்குறுதலுங் கடிநிலையிலவே' என்ற அளவே அக்கருத்தை விளக்கப்போதியதாகும்; 'நிலனொருங்கு மயங்குதலின்று' எனக்கூட்டியுரைப்பது பொருட் பொருத்தமின்றி முரண்பாடும் விளைத்து மயங்க வைக்கும். இனி, ஒருப்பட்ட தலைமக்களுள் ஓரொழுக்கம் பல நிலங்களில் நிகழ்வது ஒரு காலத்தமையாது என்று கூறி, நச்சினார்க்கினியர் உரைக்கு அமைவுகாட்டுவதும் பொருந்தாது. ஒரேகாலத்தும் ஒருநிலத்தும் பலவொழுக்கம் ஒருங்கு நிகழ்தலும், ஒருப்பட்ட ஒரேதலைமக்களுள் ஓரொழுக்கம் ஒருகாலத்துப் பலவிடத்து நிகழ்தலும் கூடாமை வெளிப்படை. அதனுலும் அது பொருளன்மை யறிக.

இதற்கு இளம்பூரணர்கூறும் பொருளாவது;— "ஒருதிணைக்குரிய முதற்பொருள் மற்றோர்திணைக்குரிய முதற்பொருளொடு சேரநிற்றலுங்கடியப்படாது; ஆண்டு

நிலம் சேரநிற்றலில்லை யென்று சொல்லுவர்; எனவே காலம் மயங்கும் என்றவாறாயிற்று" என்பதே. சூத்திரத்தில் ஒரு நிலத்திற்குரிய வொழுக்கம் வேறொரு நிலத்திற்குக் கூறுதலும் கடிநிலையிலவெனத் தெள்ளத்தெளிய விளக்கி யிருக்கவும், அதற்கு மாறாக 'ஒருதிணைக்குரிய முதற்பொருள் மற்றோர் திணைக்குரிய முதற்பொருளோடு சேர நிற்றல்கூடாது' என முரணப் பொருள்கூறுவது அமைவுடைத்தன்று. தொல்காப்பியர் 'திணை மயக்குறுதல்' என்றானன்றி, 'திணையில் முதற்பொருள் மயங்குதல்' என்று கூறினாரில்லை. ஆதலின், இளம்பூரணர் கூற்றும் இச்சூத்திரச் சொற்றொடருக்கு நேரிய பொருளன்று.

திணைகளையும் நிலங்களையும் சுட்டி அவற்றினியைபு விளக்க எழுந்த இச்சூத்திரத்தில், அவற்றின் புறம்பான காலங்களையும் கருப்பொருள்களையும் புகுத்தவேண்டிப் பழைய உரைகாரர் இச்சூத்திரத்திற்குத் தம்முள் மாறுபடப் பலவாறு மயக்கத்திற்கிடமான பொருந்தாப் பொருள் கூறுவாராயினர்.

திணைமயக்குறுதற்குச் செய்யுள்.

"கடற்கானற் சேர்ப்ப! கழியுலாஅய் நீண்ட
அடற்கானற் புன்னை தாழ்ந் தாற்ற—மடற்கானல்
அன்றி லகவும் அணிநெடும் பெண்ணைத்தெம்
முன்றி லிளமணன்மேல் மொய்த்து".

(திணைமாலை 190. செய் 56.)

இதில் குறிஞ்சித்திணையின் இரவுக்குறி நேருந் துறை, தனக்குரிய குறிஞ்சி நிலத்தன்றி, இரங்கற்றிணைக்குரிய நெய்தனிலத்து மயங்கியதறிக. அவ்வாறு குறிஞ்சித்திணை வந்து கலப்பினும், அதனால் நிலத்தியல் மயங்காமல் நெய்தலாகவே நிற்பது கூறப்படுதலும் காண்க. இன்னும், "புலாலகற்றும்" எனும் திணைமாலை (35-ம்) வெண்பாவும் நெய்தனிலத்தில் குறிஞ்சித்திணை மயக்கம் கூறும். இனி

"புன்புறவே சேவலோ டேடல் பொருளன்றால்,
அன்புற வேயுடையா ராயினும்—வன்புற்
றதுகாண் அகன்ற வழிநோக்கிப் பொன்போர்த்
திதுகாணென் வண்ண மினி".

(திணைமாலை 152ல். செய் 74.)

எனும் திணைமாலைப்பாட்டில் நெய்தற்றிணை பாலநிலத்து மயங்குதல் அறிக.

சூத்திரம்:—13.

உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே.

கருத்து:—இது ஐந்திணைகள்போலவே, அத்திணைகளின் சார்பான பிற உரிப்பொருள்களும் பல நிலங்களிலும் ஏற்றபெற்றிவந்து மயங்கும், என்று கூறுகிறது.

பொருள்:—உரிப்பொருளல்லன = "திணைக்குரிப் பொருளே" என வரையறுத்த புணர்தல்முதல் ஐந்திணையல்லாத உரிப்பொருளான தலைமக்கள் ஒழுக்கமாவன பிற; மயங்கவும்பெறும் = எந்நிலத்தும் வந்து கலத்தலுமுண்டு.

குறிப்பு:—புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனும் திணைக்குரிப்பொருள் ஐந்துமன்றி அவற்றின் சார்பாய் அவ்வுரிப்பொருள்களோடு அமைத்துக் கோடற்பாலனவாய், பிற்றைச் சூத்திரங்கள் கூறும் 'கொண்டுதலைக் கழிதல்'. 'பிரிந்தவணிரங்கல்', 'கலந்த பொழுது', 'காட்சி' முதலியனவும், ஐந்திணை உரிப்பொருள்களைப் போலவே ஒரு நிலத்துக்குந் தனியுரிமையின்றி எல்லாநிலத்தும் வந்து மயங்கவும்பெறும்.

ஈற்றேகாரம் அசைநிலை.

திணைக்குரிப்பொருள்களாக விதந்துகூறும் புணர்தல் முதலிய ஐந்தும் எந்த நிலத்தும் வந்து மயங்குதல் மேற் சூத்திரத்திற் கூறப்பட்டது. பேரளவில் அவ்வைந்தனு ளடங்காமல், இயல்பற்றி உரிப்பொருளா யமைவன பிறவுமுள என்பதை இவ்வியல் 'கொண்டுதலைக்கழிதல்' 'கலந்தபொழுதும்' என்ற சூத்திரங்களிற் சுட்டுவதால், அத்தகைய பிற அகவுரிப் பொருள்களும், விதந்தோதிய ஐந்திணையுரிப்பொருள்கள் போலவே, வரையறையின்றி யெந்த நிலத்தும் வந்து மயங்குதல் கூடும் என்பதை இந்தச் சூத்திரம் விளக்குகிறது. ஈண்டு 'உரிப்பொரு ளல்லன' என்பது முன்னைச்சூத்திரத்தில் 'திணைக்குரிப் பொருள்' என விதந்தோதிய தலைமக்களொழுக்கம் ஐந்துமல்லாத பிறவெனக் கொள்ளல் வேண்டும். 'உரிப் பொருளல்லன' என்பதை 'அல்லன உரிப்பொருள்' எனச் சொன்மாற்றி, முன்விதந்தோதிய ஐந்துமல்லாத உரிப்பொருளாவன எனக்கொள்ளுவதே ஈண்டுப் பெரிதும் பொருத்தமுடைத்தாம்.

இனி, இவ்வாறு கொள்ளாமல், உரிப்பொருளல்லாத கருப்பொருளும் முதற்பொருளும் பிறத்திணையோடு சேரும் என்று இளம்பூரணர் பொருள் கொள்வதும் பொருந்தாது. ஏனெனில், திணைமயக்குறுதலும் என்ற சூத்திரத்தால் முதற்பொருள் மயக்கமும் 'எந்நில மருங்கிற் பூவும்புள்ளும்' என்பதால் கருப்பொருள்களின் மயக்கமும் முன் தனி வேறு சூத்திரங்களாற் கூறியிருத்தலின், அவற்றையே இச்சூத்திரத்திலும் தொல்காப்பியர் கூறினரென்பது கூறியது கூறல் என்னுங் குற்றத்திற்கு அவரையாளாக்கும்.

"உரிப்பொருள் என்றோதிய ஐந்திணையு மல்லாத கைக்கிளை பெருந்திணையும் நால்வகை நிலத்தும் மயங்கவும் பெறும்" என்னும் நச்சினார்க்கினியர் உரையும் அமைவுடைத்தன்று. கைக்கிளை பெருந்திணைகளுக்கு நிலம் பொழுதுகளில் எதுவுமே தனியுரிமை கூறாததால், விலக்கில்லா நிலப்பொழுதுகளில் அவை வந்து மயங்குமெனச் சுட்டுதல்மிகையாகும். அன்றியும் மேல் இரண்டாஞ்சூத்திர முதல் கீழ் 42-ம் ஆம் சூத்திரமுடிய நிரலே நடுவணைந்திணைகளின் இயல்புகளையே விளக்கி, பிறகு 43-முதல் 49-வரையுள்ள சூத்திரங்களில் சில பொதுவியல்புகள் கூறி, அவற்றின்பின் இவ்வியலிறுதியில் 50, 51 ஆம் சூத்திரங்களில் கைக்கிளை பெருந்திணைகளை விளக்கிமுடிக்கும் இந்நூலார் ஈண்டு அன்பினைந்திணையின் இயல்புகளுக்கிடையே இன்றியமையாத்தொடர்பு எதுவுமின்றி இறுதியிற் கூறும் கைக்கிளை பெருந்திணைகளையிழுத்து அவற்றின் இலக்கணம் கூறுமுன் மயக்கங் கூறினரெனக் கொள்ளுதல் எவ்வாற்றானுஞ் சாலாமையறிக.

ஐந்திணையல்லாப் பிற உரிப்பொருள் பலநிலத்து மயங்குதற்குச் செய்யுள் :—

கொண்டுதலைக்கழிதல் அத்தகைய பிற உரிப்பொருளாதலுண்டென அடுத்த பின் சூத்திரம் கூறுகிறது. அவ்வுரிப்பொருள் புணர்தற்குரிய குறிஞ்சிநிலத்தில் மயங்குவதாகக் கீழ்வரும் பழம்பாட்டுக் கூறுதல் காண்க.

1. "நினையாய், வாழி, தோழி!" எனும் பூதந்தேவனார் குறும்பாட்டில்

"........புலிப்பகுவா யேற்றை
.....................விடர்முகைக்
கோடைஒற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயருமாறே".

(குறுந் 343.)

புலி வேங்கைச் சினையிற் கிடக்குமுயர்வரை நாடாகவே நிலம் குறிஞ்சி; நாடனொடு பெயர்தல் கொண்டுதலைக் கழிதலாமுரிப்பொரு. இன்னும் "ஊஉரலரெழ" எனும் பெருங்கடுங்கோவின் பாட்டு மதுவாதலறிக.

"......................................
உணலாய்ந்திசினு லவரொடு சேய்நாட்டு
விண்டொடநிவந்த விலங்குமலைக் கவாற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே".

(குறுந். 262)

இதில், புணர்தற்குரிய மலையிற் றலைவனுடன் போகும் தலைவி களிற்றடிவழி நிலைஇய நீரை தலைவனோ டுண்ணுதலை விரும்பும் ஒழுக்கம் மயங்குதலறிக.

இனி, கொண்டுதலைக்கழிதல்,

> " அன்னாய் வாழி வேண்டன்னை, நம்படப்பைத்
> தேன்மயங்கு பாலினும் இனிய, அவர்நாட்
> டுவலைக் கூவற் கீழ்
> மானுண் டெஞ்சிய கலிழி நீரே". (ஐங். 203.)

எனும் ஐங்குறுநாற்றுப் பாட்டில் குறிஞ்சிநிலத் தும்.

> " ஒன்றூனு நாம்மொழிய லாமோ செலவுதான்
> பின்றூது பேணும் புகழான்பின்—பின்றூ
> வெலற்கரிதாம் வில்வலான் வேல்விடலை பாங்காச்
> செலற் கரிதாச் சேய சுரம்".
> (திணைமாலை 150ல். செய் 87.)

எனும் திணைமாலை வெண்பாவில் பாலைநிலத்தும், வந்துமயங்குதல் காண்க.

இதுபோலவே மற்றைய ஐந்திணையிலடங்கா உரிப் பொருள் அனைத்தும் எல்லாநிலத்தும் மயங்குமென்றறிக.

சூத்திரம்:—14

> புணர்தல் பிரித லிருத்த லிரங்கல்
> லூட லிவற்றி னிமித்த மென்றிவை
> தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.

கருத்து :—இச்சூத்திரம் அகப்பொருட் பகுதியிற் சிறந்த அன்பினைந்திணைக்கு நேருரிமைகொண்ட ஒழுக்க வகைகளை உணர்த்துகிறது.

பொருள்:—புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடலிவற்றின் நிமித்த மென்றிவை=கூடுதல், பிரிதல், பிரிவிடையாற்றி யிருத்தல், ஆற்றாதிரங்கல், புலவி என்ற ஐந்தும் அவற்றிற் கியைபுடைய நிமித்தங்களுமே; தேருங்காலைத் திணைக்குரிப்பொருளே=ஆராயும் பொழுது அன்பினைந்திணை யெனற்குச் சிறந்துரிய பொருள்களாம்.

குறிப்பு:—இதில் ஈற்றேகாரம் தேற்றமாகும். முதல் கரு உரிப்பொருள்களனைத்தும் அகத்திணைப் பகுதியாகவே அமைத்துக்கோடல் தவறன்றாயினும், திணையென்பது ஒழுக்கங்கண்ணிய பேராதலால் அன்பினைந்திணை யெனற்குப் புணர்தல் பிரிதல் முதலிய தலைமக்கள் ஐந்தொழுக்கங்களே சிறப்புரிமையுடைய பொருள்களாகும் என்பதை இச்சூத்திரம் விளக்குகிறது.

நிமித்தமாவது ஒவ்வோரொழுக்கத்தை யடுத்து முன்னும் பின்னும் முதலும் முடிவுமாகத் தொடுத்து அவ்வொழுக்கத்திற்கு இன்றியமையாத் தொடர்புடையனவற்றைச் சுட்டுவதாம். புகுமுகம்புரிதல், நகுநயம் மறைத்தல் முதலியன புணர்தலுக்கு முன்னெழும் நிமித்தங்களாம். அணிந்தவை திருத்தல், பாராட்டெடுத்தல் முதலியன புணர்வின் பின்னர் நிகழும் நிமித்தங்களாம். இவ்வாறு தொடர்பணிமை யற்றன நிமித்தமாகா.

7083



"அன்னபிறவும்......நிமித்தமென்ப" என்னும் மெய்ப்பாட்டியல், 19-ம் சூத்திரமும் இதை வலியுறுத்தும். இவ்வாறே பிறதிணைகளுக்கும் நிமித்த வகைகளை ஏற்றபெற்றி அமைத்துக்கொள்க. நிறுத்தமுறையானே முன்னர் முதற்பொருளைக் கூறினவர் அதனை யடுத்துக் கருப்பொருளைக் கூறாமல் அதற்குமுன் ஈண்டுரிப்பொருள்களைக் கூறுவதேனெனிற் சொல்லுவன்; அகப்பகுதியில் முதற்பொருள் உரிப்பொருள்கள் அல்லாதன அனைத்தும் கருப்பொருள்களா யமைதலின், முதலில் வரையறைப்பட்டவற்றை விளக்குவான் றொடங்கி, நிலம்பொழுதெனும் இரண்டே வகையுளடங்கும் முதற்பொருள் கூறினதும், அளவறுதிப்படாக் கருப்பொருள்களைக் கூறுமுன், ஐந்து ஒழுக்கத்தளவில் அடங்கும் உரிப்பொருளை இடையிற்கூறி யமைத்தபெற்றி உய்த்துணர வைத்தார். அகவகைச் செய்யுள்களனைத்தும் இவ்வைந்திணையே கூறுதலின், எடுத்துக்காட்டு ஈண்டைக்குவேண்டா.

சூத்திரம் :—15.

> கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவ ணிரங்கலும்
> உண்டென மொழிப ஓரிடத் தான.

கருத்து :—இது, மேலைச்சூத்திரத்தில் திணைக்குரிப்பொருளென விளக்கிய ஐந்தனுளடங்காதனவாய், தம்மியல்பால் அகத்திணைகளுக் குரிப்பொருள்களாய் ஆட்சிபெறும் பிற சிலவும் உண்டெனக் கூறுகிறது.

பொருள்:—கொண்டுதலைக் கழிதலும் = களவில் தலைவன் தலைவியைத் தன்னுடன் கொண்டுசேறலும்; பிரிந்தவணிரங்கலும் = அவ்வாறுடன் கொண்டுசெல்லுங்கால் தலைவியின் தமர்வரவு முதலிய காரணங்களால் பிரியநேரின் ஆண்டப் பிரிவுப்பற்றி யிரங்கலும்; உண்டென மொழிப = ஏற்றபெற்றி இவை உரிப்பொருள்போல வருதலும் உண்டு என்று கூறுவர் (புலவர்); ஓரிடத்தான = அவை அகத்திணைக் கியைபுடைய ஓரோவிடத்து.

குறிப்பு:—கொண்டுதலைக் கழிதல் என்பதனால், தலைமக்கள் தம்முள் அது பிரிதலாகாது; நேரே புணர்தலும் அன்றாம். "அது நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையானும், உடன்கொண்டு பெயர்தலின் பிரிதலினடங்காமையானும், வேறு ஓதப்பட்டது" எனும் இளம்பூரணர் குறிப்பு ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. இனி, அதுவே போல் பிரிந்தவணிரங்கல் என்பதும் பிரிந்தவர் இரங்கல் என்னுந்திணைக்குரிப் பொருளின் வேறுபட்டது என்பதை விளக்குதற்காகவே, கொண்டுதலைக் கழியுமிடத்துப் பிரிய நேர்ந்துழி 'அவண் இரங்கல்' என விதந்து விளக்கப்பெற்றது. இச்சூத்திரம்சுட்டும் இரண்டும் அகத்துறைகளில் உரிப்பொருள்களாகிய தலைமக்களினொழுக்கமாகவே ஆளப்பெறுதலானும், இவை புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற திணைக்குரிப்பொருள்களைந்தனுள் எதனிலும் அடங்காமையானும், அவற்றினின்றும் வேறு பிரித்து, இச்சூத்திரத்தால் ஓரோவிடத்து உரிப்பொருளாதற்கு உரியன இவையென்று தெளிக்கப்பட்டன.

இதுவே தொல்காப்பியர் கருத்தென்பது பின் இவ்வியலில் "ஒன்றாத்தமரினும்" எனும் (41-ம்) சூத்திரத்தில், "இடைச்சுரமருங்கி லவள்தமரெய்திக் கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞரெய்தி" என்றவர் விளக்குதலானுமறிக.

ஈண்டு இளம்பூரணர் கொண்டுதலைக் கழிதலைப் பாலைக்கண்ணும், பிரிந்தவணிரங்கலைப் பெருந்திணைக்கண்ணும் வரும் உரிப்பொருள்களாக்கிப் பொருள் கூறுவர். "உடன்கொண்டுபோதல் (அதாவது கொண்டுதலைக்கழிதல்) பிரிவினடங்காது" என இவரே கூறியபின், அது பிரிவாம்பாலைக்கண்வருமெனல், தன்னொடுதானே மாறுகொளக் கூறுவதாம். தலைமக்கள் தம்முட்பிரிந்திரங்குவது நேரிய நெய்தற்றிணைக் குரிப்பொருளாகும். பிரிந்திரங்கல் எனைத்தானும் பெருந்திணைப்பாற் படுதலில்லை, அது ஒத்தகாதலொழுக்கமாதலின்.

இனி, இவ்விரண்டையும் தந்நிலையில் உரிப்பொருளாக்காமல், திணைமயக்கம் என்று கொண்டு, பாலைத்திணையுள் குறிஞ்சியும்நெய்தலுமாகிய பிறதிணைகளின் மயக்கம் கூறுவதாகக்கொள்ளும் நச்சினார்க்கினியர் உரையும் பொருந்தாது. திணைமயக்குறுதல் என்னுஞ் சொற்றொடரால் மயங்கி, ஒருதிணையுள் பிறதிணைகள் ஒருங்கு வந்து மயங்குமெனக் கொள்ளுதல் எவ்வாற்றானும் பொருந்தாது. தலைமக்களிருவருள் ஒருகாலத்தோரொழுக்கம் நிகழ்வதன்றிப் பலவொழுக்கம் ஒருகாலத்துக்கலந்து மயங்குமென்பது இயல்பன்றாகலின், அதற்

கிலக்கணமும் வேண்டப்படா. ஒரு நிலத்திற் பலவொ ழுக்கங்களும் ஒரொழுக்கம் பலநிலங்களிலும் வேறு பட்ட காலங்களில் நிகழு மென்பதையே முன் 'திணை மயக்குறுதல்' என்னுஞ் சூத்திரத்தால் விளக்கினரன்றி, ஒருகாலத்துப் பலவொழுக்கந் தம்முள் மயக்குமென்று தொல்காப்பியர் யாண்டும் கூறிலர், அஃதியல்பன்மையின். அதனல் இச்சூத்திரம் திணைமயக்கம் கூறுவதன்று, ஒரு சார் உரிப்பொருளாம்பிற சில கூறுதலே நுதலிற்று என் பது தெளியப்படும். அன்றியும், இதில் திணைமயக்கம் கூறுதலே அவர் கருத்தாயின் இதனையும் இதுபோன்ற திணைமயக்கம் நுதலும் பிறசூத்திரங்களையும் திணைக்கு ரிப்பொருள் கூறுஞ் சூத்திரத்திற்கு முன் 'திணைமயக்கு றுதலும்' 'உரிப்பொருளல்லன' என்பவற்றேடு இயைபு நோக்கி இணைத்துக் கூறியிருப்பர். அவ்வாறன்றி, திணைக் குரிப்பொருள் வகை ஐந்தையுங் கூறுஞ் சூத்திரத்திற்குப் பின் இது கூறப்படுதலால், இதுவும் அவ்வைந்தனுளடங் காத பிற உரிப்பொருள் வகை விளக்குவதையே நுதலிற் றென்பது தேற்றம்.

ஈண்டு உம்மை யிரண்டும் எண்ணும்மை.

கொண்டுதலைக் கழிதலுக்குச் செய்யுள், முன் "உரிப் பொருளல்லன" எனும் (13-ம்) சூத்திர உரைக்குறிப்பில் காட்டிய பாட்டுக்களைக் காண்க.

பிரிந்தவணிரங்கலுக்குச் செய்யுள்:—

"நமர்வரி னோர்ப்பி னல்லது, அமர்வரின்
முந்நீர் மண்டில மனைத்து மாற்றாத்

தெரிகணை விடுத்த லோ விலனே;
அரிமதர் மழைக்கண் கலுழ்வகை எவனோ?"

இப்பழைய உரைமேற்கோட் செய்யுளில், தமர் வரவு கருதி அகலுனேரும் பிரிவினுக்கஞ்சி உடன்போக்கில் தலைமகளிரங்கத் தலைவன்தேற்றுங் குறிப்பறிக.

"ஏதங் கருதா திளை யோய்நீ என்னோடு
போதரு வாய்கொல் புகலென்ற—காதலர்பின்
வந்தேனை விட்டு மறைந்தார்; எமர்வெறுத்தேற்
கெந்தநிலை எய்து மினி".

எனும் வெண்பாவில், உடன்போக்கிடையில் தொடருந் தலைவிதமரை அவள்முன் இடருறப் பொருவதை வெறுத்துத் தலைவன் மறைய, தற்கொளவந்த தமரைமறுத்துக் கற்பு வற்புறுத்துந் தலைவியினிரக்கம் கூறப்பெறுதல் காண்க.

சூத்திரம்.—16.

கலந்த பொழுதுங் காட்சியு மன்ன.

கருத்து:—இதுவும், ஐந்திணை வகுப்பில் அடங்காதனவாய் அகப்பகுதியில் உரிப்பொருள் ஆவன இன்னுஞ் சிலவற்றைக் கூறுகின்றது.

பொருள்:—கலந்த பொழுதும் = ஒத்த தலைமக்கள் தம்மிடைப் பாலதாணையின் முதல் எதிர்ப்பாட்டில் நிகழ்வும்; (கலந்த) காட்சியும் = அவ்வாறு தலைப்பட்டார் தம்

முள் அறிவுடம்படுத்தற்குக் கூட்டிக் குறிப்புரைக்கும் நாட்டமும்; அன்ன = (மேலைச் சூத்திரத்திற் கூறியது போல) ஏற்புழி அகவொழுக்கத்திற்கு உரிப்பொருளா தற் குரியவாகும்.

குறிப்பு:—உம்மை யிரண்டும் முன்னைச் சூத்திரத்தில் ஓதியவற்றுடன் வைத்தெண்ணத்தகும் என்பதைக் குறிப்பதால் இறந்தது தழீஇய எச்சவும்மை. அன்ன என்பது, மேற்கூறிய கொண்டுதலைக்கழிதல் பிரிந்தவணி ரங்கல் என்பனவற்றை இங்குக் கூறிய கலந்தபொழுதும் காட்சியும் உரிப்பொருளியல்பால் ஒப்பன என்பதைச் சுட்டும் குறிப்பு முற்றும். 'கலந்த' என்னும் எச்சத் தைக் 'காட்சி' யென்பதனோடுங் கூட்டுக. ஈண்டு "பொழுது" காலம் காட்டாது, தலைப்பட்டுழி நிகழ்ச்சி களுக்கு ஆகுபெயராம்; முதற்பொருளான காலம் முன் னரே கூறி முடிந்ததால் அது மீண்டும் கூறல் வேண்டா.

இங்கு, 'கலந்தபொழு' தென்பது பின்களவியல் இரண்டாஞ் சூத்திரம் கூறும் தலைமக்களின் தலையெதிர்ப்பாட்டையும், 'காட்சி' என்பது அக்கள வியல் ஐந்தாஞ் சூத்திரம் கூறும் 'அறிவுடம் படுத் தற்கு'க் குறிப்புநாடும் நோக்கத்தையும் முறையே குறிக் கும். கலத்தல் என்பது தலைப்படுதல் என்றபொருள தாகும். 'ஒருமூவேங் கலந்த காலை' என்னுங் கம்பரடி யும், 'கலந்து போர்செய்தா ரோர்சிலர்' என்ற கந்த புராண அடியுங் காண்க. கலப்பும் என்னாது கலந்த பொழுதும் என்றது முதலெதிர்ப்படுங்காலத்து நிகழும்

காட்சி, ஐயம், துணிவு முதலிய பலவும் அடங்குதற் பொருட்டு. இச்சூத்திரத்தில் காட்சியென்பது முதலிற் கிழவனுங் கிழத்தியுந் தலைப்பட்டுக் காண்பதன்று; அது கலந்தபொழுது என்பதில் அடங்கும். எதிர்ப்பட்ட தலைமக்களிடை அவர் "அறிவுடம் படுத்தற்குக் கூட்டியுரைக் கும் குறிப்புரை" நாடும் நோக்கத்தையே ஈண்டுக் காட்சி யென்றார். பின் களவியலில் விளக்கப்படுமிவை யிரண்டும் புணர்தல் முதலிய ஐந்திணைகளுள் எவையுமாகா வெனி னும், அகத்துறைப்பாட்டுக்களுள் இவையும் உரிப்பொ ருள்களாக ஆட்சிபெறுவதால், ஐந்திணைகளுள் அடங்காத உரிப்பொருள் உண்மைகூறு மிவ்விடத்திலிவை இயைபு பற்றிக் குறிக்கப்பட்டன.

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து".

எனுங்குறளில் தலைமக்களின் முதற்றலைப்பாட்டில் இருவரும் தம்முள் அறிவுடம்படுத்தற்குக் குறிப்பறிய "நாட்டமிரண்டும் கூட்டியுரைக்கும்" பெற்றி விளக்கப் படுதல் காண்க. முன்னுறும் முயற்சியுமின்றித் தாமே தமியராய்த்தலைப்படல் கலந்த பொழுதாகும்; தலைப் பட்டவர், ஒருவர் மற்றவர் குறிப்பறியநாடும் நோக்கு கலந்த காட்சி (அறிவினாட்டம்) ஆம். குறிக்கொண்டு நோக்குந்தலைவன், தலைமகள் குறிப்புநோக்கா லவள் கருத்தும் தன்னதேபோற் காதல் கண்ணியதெனக்கண்டு தனக்குத்தான் தேற்றுமவன்கூற்றில், ஐயமும், அச்ச மும், தெளிந்துமகிழ்தலும் ஒருங்கு காணக்கிடக்கின்றன.

முதலில் அவள்கருத் தறியாமையா லவன் அஞ்சுவதும், அச்சமகற்று மவள்அளிநோக்கும், அதன்மேலிருவரு மறிவுடம்பட் டுள்ளம்புணர்ந்துழி அவனவள் நலம் பாராட்டலும் ஆகிய மூன்றுமினிது விளங்கும். "கூற் றமோ" என்றதாலச்சமும், "கண்ணே" என்றதால் கண்ணொடுமவள் காதல் நோக்கும், "பிணையோ" என்றதால் அறிவுடம்பட் டுளங்கலந்துழி அவனவளைப் பாராட்டலும் இனிதமையச் சிறுகுறளிற் செறித்த செவ்வி வியத்தற்குறித்து.

"அணங்குகொல், ஆய்மயில் கொல்லோ கனங்
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு". [குழை என்பதிலும், "அணங்கா"லையவச்சமும், "மாதர்" என்ப தாலறிவுடம்பாட்டுத் தெளிவும், "மயில்" என்பதால் பாராட்டு மொருங்கமைதலறிக.

"மயில்கொல், மடவாள்கொல், மாநீரத் திரையுட்
பயில்வதோர் தெய்வங்கொல் கேளீர்—குயில் பயிருங்
கன்னி யிளஞாழற் பூம்பொழில் நோக்கிய
கண்ணின் வருத்துமென் னெஞ்சு".

(திணைமொழி-49.)

இத்திணைமொழி வெண்பாவும், நெய்தனிலத்துக் "கலந்தபொழுதும் காட்சியுமாய" உரிப்பொருள்களின் மயக்கம் கூறுகிறது.

சூத்திரம்:—17.

முதலெனப் படுவ தாயிரு வகைத்தே.

தமிழ்ப் பல்கலைக் கழக நூலக
தஞ்சாவூர்



கருத்து :—இஃது, உரிப்பொருள் கருப்பொருள்கள் போல விலக்குகள் வேண்டி விரியாமல், முதற்பொருள் நிலம்பொழு திரண்டினுள் அடங்குமென்பதை வலி யுறுத்தல் நுதலிற்று.

பொருள் :—முதலெனப்படுவது = முதற்பொருள் என்று சிறப்பித்துக் கூறப்படுவது ; ஆயிருவகைத்தே = மேலே நாலாவது சூத்திரத்தில் கூறியாங்கு நிலம்பொழு திரண்டினியல்பெனும் இரண்டே வகைகளே யாண்டும் உடையதாகும்.

குறிப்பு :—ஈற்றேகாரம் தேற்றங்குறிக்கும். முதல், கரு, உரி என்ற அகப்பொருட் பகுதிகள் மூன்றனுள் உரிப்பொருளாவன ஐந்தொழுக்கமும், அவைபோல அகத்துறையிற் சிறந்துரிய தலைமக்களின் காதலொழுக் கங்கள் பிற சிலவுமாக வகைபெறுமென்பதை இந்நூலார் மேற் சூத்திரங்களில் விளக்கினர். அதுபோலவே கருப் பொருள்களும் பலவகைப்படுமென்பதை இனி வருஞ் சூத்திரத்திற் கூறுவர். இவை யிரண்டும் போலாது, யாண்டும் முதற்பொருளாவன நிலமும் பொழுதுமென் றிரண்டே வகைகளுள் அடங்குமென்பதை இயைபு நோக்கி இவ்விடைச் சூத்திரத்தால் ஐயமற வரையறுத்து வற்புறுத்துகிறார். இஃது இறந்தது காத்தல், கூறிற் றென்றல், முடிந்தது காட்டல் என்னும் உத்திகளால் அமையுமாதலின், கூறியது கூறலாகாது.

முதல் கரு உரி என முன்னே முறைப்படுத்திக் காட்டியவர் முதற்பொருள் வகையியல்புகளே முதலிற் கூறி, அதையடுத்துக் கருப்பொருள் கூறாமல் உரிப்

பொருள்களின் இயல் கூறினர், இவையிரண்டும் அளவு பட்டமையும் இயைபு நோக்கி. அவ்வியைபை வலியுறுத் தும் பொருட்டே ஈண்டு இச்சூத்திரத்தால் முடிந்தது காட்டித் தந்துணிபுரைத்தார். உரிப்பொருளனைத்தும் தலைமக்களின் அன்பினைந்திணை வகைகளில் அமைந் தடங்கும். முதற்பொருள்களும் நிலம்பொழுதெனும் இரண்டே வகையி லடங்கும். இவையிரண்டும் போலாது கருப்பொருள்வகைகள் எண்ணிறந்து ஏற்றபெற்றி விரியு மியல்புடையவாதலால், அளவுபட்ட இவையிரண்டும் முற் கூறி, இவற்றின்பின் இவையல்லாத அளவிறந்தனவாய் வரும் பலவும் கருப்பொருள் வகைகளாகுமென்பது விளக்கக் கருப்பொருளியல் இறுதியிற் கூறுகின்றார். இவ் அளவு முறையான் வைப்பு முறையும் அமைகின்றது. முதற்பொருள் இரண்டே வகைகளுள் அடங்குவதாகலின் முதலில் வைக்கப்பட்டது. உரிப்பொருள்கள் அகவொ ழுக்கங்களுள் சிலவாக ஐந்து வகைகளில் அடங்குதலால் அவற்றை முதற்பொருளின் பின்னர்க்கூறி, அவ்விரு வகை யளவானும் அடங்காமல் பலபடவிரியும் கருப் பொருள்களை அவ்விரண்டின் பின் அமைத்துக் கூறினர்.

சூத்திரம்:—18.

தெய்வ முணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப.

கருத்து:—இது முதல் உரிப் பொருள்களில் அடங்கா வாய் அகத்திணைக்கு உறுப்பாம் கருப்பொருள்வகை உணர்த்துகிறது.

பொருள்:—தெய்வம் = வழிபடு கடவுட்பகுதி; உணவே = ஊண்வகை; மா = விலங்குவகை; மரம் = மரஞ்செடிகொடி வகை; புள் = பறவை வகை; பறை = அவ்வந்நிலங்களுக்குரிய பறைவகைகள்; செய்தி = தொழில் வகை; யாழின் பகுதியொடு தொகைஇ = யாழ் வகைகளோடு கூட்டி; அவ்வகை பிறவும் = அவைபோல அகத்திணைகளுக்குச் சார்பாக வகைப்படுவன மற்றையனவும்; கரு எனமொழிப = கருப்பொருள்கள் என்று கூறுவர் அகப்பொருணூலார்.

குறிப்பு:—முன்னைச் சூத்திரக் குறிப்புரையில் சுட்டியாங்கு, முதலும் உரியுமல்லாத அகப்பொருள்களுள் அகத்திணைக்குக் கருவாய் அமைவன யாவும் கருப்பொருள்கள் என்பர் அகப்பொருள் நூலார். இச்சூத்திரத்தில் அளவற்ற கருப்பொருள்வகைகளனைத்தையும் வகுத்து நிறுத்தல் கூடாமையின், சிறந்தன சில சுட்டி அவ்வகை பிறவும் கரு என்று கூறி, மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடியவைத்தார் தொல்காப்பியர்.

சூத்திரம்:—19.

எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.

கருத்து:—இது கருப்பொருண் மயக்கமும் கடிதலில்லை யென்பது கூறுகின்றது.

பொருள்:—எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்=எந்த நிலச்சார்பில் கூறப்படும் பூ, புள் முதலிய கருப்பொருள் களும்; அந்நிலம் பொழுதொடு வாராவாயினும்=அவ்வக் கருப்பொருட்குச் சிறந்துரிய நிலத்தோடும் பொழுதோ டும் இயைந்து வந்திலவாயினும்; வந்த நிலத்தின் பயத்த ஆகும்=கூறப்பட்ட ஒழுக்கநிக ழிடத்தொடு பொருந்த அதற்கேற்ற பயன் தருவனவாய் அமையும்.

குறிப்பு:—பூவும் புள்ளும் என்பவற்றுள் உம்மை எண்ணும்மை. வாராவாயினும் என்பதிலும்மை யெதிர் மறை சுட்டும்; கருப்பொருள்கள் பெரும்பாலும் தத் தமக்குரிய நிலம் பொழுதொடு இயைந்து வருதலே சிறந்த முறை, ஒரோவிடத்து மாறிவரினும் வந்த இடத்தொடு பொருந்தப் பயன் தருவதால் கடியப்படாமல் அமைத்துக் கொள்ளப்படும் எனும் பொருட்டாதலின்.

உரிப்பொருள்களைப் போலவே கருப்பொருள்களும் முதற்பொருள்களான நிலப்பொழுதுகளின் வகைகளில் இயைபுநோக்கி ஏற்றபெற்றி ஒரோவொன்றிற்கே சிறப் புரிமையுடன் பொருந்துவனவாகும். நிலப்பொழுது வகைகளின் பொருத்தம் நோக்கி அவ்வவற்றிற்குரிய கருப்பொருள்களமையக் கூறுவதே பெருவழக்காம். எனினும், ஒரோவிடத்து நிலப்பொழுதுகளுக்கு நேருரி மையல்லாத திணைக்குரிய வொழுக்கங்கள் மயங்கக்கூறு வது புலனெறி வழக்கென்று மேலே 12, 13-வது சூத் திரங்கள் கூறினதால், அவ்விடங்களில் தம்முரிமையின்றி மாறுபட்ட முதலுரிப்பொருள்களில் எதற்கியையக் கருப்

பொருள்களின் அமைவு கருதப்படுமென்ற ஐயம் எழுவ தியல்பு. அவ்வையமகற்ற ஈண்டு இச்சூத்திரம் எழுந்தது. நிலம் பொழுதுகளோடு பொருந்தக் கருப்பொருள் கூறுவது பெருவழக்கிற்றாயினும், பயன் நோக்கி அகத்திணையிற் சிறந்த ஒழுக்கங்களுக்கியைய நலந்தருவனவற்றை அமைத்துக் கோடல் பாடல்சான்ற புலனெறிவழக்கே யாம் என்பதை இச்சூத்திரம் வலியுறுத்துகிறது. "பாடலுட் பயின்றவை நாடுங்காலை" முதலிற் கருவும் கருவில் உரியுமே முறை சிறந்தன எனுந்தமிழ் மரபை முன் மூன்றுஞ் சூத்திரத்துக் கூறினராதலின், நிலம்பொழுது களினும் சிறந்த உரிப்பொருளொழுக்கத்திற்குப் பொருந்தவரும் கருப்பொருள்கள் முதற்பொருளுக்கியையா விடத்தும் கடியப்படா என்று இதனால் இந்நூலார் அமைவுகாட்டி வற்புறுத்தினர்.

'மாயோன் மேய' எனும் முன்னைச் சூத்திரத்தில் நானிலங்கள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனத்திணைப்பெயரே கொள்ளும் என்றமைத்ததும் அகத்துறைகளில் திணைக்குரிப் பொருள்களான ஒழுக்கங்களே சிறப்புடையவாதல் பற்றியேயாம். ஆனால் ஒரு நிலத்திற் பிறிதொழுக்கம் நிகழ்வதாய்ப் புலனெறி வழக்கஞ் செய்யுமிடத்து அவ்வந்நிலத்தொடு இயற் பொருத்தமில்லாத கருப்பொருள்களை திணைநோக்கிக் கூற நேரின், நிகழுமொழுக்கத்துக்கு அக்கருப்பொருள் கள் ஏற்புடையனவாய் அமையும் பயனுடைத்தாதல் வேண்டுமென்று இந்நூலார் ஈண்டு ஒப்பக்கூறியமைத் தார். காடு, மலை, ஊர், கடல் என்பவற்றுள் கூறுவது

யாதாயினும் அதற்கியையப்பொருத்தமுடைய கருப்பொருள்களமையக் கூறுதலொன்று, அன்றி அந்நிலத்தில் நிகழ்வதாய்க் கூறப்படும் திணைக்குப் பொருந்த அமைவதொன்றும். கருப்பொருள்கள் தமக்குரிய நிலம் பொழுதுகளோடு இயைய வாராவிடங்களில், அவ்வந்நிலத்து நிகழும் ஒழுக்கத்தொடு அமையும் பயனுடையவாதல் வேண்டும். ஈண்டு 'நிலத்தின் பயத்த' என்பது நிகழும் ஒழுக்க நிலத்தைக் குறிக்கும். அஃதாவது, அந்நிலத்தில் நிகழ்வதாய்க் கூறப்படும் திணையைச்சுட்டும். (நெய்தற்) கடற்கருப்பொருள்களைக் காட்டொடு சேரக்கூறுமிடங்களில், அப்பொருள்கள் காட்டிற்குரிய பயன்தருமென்பது இச்சூத்திரக் கருத்தன்று; காட்டில் நெய்தற்றிணை நிகழுமிடத்துக் காட்டிற்குரிய வல்லாக் கருப்பொருள்கள் வரின், அவை ஆங்கே நெய்தற்றிணைக் கேற்பனவாய் அமையக் கூறுவது புலனெறி வழக்காம் என்பதே இச்சூத்திரம் நுதலிய பொருளாகும்.

> "பொரியரைக் கோங்கின் பொன்மருள் பசுவீ
> விரியிணர் வேங்கையொடு வேறுபட மிலைச்சி
> விரவுமல ரணிந்த வேனிற் கான்யாற்றுத்
> தேரொடு குறுக வந்தோன்
> பேரொடு புணர்ந்தன் றன்னையிவ ளுயிரே".
> (ஐங்குறு. 367.)

இதில், பாலைக்குரிய வேனிற்காலத்து, முல்லைக்கான் யாற்றில், புணர்வுத்திணையில், பாலைக்கோங்கின் பசுமலரோடு குறிஞ்சி வேங்கைப்பூவும் விரவிப் புணர்ந்துபிரிந்தோர் ஒழுக்கொடு பொருந்தவந்த செவ்வியும் வாய்ப்புந் திகழ்வது காண்க.

சூத்திரம் :—20.

பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதொறு மரீஇய திணைநிலைப்பெயரே.

கருத்து:—இது, கருப்பொருள்களொடு அடைவுடைய அகத்திணைக் குரியரான அவ்வந் நிலமக்களின் பெயர்ப்பாகுபாடு கூறுகிறது.

பொருள்:—திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே = ஒவ்வோரொழுக்கத்தொடும் பொருந்திய முல்லை முதலிய நிலங்களில் புலனெறி வழக்கில் அகத்திணைக்குரியராய்க் கூறப்படும் மக்கட்பெயர்கள்; பெயரும் வினையுமென் றாயிருவகைய = அவ்வந்நிலத்தானமையும் பெயர்ப்பெயரும், அந்நிலத்து மக்களின் தொழிலான் அமையும் வினைப்பெயரும், என்று அவ்விரண்டு கூறுபாட்டினையுடைய வாகும்.

குறிப்பு:—ஈற்றேகாரம் அசைநிலை. பெயரும் வினையும் என்பவற்றுள் உம்மை எண்ணும்மை. 'திணைநிலை' என்பது ஆகுபெயராய்த் திணைநிலையினரைக் குறிக்கும்.

நானிலங்களினும் உள்ள மக்கள், அகத்திணைக் குரியராய்ச் செய்யுளிற் கூறப்படுங்கால், முல்லை முதலிய அவ்வத்திணை நிலங்களுக்குரிய இயல் இயைபுடைய பெயர் கொள்ளுதல் ஒன்று; அவ்வாறன்றித் தத்தம் தொழிற் கியைபுடைய பெயர் கொள்ளுதல் ஒன்று. இவ்விரு முறைகளே தமிழகத் தொல்லை மரபொடு அடைவுடைய

வாகும். தொல்காப்பியர் காலத் தமிழுலகில் தமிழரிடைப் பிறப்பளவில் என்றும் உயர்வு தாழ்வுடன் வேறுபாடுடைய சாதிவகுப்புக்கள் கிடையா. அதனால் அக்காலத் தமிழ் மக்கள் தத்தம் நிலத்துக்கேற்றாங்கு ஆயர், குறவர், உழவர், மறவர் என்றழைக்கப்பட்டார்கள்.

இனி, ஒரு நிலத்துள்ளார் அந்நிலத்திற்குரிய தொழில் மேற்கொள்ளாது பிறிது தொழில் கையாளுவராயின், அவரவர் செய்தொழில் வேற்றுமையால் தொழில் குறிக்கும் ஏற்புடை வினைப்பெயர்களாலும் அழைக்கப் படுவர். நுளைஞர், பரவர் என்பன நெய்தனிலஞ்சுட்டிய மக்கட்பெயர். வலையர், உமணர் என்பன நிலஞ்சுட்டாது, வலைவீசிப் பிழைக்குந் தொழிலுடையாரையும், உப்பு உண்டாக்கி விற்கும் தொழிலுடையாரையும் சுட்டும் வினைப்பெயர்கள். தொழில் எதுபுரிந்தும் நெய்தனிலம் வதிபவரைப் பரவர் அல்லது நுளைஞர் எனவழங்கல் ஒரு முறை; அப்போது அப்பெயர் நெய்தனிலமக்கள் என்னும் பொருட்டாகும். இனி எந்நிலத்துறையினும் வலைத் தொழில் புரிந்து வாழ்வார் என்பதைக் குறிக்குங்கால், வலையர் என்னும் வினைப்பெயரால் அத்தொழிலுடையாரைச் சுட்டுவது ஒருமுறை. தமிழகத்திற் பண்டைக் காலத்தில் பிறப்பால் சாதிவகுப்புக்கள் இல்லாமையானும், தமிழ் மக்களெல்லாரும் விரும்பியாங்குத் தத்தமக்கேற் புடைய தொழில் கொள்ளும் உரிமையுடையராதலானும், நிலம் தொழில் வகைகளால் வேறுபடினும் உணவு மணங் களில் வேறுபாடின்றி யாண்டும் எல்லாரும் ஏற்றபெற்றி

கலந்து ஒன்றிவாழ்ந்தாராதலானும், அவர் அகவொழுக்கங்கூறும் புலனெறி வழக்கில் அக்காலத்தவரிடை நிலைபெறுற்ற நிலப்பெயர் வினைப்பெயர்களால் தமிழ் மக்கள் அழைக்கப்படும் மரபுண்மையை தொல்காப்பியர் ஈண்டு விளக்கிப் போந்தார். நிலம்பற்றிய மக்கட் பெயர், பெயர்ப் பெயர்; செய்யும் வினைபற்றிய மக்கட்பெயர் வினைப்பெயர்.

அகம் 110-ம் பாட்டில், போந்தைப் பசலையார், நுளைச்சியைத்தலைவியாகவும், நெடுந்தேரூரனைத் தலைவனாகவும் திணைநிலைப்பெயர் அமைத்துக் கூறியுள்ளார். நற்றிணை 45-ம் பாட்டில்.

"நெடுங்கொடி நுடங்கு நியமமூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதற்" றலைமகனாகவும்,

"நிணச்சுறா வறுத்த வுணக்கல் வேண்டி, யினப்புள் ளோப்பும்" புலவுநாறும் பரவர்மகள் தலைமகளாகவும், இவ்வாறு இவ்விருவேறு நிலமக்கள் காதற்றலைமக்களாய் அகத்திணைக்குரியரா யமைந்திருப்பது இங்கு கருதத்தக்கது. அகம் 280-ம் பாட்டில், பரவர் மகளைத் தலைவியாகவும், பிறிதொரு நிலமகனைத் தலைவனாகவும் அமைத்து அம்மூவனார் கூறியதும் அக்காலத் தமிழ்மரபு அதுவாதலான் என்பது வெளிப்படை. இன்ன பல பழம்பாட்டுக்களால் பண்டைத்தமிழகத்தில் நானில மக்களுள் மணமும் உணவும் பிறப்பு நிலை வினைகள் பற்றி வரையப்படாமல் கலந்து கையாளப்பட்டன என்பது தெள்ளத்தெளியக் கொள்ளப்படும். மரபியலில் காணப்

பெறும் வருணவகைபற்றிய சூத்திரங்கள் இடைச் செருகல் என்பது பிறுண்டு விளக்கப்படும்.

"யாயும் யாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே".

என்னும் குறுந்தொகை (40-ஆம்) பாட்டானும் பிறப்புதொழில்வகை கருதாமல் ஒத்த அன்பே மணத் திறகுப் போதியது என்னுந் தமிழ்மரபு விளக்கமாகும்.

நானிலத் தமிழ்மக்களும் தம்முள் வேறுபாடின்றி மணந்து கொள்ளும் பழைய வழக்குண்மை, சாதி வெறி யலேக்கும் பிற்காலக் கோவைகளும் பலநில மக்களின் கலப்புமணம் குறித்து தமிழ்மரபு வழுவாமல் அகத் துறைகளமைத்துக் கூறுவதாலும் வலிபெறுகின்றது.

"கழைகோடு வில்லியைச் செற்றூர் தியாகர் கமலவெற்பின்
உழைகோடி சுற்றுங் கிரிமெம தூரும தூர்மருதம்;
தழைகோடி கொண்டு சமைத்ததெம் மாடை தனித்தனியோர்
இழைகோடி பொன்பெறு மேயும தாடை யிறையவரே".
(எல்லப்பநயினர் திருவாரூர்க்கோவை. செய். 101)

இவ்வுண்மையை மறந்து தொல்காப்பியர் நூலின் உரைகாரர் இப்பண்டைத் தமிழிலக்கண (நூற்) சூத்திரத் திற்கு, அவர்கால இயைபற்ற புராணக் கதைகளையும் இயல்வழக்கற்ற ஆரியக்கொள்கைகளையும் புகுத்தி,

பொருந்தாப் புத்துரைகள் கூறி மயங்கவைத்தார். ஆரியருள் நான்கு வருணத்தாருக்குமே தமிழரின் அகத் திணைக் களவியல் ஒழுக்க ஆட்சியுரிமை அவர் தம் தரும சாத்திரங்களிலும் வழக்கிலும் இன்மையானும், ஆரிய தரும நூல்கள்கூறும் உயர்பிறப் புரிமையுடைய இடை யிருவருணத்தார் தமிழகத்தென்று மில்லாமையானும், இவருரைகள் பொருந்தாமையறிக. அன்றியும், தமிழி லக்கண நூல் "...........வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில் நாற்பெயரெல்லை யகத்தவர் வழங்கும் யாப் பின் வழியது" எனத் தொல்காப்பியர் தாமும், "வட வேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறும் நல்லுல கத்து வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி, செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடுமுந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோனே..........தொல்காப்பியன்," எனத் தொல்காப்பியரின் பாயிரமும் வற்புறுத்துவதானும், இங்குத் தொல்காப்பியரின் சூத்திரங்கள் குறிப்பன எல்லாம் ஆரியவருண அறங்களேயல்ல, தமிழ் மரபும் தமிழர் வழக்கங்களுமே யாமென்பது தேற்றம். இவ் வுண்மைகள் இனிவருஞ் சூத்திரங்களுக்கும் ஒக்கும்.

சூத்திரம்:—21.

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்;
ஆவயின் வரூஉங் கிழவரு முளரே.

கருத்து:—இது, மேற்சூத்திரத்திற் கூறிய திணை நிலைப்பெயர் வகைகளும் அப்பெயருடையாரின் அகத் திணைக்குரிமையும் விளக்குகிறது.

பொருள்:—ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்= ஆயர் வேட்டுவர் என்பன ஆண்பால் சுட்டும் முல்லை நில மக்களின் திணை நிலப்பெயர்களாம்; ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே = அந்நிலத்து அகத்திணைக் குரிமை கொள்பவரும் உளராம்.

குறிப்பு:—ஈற்றேகாரம் அசைநிலை.

ஆயர் என்பது முல்லைநில மக்களுக்குத் திணைப் பெயராகும். அதுவேபோல், வேட்டுவர் என்பதும் முல்லைநில மக்கட் பெயரென்று இளம்பூரணரும், குறிஞ்சி நிலமக்கட் பெயரென்று நச்சினார்க்கினியரும் கூறுவர். இவருள் இளம்பூரணர் கூற்றுப் பொருட் சிறப் புடையது. "மாயோன் மேய" என்னும் முன் 5 ஆஞ் சூத்திரத்தில் திணைநிலங்களில் முதலில் வைத்தெண்ணிய முல்லைநில மக்களுக்குரிய பெயர்களுள், ஆயரென்னும் நிலப்பெயரும் வேட்டுவரென்னும் வினைப்பெயரும் அந் நிலத் தாண்மக்களின் திணைப்பெயர்களாக இச்சூத்திரத் தில் தொல்காப்பியர் எடுத்துக்காட்டினாரெனக் கொள் வதே — 'பெயரும் வினையு' மென்னும் மேற்சூத்திரக் கருத்தை விளக்குதற்கு அடைவுபட அமைவதாகும். வேட்டுவரென்பது முல்லைத்திணைமக்களின் 'வேட்டு' வினை சுட்டுந் திணைப்பெயராகும். அதனால், இந்நூலார் மேலே "திணைநிலைப்பெயர் - பெயரும் வினையுமென் றாயிரு வகைய" எனத்தொகுத்துக் கூறியதை, இச்சூத்திரத் தில் வகுத்து மெய்ந்நிறுத்து விளக்கினார்.

இதில் திணைப்பெயரென்றும், இதற்கு முன்னும் பின்னும் வரும் சூத்திரங்களில் திணைநிலைப்பெயரென்றும் வருவன அகவொழுக்கத்துக் குரிமைகொள்வார் பெயரையே குறிக்கும். அக்காலத் தமிழ் மரபுக்கும், உண்மை யுலகியல் வழக்குக்கு மேற்ப, தமிழ் மக்களெல்லாரும் அகத்திணைத் துறைகளில் காதற்றலைமக்களாதற் குரியர் என்பதை இந்நூலார் இங்குப் பலசூத்திரங்களாற் றெளிக்கின்றார். நாடாட்சிக்குரியரே அகத்திணைக் களவித் தலைமக்கள் ஆவதற்குரியர் போலவும், அல்லாத நானில மக்களும் வினைவலர் அடியார் முதலாயினாரும் அன்பினைந் திணைத்துறைகளில் களவித்தலைவர் ஆகார் போலவும், பொருள்படுமாறு இச்சூத்திரங்களுக்குப் பிறர் கூறுமுரை பொருந்தாது. 'தலைமக்கள்' என்பது ஈண்டு அகத்திணைக் களவித் தலைமக்களையே குறிக்கும்; நாடாட்சித் தலைமை குறிப்பது ஈண்டைக்கு வேண்டப்படா.

பரத்தி ஒருத்தி, "நியமமூதூர்க் கடுந்தேர்ச்செல்வன் மகனின்" மெய்க்காதலை யிகழ்ந்து, யாம் "புலவு நாறுதும், செலநின் றீமோ; (கடலின்) "பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை நும்மொடு புரைவதோ? அன்றே" என மறுப்பவள், தமக்கேற்ற தலைவர் தம் மினத்தவருள்ளுமுளர் எனத்தெளித்து, "எம்மனோரிற் செம்மலுமுடைத்தே" (நற். 45) எனத் விளக்கும் தருக்குரை, தமிழர் எவரேனும் அகத்துறையிற் றலைமக்களுரிமை யனைத்துமுடையர் என்னுமுண்மையை வலியுறுத்துதல் காண்க. இன்னும் இதுபற்றி மேற்சூத்திர உரையிற் காட்டிய பாட்டுக்களுடன், பின்வரும் பண்டைச் சான்

ஞோர் செய்யுளடிகளாலும் தமிழரிடை நிலம் தொழில் நிலை பிறப்பு வகைகளால் அகத்திணைக்குரிமை யாருக்கும் விலக்கில்லையென்பது தெற்றென விளங்கும். "நெல்லும் உப்பும் நேரே யூரீர், கொள்ளீரோ வெனச் சேரி தோறும்" உப்புச் சுமந்து விற்றுத்திரியும் உமண்மகளைத் தலைவியாக்கி, அம்மூவனார் கூறிய அகம் 390 ஆம் பாட்டு இவ்வுண்மையை வலியுறுத்தும்.

"..................சாரற் சிறுகுடிக் குறவன் பெருந் தோட் குறுமகளை"த் தலைவியாக்கும் "மால்வரை" என் னும் கபிலர் குறும்பாட்டும், (குறுந். 95)

"வரையகச் சிறுதினைச் செவ்வாய்ப் பாசினம் கடி யும் கொடிச்சி"யைத் தலைமகளாக்கும் நற்றிணை (134-ம்) பாட்டும்,

இன்னும் இதுவேபோல் பல பழம்பாட்டுக்களும் பிறப்பாற் சிறப்பெதுவுமில்லாத ஆயர், குறவர், நுளையர் முதலிய யாரும் காதற்றலைமக்களாதற்குரியர்-என்பதைத் தெளிவாக்கும் :—

1. "பாங்கரும் பாட்டங்காற் கன்றொடு செல்வேம்,
தாம்பி னொருதலை பற்றினை, ஈங்கெம்மை [எம்
முன்னைநின் றூங்கே விலக்கிய எல்லா! நீ
என் எமுற்றாய்? விடு.
விடேன், தொடீஇய செல்வார்த் துமித்தெதிர்
கடுவய நாகுபோ னோக்கிக் கொடுமையா [மண்டும்
னீங்கிச் சினவுவாய் மற்று.

..............................................
கலத்தொடியாஞ் செல்வுழிநாடிப் புலத்தும்
வருவையா ஞணிலை நீ.

(முல்லைக்கலி—16.)

2. கடிகொள்ளிருங்காப்பிற்புல்லினத்தாயர்
குடிதொறும் நல்லாரை வேண்டுதி, எல்லா!
இடுதேள்மருந்தோ நின்வேட்கை? தொடுதரத்
துன்னித்தந் தாங்கே நகைகுறித் தெம்மைத்
திளைத்தற் கெளியமாக் கண்டை, அளைக்கெளியள்
வெண்ணெய்க்கும் அன்னளெனக் கொண்டாய்; ஒண்ணுதால்!
ஆங்குநீ கூறி னனைத்தாக; நீங்குக.
..............................................
நின்றாய் நீ சென்றி, எமர்காண்பர்; நாளைஎங்
கன்றொடு சேறும் புலத்து.

(முல்லைக்கலி—10.)

3. யாரிவன் என்னை விலக்குவான்? நீருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை! நீமாறு, நின்னொடு
சொல்லல் ஓம்பென்றார் எமர்".

(முல்லைக்கலி—12.)

இவற்றால் முல்லைநிலத்தில் ஆயர் அகவொழுக்கத் தலைமக்களாதற் குரியரென்பது தெளிவு.

"சிலைவிற் பகழிச் செந்துவ ராடைக்
கொலைவில் எயினர் தங்கை நின்முலைய
சுணங்கென நினைதி நீயே;
அணங்கென நினையுமென் னணங்குறு நெஞ்சே".

(ஐங்குறு. 363.)

என்னும் ஐங்குறு நூற்றுப்பாட்டால், முல்லைநிலத்தில் வேட்டுவத்தொழிலுடைய எயினர் தங்கை தலைமகளாதலறிக,

இனி, "என்னுள் வருதியோ நன்னடைக்கொடிச்சி" என்னும் நற்றிணை 82-ஆம் பாட்டில்வரும் அம்மள்ளனார் செய்யுளடியும்,

"உறுகழை நிவப்பிற் சிறுகுடிப் பெயரும்
கொடிச்சி செல்புறம் நோக்கி
விடுத்த நெஞ்சம் விடலொல் லாதே".

என்னும் நற்றிணை 204-ஆம் பாட்டில் மள்ளனார் கூறும் அடிகளும் குறிஞ்சிக் குறத்தி தலைமகளாதற்கு மேற்கோள். அவ்வாறே,

"மீனெறி பரதவர் மடமகள்
மானமர் நோக்கங் காணலூங்கே"

என்னும் வெள்ளியந்தின்னனார் நற்றிணை 101-ஆம் பாட்டடிகளும்

"முடிமுதிர் பரதவர் மடமொழிக் குறுமகள்
..............................................
கொலைவெஞ் சிறூஅர் பாற்பட் டனளே"

என்னும் நற்றிணை 207-ஆம் பாட்டடிகளும் நெய்தற் பரத்தி தலைமகளாதற்கு மேற்கோளாம்.

இவ்வாறு, தமிழருள் யாரும் காதற்றலைமக்களாய் அகத்திணைக்கு உரிமைகொள்வர் என்பதைச் சுட்டுதற் காகவே, 'ஆவயின் வரூஉங் கிழவரு முளரே' என்று இதில் இந்நூலார் அமைவுபெறக்கூறித் தெளியவைத் தார்.

"பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே;
எம்மனோரிற் செம்மலு முடைத்தே",
(நற்றிணை. 45.)

என்று

'உணக்கல் வேண்டி யினப்புள்ளோப்பும் புலவு நாறும்' பரதவர் மகளைக் கிளவித்தலைவியாகக் கூறும் நற்றிணையடிகளானும் இவ்வுண்மையறிக.

சூத்திரம்:—22.

ஏனோர் மருங்கினு மெண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே.

கருத்து:—இது, மேற் சூத்திரத்திற் கூறிய முல்லை நிலம் ஒழிய, பிறநில மக்களின் திணைநிலைப்பெயர்களும் அவ்வாறே யமையும் என்பது கூறுகின்றது.

பொருள்:—எண்ணுங்காலை = ஆராயும் பொழுது; ஏனோர் மருங்கினும் = (மேற்கூறிய ஆயர் வேட்டுவ ரென்னும் முல்லைநில மக்கள் தவிரப்) பிறநிலமக்கள் பாலும்; திணைநிலைப்பெயர் ஆனவகைய = அவர்க்குரிய அகத்திணைக்குரிப்பெயர்கள் சுருங்கக் கூறியவையாப் பல திறப்பட்டனவாகும்.

குறிப்பு:— ஈற்றேகாரம் அசை. ஏனோர்மருங் கினும் என்பதிலும்மை, முன் ஆயர் வேட்டுவரொப்ப அவரல்லாப் பிறநில மக்களிடத்தும் என்னும் பொருட் டாதலால், எச்ச வும்மையாகும்.

நிலம்பற்றியும் தொழில்பற்றியும் தமிழ்மக்கள் கொள்ளும்பெயர் பலவாதலானும், அவ்வாறு வேறுபடும் பெயர்க்குரியார் யாவரும் அகப்பகுதியில் எல்லாத்திணை களிலும் கிழவராதற் குரியராதலானும், திணைக்குரிய அன்னோர் பெயர்கள் கூறியமையா ஆதலின் 'ஆனவகைய திணைநிலைப்பெயர்' என்று இங்குக் கூறப்பட்டது.

இப்பெயர் வகைகளை "பெயரும் வினையு" மென் னும் முன் சூத்திரத்தின் கீழ்நச்சினார்க்கினியர் கூறு முறைக்குறிப்புக்களானோராங்கறிக.

மேற்சூத்திரத்தில் முல்லைநில மக்கள் தலைமக்களா தல் கூறப்பட்டது. அந்நிலத்துப் பெயர்ப்பெயருடைய ஆயரும், வினைப்பெயருடைய வேடரும் தலைமக்களாய

குறிப்புடைய பழைய பாட்டுக்களுமாங்கே காட்டினேம். இனி, முல்லை யொழிந்த மற்றைய மூன்று நிலமக்களு மவ்வாறே காதற்றலைமக்களாவர் என இச்சூத்திரம் கூறுதலால், அதற்குச் செய்யுள் வருமாறு.

(1) குறிஞ்சிநில மக்கள் தலைமக்களாதற்குச் செய்யுள் :—

(அ) "யானை யுழலு மணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்;
ஏனலு ளைய வரவுமற் றென்னைகொல்?
காணினுங் காய்வ ரெமர்" (திணைமொழி. 6.)

இதில், கானக்குறத்தி தலைவியாவதைக் காண்பாம்.

(ஆ) "குன்றக்குறவன் காதல் மடமகள்".
(ஐங். 256.)

எனுங் கபிலர் குறுநூற்றடியுமது.

குறத்தியர் தலைமகளிராகச் சுட்டும் பிற பாட்டுக்களை மேலே குறித்தோம்.

(2) (அ) "அறிகரிபொய்த்தல் ஆன்றோர்க்கில்லை", எனும் குறும்பாட்டில் (குறுந்.184.) "நுண்வலைப் பரதவர் மடமகள்" தலைமகளாதலறிக.

இன்னும்,

(ஆ) "பெருங்கடல் வெண்சங்கு காரணமாப் பேணா
திருங்கடன் மூழ்குவார் தங்கை—இருங்கடலுள்
முத்தன்ன வெண்முறுவல் கண்டுருகி நைவார்க்கே
ஒத்தனம் யாமே யுளம்" (திணைமாலை நூற்றைம்பது. 33.)

எனும் திணைமாலை வெண்பாவினும் சங்கு குளிப்பாரின் தங்கை தலைமகளாவதறிக.

(3) (அ) மருதநில மக்கள் தலைவராதலை,

(அ) "தொண்டி யன்ன என்னலந் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்ந நின்சூளே".
(குறுந். 238.)

எனுங்குன்றியன் குறும்பாட்டிற் காண்க.

அன்றியும்,

(ஆ) "மேகந்தோய் சாந்தம் விசைதிமிசு காழகி
னாகந்தோய் நாக மெனவிவற்றைப்—போக
எறிந்துழுவார் தங்கை யிருந்தடங்கண் கண்டு
மறிந்துழல்வா னேனிம் மலை"
(28—திணைமாலை. 150.)

எனும் வெண்பாவில் நிலந்திருத்தி உழுவாரின் பெண் தலைமகளாதலறிக.

சூத்திரம்:—23

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்.

கருத்து:—இஃது, மேற்கூறியாங்கு நானிலமக்களே யன்றிப் பிற ஏழை மக்களும் அகத்திணைக் குரிமைகொள்வார் என்று கூறுகிறது.

பொருள்:—புறத்து = மேற்கூறிய நானிலமக்களின் திணைப்பெயர் வகுப்புக்களிலடங்காத; அடியோர் பாங்கினும் = பிறர்க்கடிமையாவாரிடத்தும்; வினைவலர் பாங்கினும் = அடிமையரல்லாக் கம்மியர்போன்ற தொழிலாளரிடத்தும்; கடிவரையில = அகத்திணை யொழுக்கங்களை நாட்டிச் செய்யிட்செய்தல் விலக்கில்லை; என்மனார் புலவர் = என்பார் பொருள்நூல்வல்லார்.

குறிப்பு:—ஈரிடத்தும், "பாங்கினும்" எனவரும் உம்மைகள், முன்னைச் சூத்திரங்கள் கூறுந்திணைமக்களொப்ப என இறந்தது தழீஇயும், பின்னர் 'ஏவன் மரபினேனோரும்' என்பதை நோக்கி எதிரது தழீஇயும் வந்த எச்சவும்மைகளாம்.

ஈண்டுப் புறத்தென்பது, மேற் சூத்திரங்களிற் கூறப்பட்ட நானிலமக்கள் வகுப்புக்களின் ஐந்திணைக்குப் புறத்தேயெனப் பொருள்கொண்டு, பழைய வுரைகாரர் இச்சூத்திரம் அடியோர் வினைவலர் போன்றவர்க்கு ஐந்திணை யொழுக்கம் உரித்தன்றெனவும், அவற்றின் புறத்தவான கைக்கிளை பெருந்திணைகளே அத்திறத்தார்க்குரிய அகவொழுக்கங்களாமெனவும், கூறுவாராயினர். அவர் கூற்றுக்கள் சூத்திரச் சொற்றொடர்களுக்கு அமையாமையோடு, முன்னுக்குப்பின் அவ்வுரையாளர் கூறுவனவற்றிற்கே மாறாக முரணுவதாலும், அவை பொருளன்மையறிக. இளம்பூரணர் இச் சூத்திரத்தின் கீழ், "இது, நடுவணைந்திணைக்குரிய தலைமக்களை (முன்) கூறி, அதன் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்குரிய மக்களையுணர்த்துதல் நுதலிற்று" என்று குறிக்கின்றார். அன்பினைந்திணையான ஒத்தகாமம் மேற்கூறிய நானில

மக்களுக்குமட்டும் அமையுமன்றி, இச்சூத்திரங்கூறும் அடியோர் வினைவலர்களுக்கு என்றும் இன்றென்பதே இளம்பூரணர் கருத்தென்பது ஈண்டவர் கூறுங்குறிப்பால் அறிகின்றோம். மேன்மக்களே என்றும் அன்பினைந் திணைக் குரியர், மற்றையோர் இழிதகவுடைய கைக்கிளை பெருந்திணைகளுக்கே உரியராவர் என்பதிவர் கருத்தாமேல், முன் முதற்சூத்திர உரையில், பிரமமுதல் தெய்வமீறாக "நான்கு மணமும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கெனப் பயின்று வருதலானும். அது பெருந்திணையெனக் கூறப்பட்டது" என்றிவரே கூறுதல் முரணாகும். ஆனால், பெருந்திணை பெருவழக்கிற்றென்பதும், அது மேன்மக்கள் மாட்டு நிகழ்வதென்பதும், ஆண்டிவர் கூறிப்போந்தார். அன்றியும், 'எவன் மரபின்' என்னும் அடுத்த சூத்திரத்தின்கீழ் "ஏவுதன் மரபையுடைய ஏனையோரும் கைக்கிளை பெருந்திணைக்குரியர்" என்றிவரே கூறுகின்றார். எனவே, இச்சூத்திரத்திற்கு முன்னும் பின்னும் இவ்வுரையாசிரியர் கைக்கிளை பெருந்திணைகளுக்கு மேன்மக்கள் பெரும்பாலும் தலைமக்களாதற்குரியர் என்று தம் கருத்தை வலியுறுத்துபவர், இச்சூத்திரத்தின்கீழ் அதற்கு மாறாகக் கீழ்மக்களே கைக்கிளை பெருந்திணைகளுக்குரியர் என்று கூறுவது மாறுகொளக் கூறலென்னுங் குற்றத்திற்கவரை யாளாக்குகிறது.

இவ்வாறே, நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்குப் பொருள் கூறுவதும் பொருந்தாது. கைக்கிளை பெருந்திணைகளை ஆசிரியர் இவ்வியலின் இறுதியில் 50, 51-ஆம்

சூத்திரங்களாக நிறுத்தி, அவற்றிற்கு முன்னெல்லாம் இச்சூத்திரத்திற்கு முன்னும் பின்னும் அன்பினைந்திணைப் பகுதிகளையே கூறிச் செல்வதால், இதில் அவர் கருத்து வேறுபாடு சுட்டப் பெறாத நிலையில் ஐந்திணைகளுக்கு வேறான கைக்கிளை பெருந்திணைகளை அவர் கூறுவதாகப் பொருள் காண முயல்வது அமைவுடையதாகாது. இனி, கைக்கிளை, பெருந்திணை போலவே இழிதக வுடைய பொருந்தாக்காமம் என்று இவ்வுரையாளர் கருதுவதால், ஈண்டுக்கூறப்படும் அடியோர் வினைவலராகிய மேன்மக்களல்லாதார் இழிதகவுடைய அப்பொருந்தாக் காமத்திற்கு உரியரென்று இவர்கள் பொருள் கூறுகின்றனர் போலும். தொல்காப்பியர் பெருந்திணையொன்றையே பொருந்தாக்காமமெனக் கூறி, கைக்கிளையைக் குற்றமற்ற ஒருதலைக்காதல் என வேறுபடுத்தி விளக்குகின்றார். ஒருதலைக்காதல் கைக்கிளை. காதலித்தோரைக் காதலிக்கப்பட்டோரும் காதலித்தால், அது ஒத்த காமத்தின்பா லடங்கும். அவ்வாறின்றிக் காதலிக்கப்பட்டோர்பால் காதலின்மை தெளியப்பட்டால், ஆண்டது பெருந்திணையிலடங்கும். அவ்வாறடக்காமல், பொருந்தாக்காமமான பெருந்திணையும் ஒத்த காமமான அன்பினைந்திணையும் வெவ்வேறு கூறி, அவற்றின் வேறுபட்டதாய்க் கைக்கிளையை இந்நூலார் பிரித்து இயல் விரித்தலால், கைக்கிளை அன்பொத்த இருதலைக்காமம் அன்றாயினும் அன்பற்ற பெருந்திணையுமாகாமல், குற்றமற்ற ஒருதலைக்காமமாய் எல்லோர்பாலும் கடியப்படாத தல் ஒழுக்கம் என்பதே தொல்காப்பியர் கருத்தென்பது

தெளிவாகும். "பாங்கரும் பாட்டங்காற் 'கன்றொடு செல்வேம்" என்னும் முல்லைக்கலியும், "என்னோற்றனை கொல்லோ" என்னும் மருதக்கலியும், "அணிமுக மதி யேய்ப்ப" என்னும் குறிஞ்சிக்கலியும், அடியோர், வினை வலர் அகத்திணைத்தலைமக்களாதற் குதாரணமாகும். அவை தலைமகளின் அன்புடன்பாடு சுட்டலின், பெருந் திணையும் கைக்கிளையுமாகா; இருவருமொத்த அன்புத் திணையேயாம்.

1. அடியார் அகப்பொருட்டலை வராதற்குச் செய்யுள்:-

"என்னோற்றனை கொல்லோ" (கலி. 94.)

என்னு மருதக்கலியில்,

"ஓஒகாண், நம்முணகுதற் றொடீஇயர் நம்முண்,
நாமுசாஅம்; கோனடி தோட்டேன்;—ஆங்காக;
சாயலின் மார்ப அடங்கினேன், ஏஎ
பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை வேண்டுவல்,
கண்டாய் தகடுருவ! வேறுகக் காவின்கீழ்
போதர கடாரப் புல்லி முயங்குவேம்"
[போதரகடார=போதரு+அகடார.]

என வருதலால், தலைமக்கள், தம்முரியராகாப் பிறரடிய ராதல் தெளிக.

2. இனி வினைவலர் தலைமக்களாதற்குச் செய்யுள்:—

"காரார்ப் பெய்த கடிகொள்வியன் புலத்து" (கலி.109)

என்னு முல்லைக்கலியில், "இவடான், திருந்தாச்சு மட்டினள், ஏனைத்தோள்வீசி வரிக்கூழை வட்டிதழீஇ, அரிக்குழை யாடற் றகையள்" என வருதலால், இதிற் றலைமக்கள் வினைவலராதலறிக. இன்னும் "கடிகொளி ருங்காப்பில்" (கலி. 110) "பாங்கரும் பாட்டங்கால்" (கலி. 116) "யாரிவன் என்னை விலக்குவான்"(கலி. 112) என்னுங் கலிப்பாக்களும் வினைவலர் பாங்கினும் அக ஒழுக்கம் கடிவரையின்மை குறிப்பனவாகும்.

"பெருங்கட லுள்கலங்க நுண்வலை வீசி
ஒருங்குடன் தன்னைமார் தந்த—கொழுமீன்
உணங்கல் புள்ளோப்பும் ஒளியிழை மாதர்
அணங்காகு மாற்ற வெமக்கு"

(ஐந்திணை ஐம்பது. 47.)

எனு மாறன்பொறையனார் வெண்பாவும் வினைவலர் காத லுரிமை குறிப்பதறிக.

சூத்திரம்:—24.

ஏவன் மரபி னேனோரு முரியர்
ஆகிய நிலைமை யவரு மன்னர்.

கருத்து:—இதுவும் அகப்பகுதியில் நானிலமக்களே யன்றி, திணைப்பெயர்க்குரிமை கொள்வாரின்னுஞ் சில ருளர் என்பது கூறுகின்றது.

பொருள்:-ஏவன் மரபின் ஏனோரும் = ஒருவரிடைத் தடைந்து அவர் குற்றேவல் செய்வதையே மரபாக

வுடைய (அடியாரும் வினைவலருமல்லாத) பிறரும்; உரியர் =நானில மக்களைப்போலவே அகத்திணைக்குரிமையு டையராவர்; ஆகிய நிலைமையவரும் = அவ்வாறு ஒரு வரையுமுடையாமல் நாள்தோறும் ஏவுவார் தொழில் ஏற் பதாகிய நிலைமையுடையோரும்; அன்னர் =(அடைந்தாட் படும் குற்றேவல் மக்களைப் போலவே) அகத்திணைக் குரிமையுடையராவர்.

குறிப்பு:—'ஏனோரும்' 'நிலைமையவரும்' என்ப வற்றினும்மைகள் முன்னர்க்கூறியவரைக் குறித்துநிற்கும் இறந்தது தழீஇய எச்சவும்மைகளாம். இதற்கும் கைக் கிளை பெருந்திணைகளை யிழுத்துப் புகுத்திக்கூறும் உரை காரர் பழையவுரை பொருந்தாதென்பதை மேற்சூத்திரத் துக்குக் கூறிய குறிப்புக்களைக் கொண்டுதெளிக.

ஏவன்மரபு என்பது, குற்றேவற்றொழில் புரிவார் சிறியநிலை குறிக்குமல்லால், பிறரை ஏவும் பெருவாழ் வுரிமை குறியாது; ஏவுதல் மரபென்னாது ஆசிரியர் ஏவன் மரபு என்றாராதலின். ஏவலர், ஆட்பட்ட அடிமைகளின் வேறுவர். ஆகவே, அடிமையாய் ஆட்பட்ட அடியார் வேறு; அடிமைப்படாமல் ஒருவரையடுத்து அவர்க்கே குற்றேவல் செய்து வாழும் ஏவலர் வேறு; ஒருவரையு மடையாமல் நாள்தோறும் வேண்டுவோர்க்கு அவரேவிய செய்து வாழ்வாராய ஏனையோர் வேறு. இம்மூவருள் அடங்காராய்க் கம்மியர் போன்ற ஏவலரல்லாத் தொழி லாளரான வினைவலர் வேறு. ஆகலின் இந்நால்வரையும் முறையே ஆசிரியர் இச்சூத்திரங்களில் நானிலமக்கள் போலவே அகவொழுக்கத்திற்குரிமையுடையரென்று விதந்துகூறினர்.

"அறப்பரிசாரமும்......உரிமைச்சுற்றமோ டொருதனிப் புணர்க்க" எனுமனையறம்படுத்த காதையடிகள் தமிழ்த்தனிக்குடிமக்களின்கீழ் ஏவலரும் அடிமைத்திரளும் வெவ்வேறுதலை விளக்குகிறது. பரிசாரம், ஏவற்றொழில்; ஈண்டது புரிபவருக்கு ஆகுபெயர். உரிமைச்சுற்றம், அடிமைத்திரள் என்றே சிலப்பதிகார உரைகாரரிருவரும் கூறுதலறிக. "குற்றிளையோரும் அடியோர் பாங்கும்" எனும் கொலைக்களக்காதை யடிகளும் பெருங்குடிதோறும் குற்றேவல் புரிவோரும் அடிமைகளும் உண்மையை உறுதிப்படுத்துகிறது. இனி, இந்திரவிழவூரெடுத்த காதையில் "தொழில் பலபெருக்கிப் பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்;...........சிறுகுறுங் கைவினைப் பிறர்வினையாளரோடு" எனவருமடிகளில் உயர் குடிமக்களின் ஏவலரல்லா "வினைவலரும்", பிறர் தம் ஏவலை மரபாகக்கொண்ட ஏனோரும் பழந்தமிழகத் துண்மை கூறுகிறது. பின் கட்டுரை காதையில் "ஏவலிளைஞர் காவற்றொழுது" எனவருதலால், "ஏவல்மரபு", பிறரை ஏவும்பெற்றி குறியாது, பிறரேவலைத் தாம்புரியு நிலையையே குறிப்பது தெளிவாகும். இப்பழந்தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளடிகள், தொல்காப்பியர் சுட்டிய "அடியார், வினைவலர், தனிக்குடி ஏவலர், ஏனைய ஏவன் மரபினர், எனும்கீழோர் நால்வரும் தமிழகத்துண்மையை வலியுறுத்தல் கருதற்குரியது.

இனி, பிறரேவல்புரியும் ஏவன்மரபினரும் அகத்துறைத்தலைவராதற்குரிய ரென்பதற்குச் செய்யுள் :—

"இகல்வேந்தன் சேனை இறுத்த வாய்போல" (கலி.108)

என்பதில் "அளைமாறிப் பெயர்தருவா யறிதியோ?......
என்றானுக்கு,

"புளத்துளான் எந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ?
இனத்துளான் என்னைக்குக் கலத்தொடு செல்வதோ?
திணைத்தாளுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ?"

எனத்தலைவி கூறுவதால், இது பிறர் ஏவல் புரிவோர் அகத்துறையிற் காதற்றலைமக்க ளாதற்குரிமை கூறுத லுணர்க.

சூத்திரம்:—25.

ஓதல் பகையே தூதிவை பிரிவே.

கருத்து:—இது, மேல் முதற்சூத்திரத்திற் கூறிய எழுதிணைகளுள் குறிஞ்சிமுதலிய நடுவணைந்திணைகளின் பொதுவியல்புகள் இதுவரையுங் கூறி, இனி அவ்வைந் திணைகளுள் நடுவணதானதும், களவு கற்பு என்னும் இரு வகைக் கைகோள்களுக்கும் பொதுவானதும், தனக்கென நிலம்பகுக்கப்படாததுமாகிய பாலையென்னும் பிரிவொ ழுக்கத்தின் சிறப்பியல்கள் கூறத்தொடங்கி, பிரிவின் வகைகளுள் சில உணர்த்துகிறது.

பொருள்:—ஓதல் பகையே தூது இவை = கல்வி கற்றலும், பகைகடியப் பொருதலும், தம்முள் பகைத்த

பிறரைப் பொருத்தற்பொருட்டு வாயிலாகச் செல்லு தலும்ஆகிய இவை; பிரிவே=பிரிதற்கு நிமித்தமாய்ப் பாலைத் திணையாகும்.

குறிப்பு:— இதில் ஏகாரமிரண்டும் அசை. ஓதற் பிரிவாவது பிறண்டு தான் ஓதற்குரிய கல்விக்குப் பிரி தல். பகைவயிற் பிரிதலாவது தன்னாட்டிற்கும் தன்னர சற்கும் பகையாவாரோடு போர்கருதிப் பிரிதல். தூதிற் பிரிதலாவது பகைத்தார் வேறிருவரைப் பொருத்தற் பொருட்டுப் பிரிதல்.

சூத்திரம் :—26. அவற்றுள்.

ஓதலுந் தூது முயர்ந்தோர்மேன.

கருத்து:—இது, மேற்சூத்திரம் கூறும் பிரிவு மூன்ற னுள் இரண்டற்குரியாரை உணர்த்துகிறது.

பொருள்:—அவற்றுள் = மேற்குறித்த மூன்றனுள்; ஓதலுந்தூதும்=ஓதற்பிரிவும் தூதுபற்றிய பிரிவும்;உயர்ந் தோர்மேன=பெயரும் வினையும்பற்றிய திணைநிலைப் பெயர்க்குரியார் பலநுள்ளும் அடியோர் வினைவலர் ஏவலர் போல்வாரல்லாத உயர்ந்தோர்க்கே உரியவாகும்.

குறிப்பு:-அடியோர், வினைவலர், ஒருவருக்கு ஏவலர், ஏவன் மரபினேனையோர், இந்நால்வரும் பிறரேவலை எதிர்பார்த்து வாழ்பவராதலின் ஓதலும் தூதுமாகிய உயர்ந்தோர் தொழிலேற்றற்கு உரிமை கொள்ளார்.

அவரொழிந்த நானிலத் தமிழ்க்குடி மேன்மக்களே அவற்றை மேற்கொள்ளுதற்குத் தகுதியுடையராதலின், இவை அவ்வுயர்ந்தோர் மேலன என்று விளக்கப்பட்டன.

உயர்ந்தோரல்லாத அடியார் முதலிய நால்வர்க்கும் அகத்திணையொழுக்கங்கள் கடியப்படாவென மேல் இரண்டு சூத்திரங்களிற் கூறிய இந்நூலார், அவ்வொழுக்கங்களுள் ஒன்றான பிரிவிற்குரிய நிமித்தங்களுள் ஓதல் தூதாகிய இரண்டிற்கும் அவர் உரியராகாமையான், அவை பற்றிய பிரிவிற்கும் அவர் உரியராகார் என்பதை இச் சூத்திரத்தால் தெளியவைத்தார். மேற்சூத்திரத்திற் கூறிய பிரிவினிமித்தம் மூன்றனுள் இரண்டே உயர்ந் தோர்க்குரியன என இச்சூத்திரம் கூறுதலால், எஞ்சிய பகைவயிற்பிரிவு உயர்ந்தோர்க்குப் போலவே பிறர்க்கும் உண்டென்பது பெறவைத்தார். உயர்ந்தோரின் ஏவல் மேற்கொண்டொழுகுவாரும், அவரேவியவழிப் பகைவரொடு பொருதற்குரியராதலின், பகைவயிற் பிரிவு அவர்க்கு விலக்கப்படாமையுணர்க. அதுவேபோல், பொருட்பிரிவும் எல்லோர்க்கும் பொதுவாகும்.

இனி, இச்சூத்திரத்திற்கு நால்வகை வருணத்துள் அந்தணர் அரசராகிய முதல் இருவகையினரே ஓதல்தூது மேற்கொள்ளற்குரியர் எனப்பிறர் கூறுமுரை பொருந் தாது. நான்கு வருணம் ஆரியர் அறநூல்களே கூறும் வகைகளாதலானும், பண்டைத் தமிழருள் பிறப்பளவில் என்றும் உயர்வு தாழ்வுகளுடன் வேறுபடும் அந்நால் வகை வருணங்கள் உலகியலில் வழங்காமையானும், தொல்

காப்பியர் தாம் தமிழ் மரபுகளையே கூறுவதாக வற்புறுத்தலானும், அகத்திணையியலில் தமிழ் நாட்டு நானிலமக்கள் குறிக்கப்படுகின்றாரன்றி நான்கு வருணத்தாராய்த் தமிழ் மக்கள் யாண்டும் கூறப்படாமையானும், அவருரை அமைவுடையதன்று. அது சூத்திரக் கருத்தன்மை, இதில் உயர்ந்தோரென்பதற்கு முதலிரு வருணத்தாரென்று உரையாசிரியரும், முதல் மூன்று வருணத்தார் என்று நச்சினார்க்கினியரும் தம்முள் மாறுபடக் கூறுதலானும் தெளியப்படும். அன்றியும், வணிகரை விலக்கி அந்தணரும் அரசருமே இவ்விருவகைப் பிரிவிற்குரியர் என்று தாம் கூறுதற்குக் காரணம், 'ஒழுக்கத்தானும் குணத்தானும் செல்வத்தானும்—ஏனையரினும் (இவ்விருவருணத்தாரே) உயர்வுடையராதலின் (இவரை) உயர்ந்தோரென்றார்' என்பர் இளம்பூரணர். ஒழுக்கம் குணம் செல்வங்களால் வணிகர் மற்றைய இருபிறப்பாளர்க்குக் குறைந்தவர் என்பதுண்மையன்றாகலானும், செல்வத்தால் வணிகர் ஏனையரினும் தாமே உயர்வுடையராதலானும், வணிகரும் நானிலத்தமிழரும் ஓதற்குரியரேயாதலானும் இதுவும் சூத்திரக் கருத்தாகாமை பெறப்படும்.

சூத்திரம் :—27.

> தானே சேறலும் தன்னொடுசிவணிய
> ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே.

கருத்து :— இது, உயர்ந்தோர்க்குரிய பிரிவுவகை மூன்றனுள், மேற்சூத்திரம் கூறிய இரண்டு நீக்கி, அதிற் கூறப்படாத பகைவயிற் பிரிவுக்கு உரியாரை உணர்த்துகின்றது.

பொருள்:— தானே சேறலும் = பகைகடிதற்பொருட்டுத் தானே படையெடுத்துச் செல்லுதலும்; தன்னொடு சிவணிய ஏனோர் சேறலும் = தன்னொடு பொருந்திய படைத்தலைவர் பிறர் செல்லுதலும்; வேந்தன் மேற்றே = மன்னவனைப் பொருத்ததேயாகும்.

குறிப்பு:— தான என்பதன் ஏகாரம் பிரிநிலை; வந்த பகையை யடர்க்கத் தான் ஏவுதற்குரிய படைஞர் பிறரை நீக்கி வேந்தன் தானே சேறல் என்பதைச் சுட்டும். ஈற்றேகாரம் அசை. நாட்டின் பகைவராய் வந்தாரை நலிவது வேந்தனுக்கே கடமையும் உரிமையும் ஆகும். மற்றையோர் மன்னராணையின்றித்தாமே பகைமை பாராட்டி பொருதல் அரசனால் ஒறுக்கப்படும் குற்றமாகும். அதனால் தன்கடனாற்ற, மண்ணசையால் வந்த வேந்தனை அஞ்ச எதிர்சென்று பொருதழிக்க அந்நாட்டு வேந்தன் தானே செல்வதும், தன் படைஞரை ஏவி அவரைக்கொண்டு அக்கடனாற்றிப் பகையழித்தலும், அவ்வேந்தன் மேலனவாவது வெளிப்படை. நெடுஞ்செழியன் வந்தபகைவர் மேற்சென்று தலையாலங்கானத்துப் பொருதழித்தது வேந்தன் தானே சேறற்குக் காட்டாகும். கருணாகரத் தொண்டைமான் படையொடு சென்று கலிங்கமழித்தது அரசனொடு சிவணிய ஏனோர் சேறற்கு எடுத்துக் காட்டாம்.

(i) பகைதெற வேந்தன் தானே சேறற்குச் செய்யுள்:-

1\. "மயங்கமர் மாறட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேல் தகைகாண விடுவதோ
... ... ... ... ... ... ...

தாள்வலம் படவென்று தகைநன்மா மேற்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ
... ... ... ... ... ... ...
பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ
... ... ... ... ... ... ...
எனவாங்கு
வாளாதி வயங்கிழாஅய் வருந்துவ ளிவளென
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி
மீளிவேற் றானையர் புகுதந்தார்
நீளுயர் கூடல் நெடுங்கொடி யெழவே''
(பாலைக்கலி 30)

2. "கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்
தேர்தரு விருந்திற் றவிர்குதல் யாவது
மாற்றருந் தானை நோக்கி
யாற்றவு மிருத்தல் வேந்தனது தொழிலே''
பேயனார் (ஐங்குறுநூறு 451)

(ii) வேந்தனொடு சிவணிய ஏனோர் சேறற்குச் செய்யுள்:

1. "காய்சின வேந்தன் பாசறை நீடி
நந்நோ யறியா வறனி லாளர்
இந்நிலை களைய வருகுவர் கொல்லென
ஆனா தெறிதரும் வாடையொடு
நோனேன் தோழியென் தனிமை யானே''
கழார்க் கீரனெயிற்றியார் (அகம் 294)

2. "கூதிர் நின்றன்றாற் பொழுதே; காதலர்
நந்நிலை யறியா ராயினுந் தந்நிலை
யறிந்தனர் கொல்லோ? தாமே யோங்குநடைக்
காய்சின யானைகங்குற் சூழ
அஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சினவேந்தன் பாசறையோரே"
உம்பற்காட்டிளங்கண்ணனார் (அகம் 264)

சூத்திரம்:— 28.

மேவிய சிறப்பி னேனோர் படிமைய,
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த வொண்பொருள் முடியவும், பிரிவே.

கருத்து:— இது, மேற்கூறிய ஓதல் பகைதூது ஒழிய, காவல்பொருளெனப் பிறவகைப்பிரிவுகளையும், அப்பிரிவுகளுக்குரியாரையுங் கூறுகின்றது.

பொருள்:— மேவிய சிறப்பின் ஏனோர் = வேந்தனொடு பொருந்திய சிறப்புடைய வேந்தன் கிளைஞர் ஏனாதியர் முதலியோர்; படிமைய முல்லைமுதலாச் சொல்லிய = நில வகுப்புக்களான முல்லைமுதற் நெய்தலிறுதியாக (மேலே ஐந்தாஞ் சூத்திரத்திற்) சொல்லப்பட்ட நால்வகை உலகங்கள்; முறையாற் பிழைத்தது பிழையாதாகல்வேண்டியும் = முறைவழுவித் தப்பியது முறையாற்றப்பா தாதலைவிரும்பியும்; இழைத்த ஒண்பொருண் முடியவும் = (யாவரும்) வினைசெய்து உயர்ந்த பொருளை ஆக்கவும்; பிரிவே = பிரிதல் நிகழும்.

குறிப்பு:- ஈற்றேகாரம் அசை. படிமைய என்பதில் படி நாட்டை அல்லது நிலத்தைக் குறிக்கும். இனி, படிமைய என்பதற்குப் பகைமையுடைய அல்லது கீழ்ப் படிந்த எனப்பொருள் கோடலும் பொருந்தும்.

பாலைத்திணையாகிய பிரிவு அறுவகைப்படும்; ஓதல், தூது, பகை, காவல், பொருள், பரத்தை என. அவற்றுள், பரத்தையிற்பிரிவு கைகோளிரண்டில் கற்பளவிலிடம் பெற்றுக் களவுக்கமையாமையின், அப்பிரிவு பின்னர் அத்தொடர்புடன் கூறப்படும். ஆதலின் அதைநீக்கி, மற்ற ஐந்தும் இங்குக் கைகோளிரண்டிற்கும் பொது வாகக் கூறப்பட்டன. அவ்வைவகைப் பிரிவுள், ஓதல் தூது காவல் மூன்றும் உயர்ந்தோர்க்கே யுரியன; பகை பொருட் பிரிவுகள் யாவர்க்கும் ஒப்பவுரியன.

ஓதல் பகை தூதுபோலவே, பொருள்பற்றியும் காவல்பற்றியும் பிரிவு நிகழ்தல் உலகியலும் மரபும் ஆதலின், அவற்றுள் முதல் மூன்றும் முன்கூறியதால் காவற்பிரிவும் பொருட்பிரிவும் இச்சூத்திரத்திற் கூறப் பெற்றன. வேந்தனொடு சிவணிய ஏனோர், தப்பொருட்டு ஓதல் முதலியும், வேந்தன் பொருட்டுத் தூது பகை தெறல் முதலியும் பிரிவது போலவே, நாடுகாவல் பற்றி யும் பொருள்முடிக்கவும் பிரிவுமேற்கொள்ளுவது மரபு என்பது இச்சூத்திரத்தில் விளக்கப்பட்டது. வேந்தனுக் குப் பகைதெறத் தானேசேற லியல்பாயினும், பிறநாடு காவல்பற்றியும் பொருள்பற்றியும் பிரிதல் சிறந்ததன்று கும். அதனால், மன்னற்கு தானே பகைவயிற் சேறலுண்

டென மேற்சூத்திரத்திற் கூறிய தொல்காப்பியர் அவ னுக்குக் காவல் பொருட்பிரிவுகள் கூறாது, அவனொடு மேவிய சிறப்பினையுடைய ஏனைய உயர்ந்தோர்க்கு இப் பிரிவுகளை இதில் விதந்து கூறினர்.

(i) உயர்ந்தோர் காவற்பொருட்டுப் பிரிதற்குப் பாட்டு:-

1. "பல்வரி யினவண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் றொலைந்தவென் றடமென்றோளுள்ளு
[வார்
ஒல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புக ழுலகேத்த விருந்துநாட் டுறைபவர்;

2. திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவ தருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்த
மிசைபரந் துலகேத்த வேதினாட் டுறைபவர்;

3. அறல்சாஅய் பொழுதோடெம் மணிநுதல் வேறாகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை யருளுவார்
ஊறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைப
[வர்" (கலி. 26)

ii. அவர் பொருள் வயிற்பிரிதற்குதாரணம்:—

1. "அருஞ்சுரக் கவலை நீந்தி என்றும்
இல்லோர்க் கில்லென் றியைவது காத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்

பொருளே, காதலர் காதல்;
அருளே காதலர் என்றி, நீயே". (அகம். 53.)

சீத்தலைச் சாத்தனார்.

"வெயில்வீற் றிருந்த வெம்மலை யருஞ்சுரம்
ஏகுவரென்ப தாமே தம்வயின்
இரந்தோர் மாற்றல் ஆற்றா
இல்லின் வாழ்க்கை வல்லா தோரே". (நற்றிணை.84)

சூத்திரம் :— 29.

மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே.

கருத்து :— இது, வேந்தர்க்கும் வேந்தரொடு சிவணிய சிறப்பின் ஏனோர்க்கும் உரிய பிரிவெல்லாம் அடியோர் கிழோரல்லா நானிலமக்களனைவர்க்கும் உரியவென் றுணர்த்துகின்றது.

பொருள் :— மேலோர் முறைமை=மேலே வேந்த னென்றும்வேந்தனொடு சிவணிய ஏனோரென்றும் மேவிய சிறப்பினேனோரென்றும் குறிக்கப்பட்ட மேலோர்களு டைய பிரிவு பற்றிய் மரபெல்லாம்; நால்வர்க்கு முரித்தே =தமிழகத்தில் நானில மக்களுக்கும் ஒப்பவுரியன.

குறிப்பு:—மேலோர் பிரிவு ஓதல் தூது,காவல்,பற்றியா மென்பது மேலிரு சூத்திரங்கள் குறித்தன. இதற்குப் பிறர்கூறும் வேறுபொருள்கள் சூத்திரக் கருத்தன்மை, இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இச்சூத்திரத்

திற்குத் தம்முள் மாறுபட வுரைகூறுதலான் விளங்கும். மேலோர் தேவரென்பர் இளம்பூரணர்; வணிகரென்பர் நச்சினார்க்கினியர். தேவரைப்பற்றிய குறிப்பு ஈண்டு வேண்டப்படாமையானும், நான்கு வருணத்தாருள் வணிகர் மேலோராகா மூன்றும் வகுப்பினரே யாதலானும், இவ்விருரையும் சூத்திரக்கருத்தோடு மாறுபடும். அது போலவே, நால்வர் என்பதை நான்கு வருணத்தார் என்று இளம்பூரணரும், வணிகரை விலக்கி வேளாளரை இரு வகையராக்கி அந்தணராசரொடு கூட்டி நால்வர் என நச்சினார்க்கினியரும், தம்முள் மாறிக்கூறுவதும் அவ்விரு கூற்றும் தொல்காப்பியர் கருத்தன்மை காட்டும். தமிழகம் முல்லை முதலிய நானிலமாகத் திணைபற்றிப் பகுக்கப்படு மென்று மேலே 2, 5-ஆம் சூத்திரங்களிலும், அந்நானில மக்களும் திணைதொறு மரீஇய திணைநிலப்பெயரொடு அகத்துறைகளில் கிழவராவரென 20, 21-ஆம் சூத்திரங் களிலும் விளக்கியிருப்பதால், ஈண்டு நால்வரென்பது அந்நானில மக்களையே குறிக்கும். அந்நானிலத்தும் அடியோர் முதலிய கீழோரும், வேந்தர், வேந்தரொடு சிவணிய ஏனுதியர் முதலிய மேலோரும் உளராதலை, மேலே 23, 24, 26, 27, 28-ஆம் சூத்திரங்களில் இந்நூலார் விளக்கியுள்ளார். அதனால், இதில் மேலோ ரென்றும் நால்வரென்றும் குறிக்கப்படுவோர், இவ் வியலில் முன் விளக்கியுள்ள வேந்தரொடு சிவணியோரும் நானிலத் தமிழ்மக்களுமேயாவர். அந்நால்வகைத் தமிழ் மக்களும் வேந்தரொடு சிவணிய மேலோரொப்ப ஓதல் தூது காவல் மேற்கொள்வதும், அதுபற்றிப் பிரிதலும் மரபென்பது இதில் விளக்கப்பட்டது.

இனி யிவ்வாறன்றி 'நால்வர்' என்பது நான்கு வருணத்தார் என்றும், 'மேலோர்' என்பது அவருள் இருபிறப்பாளராய மேல்வகுப்பினர் மூவரென்றும், அல்லது அவருள்ளுஞ் சிறந்த பார்ப்பனரென்றும் பொருள்கொள்ளின், மேலோரெனப்படுவார் யாவரேயாயினும் அவரை நீக்கியபின் அவரொழிந்த வருண வகுப்பினர் நால்வராதல் கூடாமை வெளிப்படை. அதுவுமன்றி, ஆரியர் அறநூல்கள் கூறும் பிறப்புரிமைகளுடைய இடையிருவருணத்தார் என்றும் தமிழகத்து இல்லாமையானும், தொல்காப்பியர் தமிழ் மரபுகளையும் தமிழர் வழக்குகளையுமே தாம் கூறுவதாக வற்புறுத்துவதானும், அவ்வுரை தொல்காப்பியர் கருத்தன்றென்பது தேற்றமாகும்.

(i) பொருள்வயிற் பிரிவுக்குப் பாட்டு:—

1. "வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார்.........
... ... ... ... ... ... ...
சுரம்புல்லென்ற ஆற்ற.........காடிறந்தோரே"
மாமூலனார் (அகம். 1)

2. "நட்டோ ராக்கம் வேண்டியும் ஒட்டிய
நின்றோள் அணிபெற வரற்கும்
அன்றோ தோழி யவர்சென்ற திறமே"
பாலங்கொற்றனார் (நற்றிணை. 286)

3. "ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி, அவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ,
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே"
உகாய்குடிகிழார் (குறுந்தொகை. 63)

ii. தூதுப்பிரிவுக்குச் செய்யுள் :—

(1) "மிகைதணித் தற்கரி தாமிரு வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற் றூர் நமர், பல்பிறவித்
தொகைதணித் தற்கென்னை யாண்டுகொண் டோன் றில்லைச்
[சூழ்பொழில்வாய்
முகைதணித் தற் கரிதாம் புரிதாழ்தரு மொய்குழலே"
திருச்சிற்றம்பலக்கோவையார்.

(2) இகலுமிரு வேந்தர்க் கிடையமரின் றீமை
அகலப் பொருத்த அகன்றூர்—நகையாமே
காமப் பகைதணியக் கற்பின் மனைபொருந்தி
ஏம மெமக்கியா தின்று.

சூத்திரம் :—30.

மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப
உயர்ந்தோர்க்குரிய ஓத்தினை.

கருத்து :—இது, மன்னரைப் பொருந்திச் சிறந்த வேந்தன் கிளைஞர் ஏனைதியர் முதலிய மேலோர்க்கு மேல் 27, 28-ஆம் சூத்திரங்களில் கூறிய பகை, காவல், பொருள்பற்றிய ஒழியப் பிற பிரிவுகள் கூறும் ஒழிபுச் சூத்திரமாகும்.

பொருள்:—உயர்ந்தோர்க்குரிய = அடியோர் முதலிய கீழோரல்லாத சிறப்புடையோர் செய்தற்குப் பொருந்திய; ஓத்தின் ஆன = கல்வியான் ஆம் பிரிவுவகை அனைத்துக்கும்; மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப = மன்னர் சார்பில் அவரொடு சிவணிப் பின்னிற்போர் உரியராவர்.

குறிப்பு:—பிரிவைந்தனுள் பொருளும் போரும் எல்லார்க்கும் பொது. ஓதலும் தூதும் அடியார் முதலிய கீழோரை விலக்கி மற்ற நானில மேன்மக்களுக்குரிய என்பதை மேல் 25, 26-ஆம் சூத்திரங்கள் கூறின. நாடு காவற்பிரிவு மன்னரொடு சேர்ந்து சிறந்தார்க்குரித்தென 28-ஆம் சூத்திரமும், அக்காவற்பிரிவு நானில மேன்மக்களுக்குமுரித்தென 29-ஆம் சூத்திரமும் மொழிந்தன. இனி, மன்னரொடு சிவணிச் சிறந்த மேலோர், மன்னர் பொருட்டுப் பகைமேற்கொண்டு பிரிதல் மேல் 27-ஆம் சூத்திரத்திலும், காவலும் பொருளும் பற்றிப் பிரிதல் 28-ஆம் சூத்திரத்திலும் கூறப்பெற்றனவாதலின், அம்மூன்றுமொழிய, தூது முதலிய பிறவுயர்ந்தோர் வினை பற்றிய பிரிவனைத்தும், மன்னர் பாங்கிற் பின்னோராய அன்னவர்க்குரித்தாம் என்பதை இவ்வொழிபுச் சூத்திரத்தில் இந்நூலார் கூறினர். "அன்பு அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க் கின்றியமையாத மூன்று" என்பது வாய்மொழி. அதனால், மதிநுட்பம் நூலோடுடைய உயர்ந்தோர்க்கன்றி மற்றையோர்க்கு தூது போல்வன கூடாமை ஈண்டு விளக்கப்பட்டது.

இவ்வாறன்றி, இதனை இரண்டு சூத்திரமாகப் பிரித்துப் பிற வுரையாசிரியர்கள் கூறும் பொருள்கள் இந்நூலாரைக் கூறியது கூறும் குற்றத்திற் காட்படுத்தும்.

'மன்னர் பாங்கிற் பின்னோராகுப' எனத் தனியே பிரித்து, அதற்குப் பிறர் கூறும் உரை மேலே 27, 28, 29-ஆம் சூத்திரங்களில் இந்நூலார் கூறியவற்றுள் அடங்குதலின், அஃதவர் கருத்தன்மையறிக. அதுவே போல், 'உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான' என்பதைத் தனிச் சூத்திரமாக்கிப் பிறர் கூறும் பொருள், முன், 'ஓதலுந் தூது முயர்ந்தோர்மேன' என்னும் சூத்திரங் கூறுவதி லடங்குமாதலின், அதுவும் அமைவதன்று. ஏடெழுது வோரால் இவை பிரித்தெழுதப்பெற்று அதனால் பின் உரையாசிரியர்கள் தனிவேறு சூத்திரங்களாகக் கருதி மயங்கி, இந்நூலாசிரியரின் முன்சூத்திரப் பொருளொடு பொருந்தாவாறு மாறுபடவுரை கூறியுள்ளார். அன்றியும், இரண்டாய்ப் பிரிப்பின், இரண்டும் பொருள் முடிபின்றி பொலிவிழக்கும்.

சூத்திரம்:—31.

வேந்துவினை யியற்கை வேந்தனி னொரீஇய
ஏனோர் மருங்கினு மெய்திட னுடைத்தே.

கருத்து:—இது, முடியுடை வேந்தரல்லாத குறுநில மன்னர்க்குப் பிரிவுவகை கூறுகின்றது.

பொருள்:—வேந்துவினையியற்கை = முடிமன்னரின் பிரிவுக்குரிய வினையியல்பு; வேந்தனின் ஒரீஇய=அவ் வேந்தரின் வேறாய; ஏனோர் மருங்கினும்=பிறவேளிர் முதலான குறுநில மன்னரிடத்தும்; எய்திடனுடைத்தே =பொருந்துதல் உரித்தாகும்.

7083



குறிப்பு :—ஈற்றேகாரம் அசை.

குறுநில மன்னர் பிறநாடு கொள்ளப் போர்மேற் செல்லும் பிரிவுக்குப் பாட்டு :—

"விலங்கிடுஞ் சிமையக் குன்றத்தும்பர்
வேறுபல் மொழிய தேஎம் முன்னி
வினைநசை இப்பரிக்கும் உரன்மலி நெஞ்சமொடு
புனைமாண் எஃகம் வலவயினேந்திச்
செலன்மாண் புற்றநும் வயின்வல்லே
வலனாகென்றலும் நன்று மற்றில்ல."

இறங்கு குடிக்குன்ற நாடன் (அகம். 215)

இவ்வாறே மற்றைப் பிரிவுகளும் வந்துழிக்கண்டுகொள்க.

சூத்திரம் :—32.

பொருள்வயிற்பிரிதலும் அவர்வயினுரித்தே
உயர்ந்தோர் பொருள்வயினொழுக்கத்தான.

கருத்து :—இது, மேலதற்கோர் புறனடை; குறுநில மன்னர்க்குப் பொருட்பிரிவும்உண்டென்று கூறுகின்றது.

பொருள் :—பொருள் வயிற்பிரிதலும் = பொருள் பற்றிய பிரிவும்; அவர்வயினுரித்தே = மேற்குறித்த குறுநிலமன்னர்களுக்குரியதாகும்; உயர்ந்தோர் பொருள் வயின் ஒழுக்கத்தான = பொருள்பற்றி உயர்ந்தோரின் ஒழுக்கத்தொடு பட்டவிடத்தில்.

குறிப்பு:— வேந்தரனைய குறுநிலமன்னர்க்குத், தற்பேணல்முதலிய பொதுவற மாற்றும்பொருட்டு பொருட்பிரிவு பொருந்தாது; காடு திருத்தி நாடாக்கல், குளந்தொட்டுக் கோயிலெடுத்தல், படைபேணி நாடாளல் போன்ற மேலொழுக்கம்பற்றி அஃதமையும் எனக்குறித்தல் இதன் கருத்தாகும். வேந்தர்வினையனைத்தும் குறுநில மன்னர்க்குப் பாலைத்திணையில் உரியவாகும் என மேலே குறிக்கப்பட்டமையால், வேந்தனுக்கு விலக்கப்பட்ட பொருள்வயிற்பிரிவு குறுநில மன்னர்க்கும் விலக்கோ எனுமையமகற்றி, அவர்க்கது கடிவரையின்று என்பதை இந்நூலார் இச்சூத்திரத்தால் விளங்கவைத்தார்.

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்."

(கலி. 11)

என்னும் பாலைக்கலி யடிகள் இச்சூத்திரக்கருத்தை விளக்குவதறிக.

மேல் 'பெயரும் வினையும்' என்னும் 20-ஆம் சூத்திர முதல் இதுவரையுள்ள சூத்திரங்களால், தொல்காப்பியர் தமிழகத்தில் அகத்திணைக்குரியாரை வகைப்படுத்திக் கூறினர். நானிலமக்களும் எல்லாத்திணைக்கு முரியரென்பதை 'ஆயர் வேட்டுவர்' 'ஏனோர் பாங்கினும்' என்னும் 21, 22-ஆம் சூத்திரங்களில் விளக்கினர். அவரைப்

போலவே, அடியோர், வினைவலர், ஏவலர், ஏவலரனை யவர் ஆகிய கீழோர் நால்வரும் அகத்திணைகளுக்குரிமை கொள்வரென்பது 'அடியோர் பாங்கினும்', 'ஏவன் மரபின்' என்னும் 23, 24-ஆம் சூத்திரங்களில் விளக்கப் பட்டது. பிறகு அகத்திணையைந்தனுள் சிறந்த பாலைத் திணையின் வகைகளும், அவைபற்றிய பிரிவுகளுக்குரியார் வகைகளும், 'ஓதல் பகையே' என்னும் 25-ஆம் சூத்திர முதல் 'பொருள்வயிற் பிரிதலும்' என்னு மிச்சூத்திரம் வரை விளக்கப்பட்டன. அவற்றுள் 25, 26, 29-ஆம் சூத்திரங்கள் நானிலமக்களைப் பற்றியும், 27, 28, 30-ஆம் சூத்திரங்கள் வேந்தனையும் வேந்தனோடு பொருந்திய ஏனோரையும் பற்றியும், 31,32-ஆம் சூத்திரங்கள் வேந்தர் குடியில் வாரா ஏந்தல்களான குறுநிலமன்னரைப்பற்றி யும் கூறுகின்றன. இதனால் தொல்காப்பியர்காலத் தமி ழகத்தில், அகத்திணையொழுக்கம் மேற்கொண்டவர் அடி யோர் முதலிய கீழோரும், நானிலமக்களும், மூவேந்த ரும், வேந்தரைச்சார்ந்து சிறந்த ஏனோரும், வேந்தர் குடிவாரா நாடாட்சிகொண்ட குறுநிலமன்னருமாய் அனைவருமடங்குவரென்பது தேற்றம். தமிழ் நாட்டில் முடிவேந்தர் மூவரே யாவரென்பது "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" என்னும் தொல்காப்பியர் செய்யுளியற் சூத்திரத்தானும், "போந்தை, வேம்பே ஆரெனவரூ உமாபெருந்தானையர் மலைந்தபூவும்" என் னும் புறத்திணையியற் சூத்திரத்தானும் பண்டைப் பாட்டுக்களானும், விளக்கமாகும்.

சூத்திரம்:—33.

முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை.

கருத்து:—இது, பெண்டிரொடு கடல்கடத்தல் தமிழ் மரபன்று என்று கூறுகின்றது.

பொருள்:—மகடூஉ வோடு முந்நீர் வழக்கம் இல்லை = பெண்ணோடு கடலேறிச் செல்லுதல் மரபன்று.

குறிப்பு:—வழக்கம் என்பது செல்லுதற்பொருட்டா தல் "ஆள்வழக்கற்ற சுரத்திடை" (அகம். 51) என்ற பெருந்தேவனார் அகப்பாட்டடியாலும், 'யாவரும் வழங்கு நரின்மையின்' என்னும் மாமூலர் அகப்பாட்டடியானும், "மான்றமாலை வழங்குநர்ச் செகிஇய, புலிபார்த்துறையும் புல்லதர்ச்சிறுநெறி" என்னும் பூதனார் நற்றிணைப்பாட் டடியானும், 'வளிவழங்கும்' என்னும் குறளடியானுமறிக.

இனி, 'முந்நீர்' என்பது கடலுக்கு இயற்பெயராதல் வெளிப்படையாகவும், அச்செம்பொருளை விட்டு, மூன்று நீர்மையாற் செல்லுஞ்செலவு என்று பொருள் கூறும் நச்சினார்க்கினியர் உரை எவ்வகையானும் பொருந்துவ தன்று. அவர் கூறுமாறு ஓதல், தூது, பொருள் காரண மாக மட்டும் தலைவன் தலைவியை உடன்கொண்டு செல்லுதல் கடியப்படுமேனின், மற்றும் பகை காவல் முதலியவற்றில் தலைவியோடு கூடச் சேறல் உண்டு எனக்கோள்ளல் வேண் டும். ஓதல் தூது பொருள்பற்றித் தலைவியை உடன் கொண்டு செல்லுதலினும், பகை பிறநாடுகாவல் பற்றிய

செலவுகளில் அவளைக்கொண்டு செல்லுதலால் வரும் ஏதம் பெரிதாகலானும், பின்கற்பியலில் "எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்" என பகையில் பெண்ணொடு சேறல் கடியப்படுதலானும், அவ்வாறு போர் காவல்களில் தலைவியொடு செல்லும் வழக்குண்மை சான்றோர் செய்யுட்களில் யாண்டும் பயிலாமையானும், அவ்வுரை சூத்திரக் கருத்தன்மை தேற்றமாகும்.

இனி, ஓதல், பகை, தூது, பொருள், காவல் அனைத்தும் பிரிவுவகைகளே யாதலானும், பிரிவு தலைமக்கள் தம்முள் பிரிதலையே குறிக்குமாதலானும், இப்பிரிவைந்தனுள் எதுபற்றியுந் தலைமகன் தலைவியுடன் செல்லுமாறில்லையென்பது தேற்றம். அதனாலும் நச்சினார்க்கினியர் கூறும்பொருள் இந்நூலார் கருத்தாகாமை பெறப்படும்.

பின், இச்சூத்திரம் கூறுவது யாதெனின், அன்பினைந்திணைகளுந் தனிநு மடங்காதனவும், அகவொழுக்கத்திற்கு உரிப்பொருளா யமைவனவுமான களவில் உடன்போக்கும், கற்பில் ஏற்புழி மனைவியுடன் சேறலும் தமிழ் மரபென்பதும், அவ்வாறு செல்லுங்கால் பெண்டிரொடு கடல் கடத்தல் மரபன்றென்பதுமே யாம். இவற்றுள் முன்னது 'கொண்டுதலைக்கழியினும்' என்னும் இவ்வியல் 15-ஆம் சூத்திரத்தானும், பின்னது 'மரபுநிலைதிரியா' என்னும் இவ்வியல் 45-ஆம் சூத்திரத்தானும் அமையும்.

(i) களவில், கொண்டுதலைக்கழிதலுக்குச் செய்யுள் :—

“ அழிவில முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழ ... ... ...
... ... ... ... ... ... ...
நிழல்காண் டோறும் நெடிய வைகி
மணல்காண் டோறும் வண்டல் தைஇ
வருந்தா தேகுமதி, வாலெயிற் றோயே.
மாநனை கொழுதி மகிழ்குயி லாலும்
நறுந்தண் பொழில கானம்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே”

பாலைபாடியபெருங்கடுங்கோ (நற்றிணை. 9)

(ii) கற்பில், தன்னை உடன்கொண்டு செல்லக் கொழுநனை மனைவி வேண்டற்குச் செய்யுள் :—

“ தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்
என்னீ ரறியாதீர் போல விவைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு” (பாலைக்கலி. 6)

சூத்திரம்:—34.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேற்
பொற்புடை நெறிமை யின்மை யான.

கருத்து:—இது, மகளிர்க்கு மடலேற விரும்புதலும் முறையன்று என விலக்குதல் நுதலிற்று. இதுவும் பெண்ணியல் கூறும் பெற்றித்தாகலின், மகளிர்க்கு முந்நீர் வழக்கம் மறுக்கும் முன்னைச் சூத்திரத்தை யடுத்து மடன் மேவலை மறுக்கும் இச்சூத்திரம் அமைக்கப் பட்டது.

பொருள்:—எத்திணை மருங்கினும் = அகத்திணை ஏழனுள் எதன் கண்ணும்; மகடூஉ மடன்மேல் = தலைவி மடலேற விரும்புதல்; பொற்புடை நெறிமை யின்மை யான = அழகிய முறைமை இல்லை.

குறிப்பு:—எத்திணை மருங்கினும் என்றார்; அன்பினைந்திணைப்பகுதியில் ஆடவர்போல் பெண்டிர் மடல் விரும்புதல் அமையாமை மட்டுமன்று; பெருந்திணையினும் ஏறிய மடற்றிறம் ஆடவர்க்கன்றி, புலனெறி வழக்கில் மகளிர்க்குக் கூறுவது வழக்காறில்லை என்பதை வற்புறுத்துதற்கு. மேவல்-மேல், இடைக்குறை; ஐந்தாம் பரிபாட்டிலும் மலைபடு கடாத்திலும் ஆரல்-ஆல் ஆனது போல. மேவல், விருப்பப் பொருட்டு. "நம்புமேவு நசையாகும்மே" (தொல்.சொல், உரி. சூத். 33) பேரிசை நவிர மேஎ யுறையும்" என்னும் மலைபடு கடாத்தடியுங் காண்க. 'இல்லை' என ஒரு சொல்லை வருவித்து, 'ஆன'

என்பதைக் காரணக் குறியாக்கி, 'பெண்பால் மடன்மேவ வில்லை; பொலிவுபெறும் நெறிமை இல்லாமையால்', என இளம்பூரணர் கொண்டாங்குக் கொள்ளலும் தள்ளும் தன்மைத்தன்று. எவ்வாற்றானும், மடலேறுதல் எனப் பொருள் கொள்ளுதல் பொருந்தாது. ஆடவர்க்குமே மடலேறுதல் பொற்புடை நெறிமைக்கு மாறாக "நோந் திறத்தின் பாற்பட்ட காதலற்ற கழிகாமப் பழி பிறங்கும் இழிதகவுடைய பெருந்திணையின் பாற்படும் என்பது "ஏறிய மடற்றிறம்...பெருந்திணைக் குறிப்பே" என்னும் சூத்திரத்தானும் வலியுறும். 'மடல் ஏறுமல், மடல் ஊர்வேன் எனக் கூறுதலும் ஆடவர்பால் பொற்புடை நெறியாக்காமல், ஒரோவிடத்துப் புலனெறி வழக்கில் அமைத்துக்கொள்ளப்படுகிறது. "மடன்மா கூறும் இடனுமாருண்டே" எனுந் தொல்காப்பியச் சூத்திரத் தால், மடன்மா கூறுவதும் ஆடவரளவிலும் நன்மரபா காமல், ஓராங்கு மரபு வழுவமைதியாக மட்டும் கொள்ளப் படும் தமிழ் வழக்குத் தெளிக்கப்பட்டது அதன் காரணமும் எளிதில் அறியப்படும். ஊரறிய ஏறிய மடற்றிறம்" ஆடவருக்கும் பொருந்தாக்காமமாம் பெருந் திணை எனக் கடியப்படுகிறது. ஏறுமல் தனியிடத்தே மடலூர்வேன் எனமட்டும் தலைமகன் ஒரோவழிக் கூறுதல் அமைத்துக்கொள்ளப்பட்டது; ஏனெனில் தலைவன் தன் காதற் பெருக்கை விளக்குமளவிற்றாகி, தலைவியின், உறுதுணையாம் தோழிக்கு அவன் தனித்துத் தலைவியின் இன்றியமையாமையை வலியுறுத்தும் கருத் துடைமை காட்டும் கருவியாக்குதலால், மடன்மா

கூறுதல் அகப்பகுதியில் ஆண் மகனுக்கு மரபு வழுவமைதியாக மட்டும் ஆளப்படும். இப்புலனெறி வழக்கு மறுத்தற்கில்லை என்பதைத் தொல்காப்பியர், 'மடன்மா கூறுமிடனுமாருண்டே' என்று கூறி, உம்மையாலும் ஏகாரத்தாலும் அதுவும் நன்மரபன்றென்பதை இனிது பெற விளக்கினர். ஆகலால் மடலேற அவாவுதல் ஒரு வாறு ஆடவர்க்கு மரபு வழுவமைதியாக மட்டும் அமையு மெனக் காட்டும் ஆசிரியர், மகளிர்க்கு யாண்டும் பொற்புடை நெறியமையாகாது என்பதைச் சூத்திரத்தால் விலக்குவாரானர். இதுவே தமிழ் மரபென்பது:—

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்" என்னும் குறளாலும்,
"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவதுண்டு-அதனையாம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்" [தெளியோம்

என்னும் திருமங்கை யாழ்வாரின் பெரிய திருமடலின் அடிகளாலும் தெளியப்படும். "மடலேறாப் பெண்ணிற் பெருந்தக்க தில்" என்பதும் தலைவன் கூற்றேயாகலானும், மடல் ஊர்வேனென்று தலைவி கூறுதலாக யாண்டும் ஆன்றோர் செய்யுள் செய்யாமை யானும், மடல் ஏறும் விருப்பமும் மகளிர்க்குப் பொற்புடை நெறியாகாமை தேறப்படும், மேலும்,

"உடம்பும் உயிரும் வாடியக் காலும்
...   ...   ...   ...
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை"

என்னும் பொருளியற் (10) சூத்திரத்தால் மணந்து கணவனுடன் வாழும் மனைவியும் கணவனுக்குமே தன் காதலைக் கரத்தலே பெண்ணியல்பென வலியுறுத்தப் படுகின்றது. தனியிடத்துக் கொண்ட கணவனுக்கும் கரத்தற்குரிய தன் காதலை ஊரறிய மடலேறிப்பறை அறைவேனெனல், நாணொடு நிறையைப் பூணாகக் கொண்ட பெண்டகைமைக்கு முற்றிலும் இயைபற்ற தாகும். இதனாலன்றோ,

"காமத் திணையிற் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய, ஆகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான"

எனுங் களவியற் (17) சூத்திரத்தால் தொல்காப்பியர், களவில் தலைவியரிடம் கடலன்ன காமவேட்கை குறிப்பா னன்றி நெறிப்படாமையையும், அவ்வாறு நெறிப்படின் அது பொற்புடைமை ஆகாமையையும் வற்புறுத்தினர்.

இத்தமிழ் மரபுக்கு மாறாக,

"கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலூரார் மைந்தர்மே லென்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்கோமான்
வேட்டமா மேற்கொண்ட போழ்து"

என நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோள் காட்டினரா லெனின், பண்டை நன் மரபுக்கு மாறாக, பெண்டிரெல்

லாரும் யாண்டும், எந்நிலையிலும், ஆடவரெழிலுக்கு உடையுமுள்ளத்தினர் எனக்கூறும் உலா, மடல் முதலிய பனுவல் எழுந்த தகுதியும் மரபும் தலைதடுமாறிய பிற்கால வழக்கெனை மறுக்க.

சூத்திரம்:—35.

"தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி
மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தலென்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய"

கருத்து:—இது, தலைவனுடன் போன தலைவியின் பிரிவாற்றாத தாயாரின் பரிவு நிலைமையும், அது பற்றிக் கூற்று நிகழும் பகுதிகளும் கூறுதல் நுதலிற்று.

பொருள்:—(இ-ள்.) போகிய திறத்து நற்றாய் புலம்பலும்=தலைமகள், தலைவனுடன் போனவழி, அவளைப் பெற்ற நற்றாயின் துனிதரும் தனிமையில் மகட் பிரிவின் அகப்பரிவாற் கூறுவனவும்; தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி=தன்னையும், தலைமகனையும் (அவனுடன் சென்ற) தன் மகளையும் குறித்து; மன்னு நிமித்தம்=அடிப்பட்ட புள் என்னும் நிமித்தங்களோடும்; மொழிப்பொருள்= விரிச்சி என்னும் நற்சொல்லோடும்; தெய்வம்=வேலன்

வெறியாடல் முதலிய கடவுட் பராவலோடும்; நன்மை தீமை அச்சம் சார்தல் என்று=உடன் போக்கால் உளதாம் நன்மை தீமை அச்சம் சார்தல் என்பவற்ரோடும்; அன்ன பிறவும்=அத்தகைய இடங்களுக்கேற்ற பிற கூற்றுக்களையும்; அவற்றொடு தொகைஇ=மேற்கூறியவற்றொடு சேர்த்து; முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி; இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலங்களோடும் இயைய விளக்கி; தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும் = தலைவியின் தோழியிடத்தும், தலைமக்களைக் கண்டு வருவோரிடத்தும்; ஆகிய கிளவியும்=நிகழும் கூற்றுக்களும்; அவ்வழி உரிய=அந்நிலையில் உரியனவாகும்.

குறிப்பு:—போகிய திறத்து என்பதை முன்னே கூட்டிச் சூத்திரத் துறைகள் அனைத்திற்கும் பொதுவாக்கிப் பொருள் கொளலே பொருந்தும். 'ஆகிய கிளவி' என்பதனை, "தன்னும் அவனும் அவளும் சுட்டி" என்பது முதல் 'மூன்றுடன் விளக்கி' என்பது வரை ஒவ்வொன்றனோடும், 'தோழி தேஎத்தும், கண்டோர் பாங்கினும், புலப்பலும்' என்பவற்ரோடும் தனித்தனிக் கூட்டுக. 'அவ்வழி' என்பது அவ்வாறு உடன் போகிய மகட் பிரிவுக்கு வருந்தும் வழி என்றாகும். 'புலப்பல்', தோழி தேஎத்தும், கண்டோர் பாங்கினும், வருந்திக் கூறலைச் சுட்டலாகப் பொருள் கோடல், 'புலம்பே தனிமை' (உரி-33) என்னும் சூத்திரக்கருத்துக்கு மாறாகும். ஆதலால் நச்சியின் தனிப்படர் இரக்கத்தையே அச்சொல் உணர்த்து மென்க. 'நிமித்தம்' என்பது

காக்கை கரைதல், பல்லி ஒலி, ஓந்தி நிலை, இடத்தோள் இடக்கண் துடிப்பு முதலியவைகளைக் கொண்டு நன்மை தீமை துணிதல். இதற்குப் புள்ளறிதல் என்றே பெயர் வழங்கிற்று. முதலில் பறவைகளைக் கொண்டு குறி பார்க்கும் வழக்கத்தால் பறவையைக் குறிக்கும் புள் என்னும் பெயர் நாளடைவில் எல்லாக் குறிகளையும் குறிக்கும் நிமித்தத்திற்கே வழங்கலாயிற்று. 'மொழிப் பொருள், என்பது நற்சொல்; விரிச்சி, நற்சொல், மொழிப் பொருள்' என்பன ஒரு பொருட் கிளவிகள். விரிச்சியை,

"வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு
ஈண்டிருண் மாலைச் சொல்லோர்த் தன்று"

என்பர் புறப்பொருள் வெண்பாமாலையார்.

(i) தன்னும் அவனும் அவளும் சுட்டித் தாய் கூறும் கிளவிக்குச் செய்யுள்:—

"இரும்புனிற் றெருமைப் பெருஞ்செவிக் குழவி
பைந்தா தெருவின் வைகுதுயின் மடியுஞ்
செழுந்தண் மனையோ டெம்மிவ ணொழியச்
செல்பெருங் காளை பொய்மருண்டு, சேய்நாட்டுச்
சுவைக்காய் நெல்லிப் போக்கரும் பொங்கர்
வீழ்கடைத் திரள்காய் ஒருங்குடன் தின்று
வீசுனைச் சிறுநீர் குடியினள் கழிந்த
குவளை உண்கண்என் மகளோ ரன்ன
செய்போழ் வெட்டிப் பெய்த லாய
மாலைவிரி நிலவிற் பெயர்புபுறங் காண்டற்கு

மாயிருந் தாழி கவிப்பத்
தாவின்று கழிகஎற் கொள்ளாக் கூற்றே".

(நற்றிணை 271).

இச்செய்யுளின் 'எம் இவண் ஒழிய எனவும்,' 'எற்கொள்ளாக் கூற்றே' எனவும் தாய் தன்னையே சுட்டியும், 'செல்பெருங்காளை பொய் மருண்டு' எனத் தலைவனைச் சுட்டியும், 'வீசுனைச் சிறுநீர் குடியினள் கழிந்த குவளையுண்கண் என் மகள்' என உடன் போன மகளைச் சுட்டியும் கூறுதல் காண்க.

"என்னும் உள்ளினள் கொல்லோ, தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு
அழுங்கல் மூதூர் அலரெழச்
செழும்பல் குன்றம் இறந்தவென் மகளே"

(ஐங். 372)

எனும் செய்யுளுமது.

(ii) நிமித்தத்தொடு சார்த்தி நற்றாய் கூறும் கிளவிக்குச் செய்யுள்:—

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொடு
அஞ்சி லோதியை வரக்கரைந் தீமே".

(ஐங். 391.)

(iii) மொழிப்பொருள் என்ற நற்சொல்லாம் விரிச்சி யொடு படுத்து நற்றாய் கூறுதற்குச் செய்யுள் :—

“அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்;
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ளடுங்குசுவ லசைத்த கையள், கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
‘இன்னே வருகுவர் தாயர்’ என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்; அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனை கவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது; நீநின்
பருவர லெவ்வம் களைமா யோயென”.
(முல்லைப்பாட்டு வரி. 7—21)

(iv) தெய்வத் தொடுபடுத்தி நற்றாய் கூறும்கிளவி :—

‘அருஞ்சுர மிறந்தஎன் பெருந்தோட் குறுமகள்’ என்னும் அகம் (195)ஆம் பாட்டில், “அறுவை தோயும் ஒருபெருங்குடுமிச் சிறுபைஞ்ஞாற்றிய பல்குறலைக் கருங் கோல் ஆகுவ, தறியும் முதுவாய் வேல, கூறுக மாதோ நின்கழங்கின் திட்பம், ஆறுது வருபனி கலுழும் கங்கு லின் ஆனது துயரும் என்கண் இனிது படீஇயர், எம்

மனை முந்துறத் தருமோ, தம்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே" எனவரும் அடிகள் தெய்வத்தொடு படுத்து நற்றாய் கூறும் கிளவியாகும்.

(v) "நன்மை சார்தல்:—

மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங்குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல,
அறநெறி இதுவெனத் தெளிந்தஎன்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே".

எனும் ஐங்குறுநூற்று (371)ச் செய்யுள் மகளின் நன்மை கருதிய தாய்கூற்றும்.

(vi) உடன் போய மகளின் துன்புறு தீமை கருதித் தாய் கூறும் கிளவி:—

"நிழலான் றவிந்த நீரி லாரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்குவல் லுநள்கொல் தானே ஏந்திய
செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த
பாலும் பலவென உண்ணுள்
கோலமை குறுந்தொடித் தளிரன் னோளே"

(குறு. 356.)

"நீர்நசைக் கூக்கிய உயவல் யானை
இயம்புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்
சென்றனள் மன்றஎன் மகளே
பந்தும் பாவையும் கழங்குமெமக் கொழித்தே"
(ஐங். 377.)

என்பதும் அது.

(vii) "அன்ன பிறவும்" என்றதால், சூத்திரத்தில் விதந்து கூறியன வல்லாத பிற பொருந்துந் துறைகளும் சுட்டப்பட்டன. தலைவியினற்றாய் தன் மகளையுடன்கொண்டு சென்ற தலைவன் தாயை வெறுத்து நொந்து கூறுவது, "அன்னபிற" வற்றுள் ஒன்றாகும். அதற்குச் செய்யுள்:—

"நினைத்தொறுங் கலிழும் இடும்பை எய்துக,
புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை
மான்பிணை அணைதர ஆண்குரல் விளிக்கும்
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
வம்பமை வல்வில் விடலை தாயே". (ஐங். 378.)

(viii) 'முன்னியகாலம் மூன்றுடன் விளக்கிப் போகிய திறத்து' நற்றாய் கூற்றுக்குச் செய்யுள்:—

"பிரசங் கலந்த சிறுமதுகை யளே"

எனும் போதனார் நற்றிணைப் பாட்டில்,

"......................பூந்தலைச் சிறுகோல்
'உண்' என் றோக்குபு புடைப்ப,...........

அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்தொழியப் பந்த ரோடி
ஏவன் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி,
அறிவும் ஒழுக்கமும் யாண் டுணர்ந்தனள்கொல்? •
கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தந்தை கொடுஞ் சோறுள்ளாள்;
ஒழுகுநீர் நுணங் கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணுஞ் சிறுமது கையளே".

(நற்றிணை. 110)

எனுமடிகளில், தன் மகளின் கழிந்த இளமைச் செய்தியும், அறிவொழுக்க நிகழ்காலச்செய்தியும், அவள் மனையற எதிர்கால மாட்சியும் தாய் கூறுதலறிக.

(ix) தோழி தேளத்து நற்றாய் கூற்றுக்குச் செய்யுள்:—

"செல்லிய முயலிற் பாஅய சிறகர்
வாவ லுகுக்கு மாலையாம் புலம்பப்
போகிய அவட்கோ நோவேன், தேமொழித்
துணையிலள் கலிமு நெஞ்சின்
இணையே ருண்கண் இவட்குநோ வதுவே".

(ஐங். 378.)

(x) கண்டோர் பாங்கில் நற்றாய் கூறுதற்கு எடுத்துக் காட்டுச் செய்யுள்:—

"ஒருமக ளுடையேன் மன்னே; அவளும்
செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு
பெருமலை அருஞ்சுரம் நெருநற் சென்றனள்;

இனியே, தாங்குநின் அவலமென்றிர்; அதுமற்று
யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடை யீரே?
உள்ளின் உள்ளம் வேமே, உண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னவென்
அணியியற் குறுமகள் ஆடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியுங் கண்டே".

(நற்றிணை. 184.)

இப்பாட்டில், 'தாங்குநின் அவலமென்றிர், அதுமற்று யாங்ஙனம் ஒல்லுமோ அறிவுடையீரே' என அறிவுடையோராகிய கண்டோர் பாங்கில் நற்றாய் பகர்ந்த கிளவி காண்க.

(xi) நற்றாய் தனிமையிற் கூறல்:—

"இதுவென் பாவை பாவை, இதுவென்
னலமரு நோக்கி னலம்வரு சுடர்நுதற்
பைங்கிளி எடுத்த பைங்கிளி, என்றிவை
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோஎன் பூங்க ணோளே."(ஐங். 375.)

எனும் ஐங்குறு நூற்றுச் செய்யுள், மகட் பிரிந்ததாய் ஆற்றாமையால் வருந்தும் புலப்பு சுட்டிய கிளவியாகும்.

சூத்திரம்:—36.

"ஏமப பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும்,
தாமே செல்லுந் தாயரு முளரே."

கருத்து:—இது, தலைவி உடன்போனவழி அவள் தாய்மார் அவளைத் தேடிச் செல்லுதலும் உண்டென உரைக்கின்றது.

பொருள்:—ஏமப் பேரூர்ச் சேரியும்=தீதுறுக்காவலுடைய பேரூரைச்சார்ந்தசேரியிலும்; சுரத்தும்=தலைவி உடன்போகிய அருவழியிலும்; தாமே செல்லும் தயருமுளரே=தன்னையர் தமர் முதலியோர் துணையின்றிச் சென்ற மகளைத் தேடித் தாமே செல்லும் தாய்மாரும் உளராவர்.

குறிப்பு:—ஏமமற்ற வூராயின் தாயர்மனையிறந்து புறஞ்செல்லாராதலின் 'ஏமப் பேரூர்ச்சேரி' எனப்பட்டது; ஏமப் பேரூர்ச் சேரியாயின், அதனளவு மகட்பெற்ற நற்றாய் தேடிச் செல்லுதல் அமையும்; நற்றாய் சுரஞ் சென்று தேடுதல் வழக்காறில்லை. செவிலித் தாயர் சுரத்தும் தேடிச் செல்வர். இதுவே பண்டைய ஆன்றோர் செய்யுளிற்கண்ட புலனெறி வழக்கம். சிற்றூராயின் தேடிச்செல்லுதல் வேண்டாவாதலின் சேரியுடைய பேரூரே கூறப்பட்டது. 'தாயரும்' எனும் உம்மையால், தாமே செல்லும் தாயர் சிலரேயாவரென்பதும், தேடப் பிற அயலோரை ஏவும் தாய்மாரே பலராவரென்பதும் பெறப்படும். அடுத்துப் பின் கூறும் "அயலோரோடு" சுரம் செல்லும் தாயருமுளரெனச் சுட்டுவதால் இவ்வும்மை எதிரது தழீஉம் எச்சமுமாம்.

இனி, சேரியும் சுரத்தும் என ஒருங்கெண்ணி 'செல்லுந் தாயரும் உளர்' எனப் பன்மையாற் கூறுத

லால், நற்றாய்மனையிருந்து இரங்குவதன்றி மனையிறந்து புறம்பெயர்தல் இன்றெனக் கொண்டு, செவிலித்தாயமே சேரியும் சுரத்தும் செல்வர் எனப் பொருள் கொள்ளி னும் தவறாகாது, நற்றாய் பேரூர்ச்சேரி அளவு தேடிச் செல்லுதற்குச் செய்யுள் வருமாறு:— "ஓங்குநிலைத் தாழி மல்கச் சார்த்தி" (275) என்னும் அகப்பாட்டில் "வெம்மலை அருஞ்சுரம்...... கண்ணுடையீரே" என வருமடிகள் ஏமப்பேரூர்ச்சேரியில் தேடிச்சென்ற நற் றாய் கூற்றாகும். "கூழை நொச்சிக் கீழது என்மகள் செம்புடைச் சிறுவிரல் வரித்த வண்டலுங் காண்டிரோ" என்பதனால் அப்பேரூர் காவல் மதிலுடையதென்பதும், அந்நகர் மதிற்புறத்தே தன்மகள் விரல்கொண்டு வரித்த வண்டல் காணக்கிடப்பதாய்க் குறித்ததனால் அது நகர்ப் புறச்சேரி என்பதும் விளக்கமாகும். அன்றியும், 'நம் மிவணொழிய' என நற்றாய் தன் முன்னிலையோரையும் உளப்படுத்திக் கூறினதால், அவர் தலைமகள் ஊரவரா தலும், தன்னைப்போல் அவரையும் தலைமகள் விட்டுச் சென்றாள் எனச்சுட்டுந் தாயினுளக்குறிப்பும் தெளியப் படும்.

இனி, செவிலி தேடிச் செல்லுதற்குச் செய்யுள்:—

"காலே பரிதப் பினவே, கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே,
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே."

(குறுந். 44.)

பாலைக்கலியில், "எறித்தரு கதிர்தாங்கி" எனும்பாட்டில்,

"வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்! இவ் விடை, என்மகள் ஒருத்தியும், பிறன்மகன் ஒருவனும், தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்; அன்னார் இருவரைக் காணீரோ பெரும" எனுமடிகள் சுரஞ்சென்ற செவிலியின் கூற்றும்.

சூத்திரம் :—37.

"அயலோ ராயினும் அகற்சி மேற்றே".

கருத்து :-இது, மேலதற்கோர் புறனடை கூறுகிறது.

பொருள் :—அயலோராயினும் = உடன்போயவரைத் தேடிச் சுரஞ்செல்லுஞ் செவிலித்தாயரன்றி, தமர், ஏவலர் முதலிய பிறரேயாயினும்; அகற்சி மேற்றே = அவர்தேடுதல் அண்மைச்சேரியன்றி அகன்ற சேய்மைச்சுரத்தின் கண்ணதேயாகும்.

குறிப்பு :—மேற் சூத்திரத்தில் சொல்லிய இரண்டனுள் தாயரே செல்லும் அண்மைச் சேரியை விலக்கிச் சேய்மைச் சுரத்திற்குத் தாயரல்லாப்பிறர் தேடிச்செல்லுதல் மரபு, ஈற்றேகாரம் தேற்றம். உம்மை, செவிலியர் போல அயலோரும் சேண்சுரம் செல்வரெனச் சுட்டலால் இறந்ததுதழீஇய எச்ச உம்மையாம்.

இதற்குப் பழைய உரைகாரர் வேறுபொருள் கூறுவர். அதுவருமாறு :— அயலோராயினும் = முற்கூறிய

சேரியினும் சுரத்தினு மன்றித் தம்மனைக்கயலே பிரிந்தா ராயினும்; அகற்சிமேற்றே = அதுவும் பிரிவின் கண்ண தாம் என இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் உரை கூறுவர். மேற்சூத்திரம் கூறும் சேரியுஞ் சுரமும் காதலர் பிரியுமிடம் குறியாது, உடன்போன தலைமக்களைத் தாய்மார் தேடிச்செல்லும் இடத்தையே குறிக்கு மாதலால், அங்குப்பிரியாமல் தம்மனை அயலேபிரிதலை இச்சூத்திரம் கூறுவதாகக்கொள்ளும் அவ்விருவர் உரையும் பொருந்தாது. அன்றியும் மேற்சூத்திரம் பாலையாம் பிரிவைக் குறிப்பதேயன்று; பிரியாமல் உடன் போன தலைமகளை அவள்தாயர் தேடிச் செல்லுதலை மட்டுமே குறிக்கும். பிரிவையே கருதாத இச்சூத்திரம் பிரியுமிடத்தணிமை குறிக்கும் எனல் எவ்வாற்றானும் அமைவதன்றாம். அதனாலும் அவர்தம் உரை தொல்காப்பியர் கருத்தன்மை அறிக.

இனி, இதற்கு இன்னும் ஒருபொருள் கூறுவாருமுளர். அதுவருமாறு:— அயலோராயினும் = உடன்போய தலைமக்கள் சுரம் போகாமல் ஊரகத்தே மனை அயலில் தங்குவாராயினும்; அகற்சிமேற்று = அதுவும்பிரிவின் கண்ணதேயாம்.

இவ்வுரையும் இச்சூத்திரத்திற்குப்பொருந்தாது.

மனையயல் உறைதல் உடன்போதலாமாறில்லை. உடன்போய தலைமக்கள் மனையயல் உறைந்ததாகப் புலனெறி வழக்கில் யாண்டும் ஆன்றோர் செய்யுளிலாட்சி

யுமில்லை; 'தாமே செல்லும் தாயரும்' என்னும் முன் சூத்திரத்தொடரொடு அடுத்தியையும் அயலோராயின் எனும் சொற்றொடர் அவ்வாறு செல்லுந் தாயரல்லாப் பிறரையே சுட்டுவது வெளிப்படை. மேலும், 'அகற்சி' என்பது நெடுந்தூரத்தையே குறிக்குமாதலின், மனை அயலைக்குறியாது. 'அகற்சி'யை நீங்குதல் எனப் பொருள் கொண்டு, பிரிவெனும் பாலைத்திணையை இச் சூத்திரம் கூறுவதாக உரையாசிரியர் கொண்டனர்; முன், அவர் கொண்டுதலைக்கழிதலைப் பாலைத்திணையாகக் கொண்டதுபற்றி இச்சூத்திரத்திற்கும் இவ்வாறு உரை கூறுவாராயினர். உடன்போகும் தலைமக்கள் தம்முட் பிரிதலின்மையின், அவரொழுக்கம் பாலையாதலில்லை. அதனால் ஈண்டு 'அகற்சி' என்பது பிரிதலை உணர்த்தாது சேய்மையையே உணர்த்துமென்க. தலைவிதமர் தேடிச் சுரஞ் செல்லுதற்குச் செய்யுள் வருமாறு:—'அன்றை யனையவாகி' என்னும் நற்றிணை (48)-ஆம் செய்யுளில், "நீர்எமரிடை உறுதர ஒளித்த காடே" என வருவதும், நற்றிணை (362)-ஆம் செய்யுளில், 'நுமர்வரின் மறைகுவென் மாஅயோளே' என்பதும் சேண் சென்று தமர் தேடுதலைக் குறிக்கும்.

சூத்திரம்:—38.

"தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்,
போக்கற் கண்ணும், விடுத்தற் கண்ணும்,
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்,
வாய்மையும், பொய்மையும், கண்டோர்ச் சுட்டித்

தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்,
நோய்மிகப் பெருகித்தன் நெஞ்சுகலுழ்ந் தோளை
அழிந்தது களையென மொழிந்தது கூறி
வன்புறை நெருக்கி வந்ததன் திறத்தோ
டென்றிவை யெல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன."

கருத்து:—இச்சூத்திரம் தோழிக்குக் கூற்று நிகழு மிடம் உணர்த்துகின்றது.

பொருள்:—தலைவரும் விழும நிலையெடுத்துரைப்பி னும்=தலைவனுக்கும் தலைவிக்கும் பிரிவால்வரும் ஏதப் பாடுகளை எடுத்துக் கூறுதற்கண்ணும்; போக்கற்கண் ணும்=தலைமகனுடன் தலைவியை அனுப்புமிடத்தும்; விடுத்தற்கண்ணும்=உடன்கொண்டு செல்லாமல், தலை வன் தலைவியை விட்டுப் பிரியுமிடத்தும்; நீக்கலின் வந்த தம்முறு விழுமமும் = தலைவி தன்னையும் தமரையும் நீத்துச் செல்லுதலால் தனக்கும் தாயர்முதலிய தமருக் குமுற்ற துன்பத்தையும்; வாய்மையும் பொய்மையும் கண்டோர்ச் சுட்டித் தாய் நிலைநோக்கித் தலைப்பெயர்த் துக் கொளினும்=மெய்யையும் பொய்யையும் புனைந்து கூறியும் கண்டோரைக்காட்டியும் நற்றாயின் பருவரலைக் கருதி மறுத்தரத் தலைவியை வரவேற்றுக்கொள்ளுதலி னும்; நோய் மிகப் பெருகித்தன் நெஞ்சு கலுழ்ந்தோளை =தலைவன்விடுத்தகல ஆற்றாமையால் மிக நொந்து மனங் கலங்கும் தலைவியை; அழிந்தது களையென=வருந்து தலை ஒழியென; மொழிந்தது கூறி=தலைவன் கூறியதை

எடுத்துக்கூறி; வன்புறை நெருங்கிவந்ததன் திறத்தொடு =வற்புறுத்தி ஆற்றுவிக்கும் கூற்றுக்கள் நிகழ்த்தும் திறத்தொடு; என்றிவை யெல்லாம்=இவை போல்வன பிற பொருந்துவனவெல்லாம்; இயல்புறநாடின் ஒன்றித் தோன்றும் தோழிமேன=அகத்துறை இலக்கணத்தை ஆராயின் தோழிக்குரியனவாய்ப் பொருந்தித்தோன்றும்.

குறிப்பு:—விடுத்தற் கண்ணும் என்பதற்குப் பண்டை உரையாளராய இளம்பூரணர் தலைவியைத் தோழி தலைவனுடன் கூட்டிவிடுத்தற்கண்ணும் எனப்பொருள் கூறுவர். 'போக்கற் கண்ணும்' என்பதும் இதனையே குறிக்குமாதலின், இவர்பொருள் ஆசிரியர்க்குக் கூறியது கூறல் என்னும் குற்றம்தரும். அன்றியும், பின் தலைவன் கூற்றுக்களைக்கூறும், 'ஒன்றாத் தமரினும்' எனும் சூத்திரத்தில் தலைவன் தலைவியை "ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்" என்று தொல்காப்பியர் கூறுதலான், தலைவியைத் தலைவன் உடன்கொண்டு செல்லுதலும் விடுத்துச்செல்லுதலும் உண்டெனத் தெளியக் கிடத்தலின், ஈண்டு விடுத்தல் என்பதும் தலைவியைத் தலைவன் விட்டுச்செல்லலையே குறிக்குமென்பது ஒரு தலை. இச்சூத்திரத்தில் தலைவன் மொழிந்ததை எடுத்துக்கூறித் தலைவியைத் தோழி ஆற்றுவித்தலைக் கூறுதலானும், தலைவி வருந்தத் தலைவன் அவளைவிட்டுச் செல்லுதலுண்டென்பது போதரும்.

'தலைப்பெயர்த்துக் கொளினும்' என்பதற்கு நச்சினார்க்கினியர் உடன்போய தலைவியைத் தேடிச்செல்லா

மல் தாயை மீட்டுக்கொள்ளுதல் எனப்பொருள் கொள்ளு வர். இதற்கு ஆன்றோர் செய்யுள் ஆட்சியின்மையின் இவ்வுரை சிறவாது. இதற்கு நச்சினார்க்கினியர் காட்டும், 'அவளே, உடனமர் ஆயமொடு ஒரைவேண்டாது' "எனும்பாட்டில் சுரஞ்செல்லும்தாயை மீட்ட குறிப் பொன்றுமில்லை. மகட் பிரிவுக்கு வருந்தும் தாயைத் தோழிஆற்றுவித்ததையே இச்செய்யுள் குறிக்கிறது.

"பால்பாற் படுப்பச் சென்றனள்; அதனால்
நீஎவ னிரங்குதி அன்னை
விழவயர்ந் திருப்பின் அல்லதை இனியே."

எனபதே ஈண்டுத் தோழி கூற்றுதல் காண்க. 'ஒழிந்தது கூறி' என நச்சினார்க்கினியர் கொண்ட பாடத்தினும், காலத்தால் முற்பட்ட இளம்பூரணர் கொண்ட 'மொழிந் தது கூறி' எனும் பாடமே மரபுநிலை வழாச்சிறப்பும் செவ்வியு முடைத்து. வன்புறை நெருங்குதலாவது, வற்புறுத்திக் கூறலாகும்.

இனி, "நோய்மிகப் பெருகித் தன் நெஞ்சுகலுழ்ந் தோளை, அழிந்தது களைஇய ஒழிந்ததுகூறி வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு" எனப்பாடங்கொண்டு, 'மகட் பிரிவாற்றாது அரற்றும் தாயை அவள் வருத்தம் தீர்த்தல் கருதி, தலைவியும் தலைவனும் கூறியனவும் செய்தனவும் எடுத்துச்சொல்லி விரைவில் மீள்வாரென வற்புறுத்தித் தேற்றுங் கூற்றோடே', எனப் பொருள் கொள்ளுவதும் பொருந்துவதாகும். அதற்குச் செய்யுள்:- "அன்னை வாழியோ அன்னை நின்மகள்" எனும் கீழ் வருஞ் செய்யுள் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

'தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தற்' குச் செய்யுள் :—

"பொலம்பசும் பாண்டிற் காசுநிரை அல்குல்
இலங்குவளை மென்றோள் இழைநிலை நெகிழப்
பிரிதல் வல்லுவை யாயின்
அரிதே விடலையிவள் ஆய்நுதற் கவினே"

(ஐங். 310.)

இனி, தோழி தலைவற்குத் தலைவி விழுமம் கூறுதற்குச் செய்யுள் :—

'பாஅல் அஞ்செவி' எனும் பாலைக்கலியில்,

"பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெங்காளோ நெடுந்தகாய் நீசெல்வ
தந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரோ"

(பாலைக்கலி—5.)

என வரும் போக்கியலுமதுவே.

இனி, தோழி தலைவிக்குத் தலைவன் விழுமம் உரைத்தற்குச் செய்யுள் வருமாறு :—

"தினைகிளி கடிகெனிற் பகலும் ஒல்லும் ;
இரவுநீ வருதலின் ஊறும் அஞ்சுவல் ;
யாங்குச்செய் வாமென் னிடும்பை நோய்க்கென
ஆங்குயான் கூறிய அனைத்திற்கும் பிறிதுசெத்
தோங்குமலை நாடன் உயிர்த்தோன் மன்ற;
ஐதே காமம்; யானே
கழிமுதுக் குறைமையின் பழியுமென் றிசினே".

(குறு. 217.)

போக்கற்கண் தோழி தலைவற்குக் கூறியதற்குச் செய்யுள் வருமாறு:—

"பெருநன் றாற்றிற் பேணாரு முளரே.
ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர வளிமதி, இலைகவரப்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட! நின்னல திலளே." (குறு. 115.)

"அண்ணாந்தேந்திய" எனும் நற்றிணை (10)-ஆம் செய்யுளில் 'நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும் நீத்தல் ஓம்புமதி பூக்கேழூர' என்பதும் போக்கற்கண் தோழி தலைவனுக்குக் கூறியதாகும்.

"இவளே நின்னல தில்லே, யாயும்
குவளை யுண்கண் இவளல திலளே,
யானு மாயிடை யேனே,
மாமலை நாட! மறவா தீமே."

எனவரும் செய்யுளுமது.

தலைவனுடன் போக்கற்கண் தோழி தலைவிக்குக் கூறியதற்குச் செய்யுள்:—

"ஊஉர் அலரெழச் சேரி கல்லென;
ஆனா தலைக்கும் அறனில் அன்னை
தானே யிருக்க தன்மனை யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க

உணலாய்ந் திசினு லவரொடு சேய்நாட்டு
விண்டொட நிவந்த விளங்குமலைக் கவாஅற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே."

(குறு. 262)

இது, தலைவியொடு தன்னை ஒருப்படுத்துணருந் தோழி கூற்று.

தலைவியைத் தலைவன் விட்டுப்பிரியுமிடத்துத் தோழி தலைவற்குக் கூறியதற்குச் செய்யுள்:—

"உமணர்ச்

சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்றலை
ஊர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்காடு
இன்னா வென்றீ ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே"

(குறு. 124.)

இதுவும் தன்னைத் தலைவிபோற் கூறும் தோழி கூற்று.

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்,

என்னீர் அறியாதீர்போல இவைகூறின்,
நின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ எமக்கு." (கலி-6)

எனும் பாலைக் கலியுமது.

"ஒன்றில்காலை அன்றில் போலப்
புலம்புகொண் டுறையும் புன்கண் வாழ்க்கை
யானுமாற் றேனது தானும்வந் தன்று
நீங்கல் வாழி யரைய..."

எனும் நற்றிணைப் பாட்டும், தலைவிபோற் கூறும் தோழி கூற்று.

"மால்வெள் ளோத்திரத்து மையில் வாலிணர்
அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும்
அவ்வரை இறக்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே."

எனவரும் ஐங்குறுநூற்றுச் (301) செய்யுளுமது.

தோழி தலைவிக்குக் கூறியதற்குச் செய்யுள் வருமாறு:—

"நிலந்தொட்டுப் புகாஅர், வானமேறார்,
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்,
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்

குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே.”

(குறு. 130.)

“பொன்செய் பாண்டிற் பொலங்கல நந்தத்
தேரக லல்குல் அவ்வரி வாட
இறந்தோர் மன்ற தாமே பிறங்குமலைப்
புல்லரை யோமை நீடிய
புலிவழங் கதர கானத் தானே.”

(ஐங். 316.)

எனும் ஐங்குறுநூற்றுப் பாட்டுமதுவே.

நீக்கலின்வந்த தம்முறு விழுமம் தோழி கூறுதற்குச் செய்யுள் :—

“அன்னை வாழியோ அன்னை, நின்மகள்
என்னினும் யாயினும் நின்னினும் சிறந்த
தன்னமர் இளந்துணை மருட்டலின் முனாஅது
வென்வேற் புல்லி வேங்கட நெடுவரை
மழையொடு மிடைந்த வயக்களிற் றருஞ்சுரம்
விழைவுடை உள்ளமொடு உழைவயிற் பிரியாது
வன்கண் செய்து சென்றனள்;
புன்கண் செய்தல் புரைவதோ அன்றே.”

தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளற்குச் செய்யுள் :—

“ புள்ளு மறியாப் பல்பழம் பழுநி
மடமான் அறியாத் தடநீர் நிலைஇச்
சுரநனி இனிய வாகுக வென்று
நினைத்தொறுங் கலிழு மென்னினும்
மிகப்பெரிது புலம்பின்று தோழிநம் மூரே.”
(ஐங். 398.)

அழிந்தது களையென மொழிந்தது கூறி வன்புறை நெருங்கித் தோழி கூறுதற்குச் செய்யுள் :—

‘ அரிதாய அறனெய்தி ’ என்னும் பாலைக் கலியில்,

“ கடியவே கனங்குழாய் காடென்றார், அக்காட்டுள்
... ... ... ...
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும்
உரைத்தனரே.”
(கலி. 10.)

என்பதுபோன்ற தலைவன்மொழிந்தவற்றை எடுத்துக் காட்டி,

“ இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர்; மனைவயின்
பல்லியும் பாங்கொத் திசைத்தன;
நல்லெழி லுண்கணும் ஆடுமா லிடனே.”

எனக்கூறி, அழியும் தலைவியை ஆற்றுவித்தல் காண்க.

“ தண்கயத் தமன்ற வண்டுபடு துணைமலர் ” எனும் மருதனிளநாகனார் அகப்பாட்டில் (அகம். 59.)

"வருந்தினை வாழியர் நீயே;
... ... ...
தாம்பா ராட்டிய காலையு முள்ளார்
பிரிந்து சேணுறைநர் சென்ற வாறே,
புன்தலை மடப்பிடி உணீஇயர் அங்குழை
நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுள்
படிஞிமி றுகடியும் களிறே."

என்று எடுத்துக்காட்டி அழியும்தலைவியைத் தோழி ஆற்றுவித்தலும் காண்க.

இனி, 'என்றிவை எல்லாம்' எனப் பொதுப்படக் கூறுதலான், தோழி 'இது பருவமன்று' என்பது போன்ற கூற்றுக்கள் நிகழ்த்தி ஆற்றுவித்தலையுங் கொள்க. அதற்குச் செய்யுள் வருமாறு:—

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை;
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ரூழ்த்த,
வம்ப மாரியைக் காரென மதித்தே."
(குறுந். 66.)

சூத்திரம்:—39.

"பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவி னாகிய குற்றங் காட்டலும்

ஊரது சார்வும் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக் ககன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டதென்ப."

கருத்து:—இது, தலைமக்கள் உடன்போக்கின்கண் கண்டோர் கூற்று நிகழுமிடம் கூறுகின்றது.

பொருள்:-பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவினாகிய குற்றங் காட்டலும் = அவர் போகும் நேரமும் வழியும் அச்சந்தரத்தக்கவாக, அவை அஞ்சாது சென்று இடையுறு மேதங் கருதாதேகும் பிழையை அவர்கட்கு எடுத்துக் காட்டுதலும்; ஊரது சார்வும் = உடன் போவார்க்கு வழித்தங்க அண்மையில் ஊருண்மையையும்; செல்லும் தேயமும் = அவர்கள் செல்லுமிடத்தின் சேய்மையையும்; ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும் = அன்பு நிறைந்த உள்ளத்தொடு தலைமக்கட்கு அவர் நலம் பேணிப் பரிந்துகூறுமிடத்தும்; தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்தெதிர் கூறி விடுப்பினும் = காதலால் கூடின தலைமக்கள்பால் அன்புற்ற உள்ளத்தோடு அவர் நிலைமைக்கு வருந்தி எதிரெடுத்துரைத்து அவரை விடுவிக்குமிடத்தும்; ஆங்கத் தாய் நிலைகண்டு தடுப்பினும் = தலைமக்களைத் தாங்கண்டசுரத்திடையே தேடிவரும் செவிலித்தாய் நிலைமைகண்டு

அவளை மேற்செல்லாது தடுத்துரைக்கு மிடத்தும்; விடுப்பினும்=நீ மேற்செல்லின் தலைமக்களைக் காண்பை எனக்கூறி அவளைப்போக விடுக்குமிடத்தும்; சேய் நிலைக் ககன்றோர் செலவினும் வரவினும்=தொலை செல்லும் தலைமக்களின் உடன்போக்கிலும், அவர் மறுதரவிலும்; கண்டோர் மொழிதல் கண்டதென்ப = உடன் போம் தலைமக்களைக்கண்டவர்கள் கூற்று நிகழ்த்தல், வழக்கின்கண் காணப்பட்டதென்பர் அகப்பொருள் நூலார்.

பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவினாகிய குற்றங் காட்டற்குச் செய்யுள் :—

"எல்லு மெல்லின்று, பாடுங் கேளாய்,
செல்லா தீமோ சிறுபிடி துணையே
வேற்றுமுனை வெஃமையிற் சாத்துவந் திறுத்தென,
வளையணி நெடுவே லேந்தி
மிளைவந்து பெயருந் தண்ணுமைக் குரலே."
(குறு. 390.)

கண்டோர் ஊரணிமை கூறும் கிளவி வருமாறு:—

"நல்லோண் மெல்லடி நடையு மாற்றாள்,
பல்கதிர்ச் செல்வன் கதிரும் வீழ்த்தனன்,
அணித்தாற் றோன்றுவது எம்மூர்,
மணித்தார் மார்ப! சேர்ந்தனை சென்மோ."
(பொருள்-புறத்-சூ-40. உரைமேற்கோள்.)

ஆர்வ நெஞ்சமொடு கண்டோர் கூறியதற்குக் கூற்று :—

“ வில்லோன் காலன கழலே, தொடியோண்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே, நல்லோர்
யார்கொல் அளியர் தாமே, ஆரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னியோரே.”
(குறு. 7.)

பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து
செங்கால் மராஅத்த வரிநிழல் இருந்தோர்
யார்கொல்? அளியர் தாமே, வார்சிறைக்
குறுங்கால் மகன்றில் அன்ன
உடன்புணர் கொள்கைக் காதலோரே.’

எனும் ஐங்குறு நூறு (381) மது.

அழிந்தெதிர் கூறிவிடுத்தற்குச் செய்யுள் :—

“ இதுநும் மூரே, யாவருங் கேளிர் ;
பொதுவறு சிறப்பின் வதுவையுங் காண்டும் ;
ஈன்றோர் எய்தாச் செய்தவம்
யாம் பெற்றனமால் மீண்டனை சென்மோ.”
(பொருள்—40சூ—மேற்கோள்.)

தாய் நிலை கண்டு கண்டோர் தடுத்தற்குச் செய்யுள் :—

"பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி!
சிலம்புகெழு சீறடி சிவப்ப
இலங்குவேற் காளையொடு இறந்தனள் சுரனே.

தாய் நிலை கண்டு விடுத்தற்கு மேற்கோள் :—

"நெருப்பவிர் கனலி உருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழ லிரீஇச்
சிறுவரை இறப்பிற் காண்குவை, செறிதொடிப்
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே"

(ஐங். 388.)

சேய் நிலைக்ககன்றோர் செலவிற் கண்டோர் கூறும் கூற்று :—

"செய்வினைப் பொலிந்த செறிகழல் நோன்தாள்
மையணற் காளையொடு பைய வியலிப்
பாவை யன்னஎன் ஆய்தொடி மடந்தை
சென்றனள், என்றிர் ஐய!
ஒன்றின வோஅவள் அஞ்சிலம் படியே?

(ஐங். 389.)

இதில் செவிலி கொண்டுகூறும் கண்டோர் கூற்றைக் காண்க.

மறுவரவின்கட் கண்டோர் கூறுதற்குச் செய்யுள் :—

"இவன்இவள் ஐமபால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது

ஏதில் சிறுசெரு வுறுப மன்னோ;
நல்லைமன் றம்ம பாலே! மெல்லியற்
துணைமலர்ப் பிணையலன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே"

(குறு. 229)

சூத்திரம்:—40.

"ஒன்றாத் தமரினும், பருவத்துஞ், சுரத்தும்,
ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்,
இடைச்சுர மருங்கின் அவள்தம ரெய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞ ரெய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட
அப்பாற் பட்ட வொருதிறத் தானும்;
நாளது சின்மையும், இளமைய தருமையும்,
தாளாண் பக்கமும், தகுதிய தமைதியும்,
இன்மைய திளிவும், உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்;
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்;
வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு
ஊதியங் கருதிய ஒருதிறத் தானும்;
புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்;
தூதிடை யிட்ட வகையி னானும்;
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்;
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்,
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்,

பாசறைப் புலம்பலும், முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்;
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்;
பரத்தையின் அகற்சியிற் பரிந்தோட் குறுகி
இரத்தலும் தெளித்தலும் எனஇரு வகையோடு
உரைத்திற நாட்டங் கிழவோன் மேன".

கருத்து:—இது, உடன்போக்கும், பிரிவின் வகையும், பிற காரணங்களும் பற்றித் தலைவனுக்குக் கூற்று நிகழும் இடன் கூறுகின்றது.

பொருள்:-ஒன்றாத்தமரினும், பருவத்தும், சுரத்தும் ஒன்றிய மொழியொடு வலிப்பினும்=வரைவுடன்படாத சுற்றத்தோடும், பருவத்தின் கண்ணும், சுரத்திலும் ஏற்புடைச்சொல்லொடு தலைவியை உடன்கொண்டு செல்லத் துணியுமிடத்தும்; விடுப்பினும்=கொண்டு தலைக்கழியாமல் தலைவியைத் தான் விடுத்துப் பிரியுமிடத்தும்; இடைச்சுரமருங்கில் அவள் தமர் எய்தி= உடன்போக்கில் அரும் வழியினிடையே தலைவியின் தன்னையர் முதலிய சுற்றத்தாருற்று; கடைக்கொண்டு பெயர்தலில் = தலைவியைக்கொண்டு திரும்புமிடத்து; கலங்கஞரெய்திக் கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட =தலைவி மயங்கித் துன்பமெய்திக் கற்பால் தலைவன்பால் சேறலானுளவாம் பூசலுட்பட; அப்பாற்பட்ட ஒரு திறத்தானும் = அத்தகைய (பல) பகுதிப்பட்ட ஒரு முறையானும்; நாளது சின்மையும்=வாழ்நாளின் சின்மையால் பொருள் வலித்தலும்; இளமைய தருமையும் =

இன்ப நுகர்ச்சிக்குரிய இளமையின் அருமை (பொருட் பிணியை) நலித்தலும்; தாளாண் பக்கமும்=முயற்சியின் பெருமை கருதிப் பொருள் வலித்தலும்; தகுதிய தமைதியும்=தலைவியைப் பேணும் ஒப்புரவாண்மையறம் பொருட் பிணியை மெலித்தலும்; இன்மையதிளிவும்= இலம்பாட்டின் இழிவு கருதி பொருள் வலித்தலும்; உடைமைய துயர்ச்சியும் = தனக்குக் கிடைத்திருக்கும் தலைவியின் காதலாகிய புத்துடைமைச்சிறப்பு பொருட் பிணியை மெலித்தலும்; அன்பினதகலமும் = தலைவி பால் அன்பின் பெருக்கால் அவள் பொருட்டுப் பொருள் வலித்தலும்; அகற்சிய தருமையும்=அவளைப் பிரிந் திருக்க ஒல்லாமை பொருட்பிணியை மெலித்தலும்; ஒன்றாப் பொருள் வயின் ஊக்கிய பாலினும்=ஆக இவ் வாறு (ஒன்றுக்கொன்று மாறுபட்டுப்) பொருந்தாத பொருள்பற்றி வலிக்கும் பிரிவின் பகுதிகளிலும்; வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு ஊதியங்கருதிய ஒருதிறத்தானும்=நூல் முதலிய வாயாற் கற்கும் கல்வி யும், படை இயம் ஓவியம் முதலிய கையாற் பயிலும் கலை யும் என வகுக்கப்பட்ட இருதிறக்கல்விப் பகுதிகளின் பயனை எண்ணிப்பிரியும் ஒரு பகுதிக் கண்ணும்; புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்=(இவ்விரண்டிலும்) பிரிவால்வரும் புகழையும் பிரியாமையால்வரும் குற்றத் தையும் விளக்கி வலியுறுத்துமிடத்தும்; தூதிடையிட்ட வகையினானும் = தலைவியைப் பிரிந்து வேந்தரிடைச் செல்லும்வாயில் வகைகளிலும்; ஆகித்தோன்றும் பாங் கோர் பாங்கினும் மூன்றன் பகுதியும் = மேலே கூறி

யாங்கு பொருள் ஓதல் தூது என்ற பிரிவின் பகுதி மூன்றிலும் கூற்றுக்கு அமைந்துவரும் பகுதி தொறும் ஏற்றவிடத்தும்; மண்டிலத்தருமையும்=பகைப் புலத்தின் அருமையும்; தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்=புகழாற் சிறந்த பகைவரின் பெருமையும்; பாசறைப் புலம்பலும் = போர்க்களக்கட்டூரிற் செரு முடிந்தபின் தலைவியை உள்ளும் தலைவன் தனிமையும்; முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பிய வினைத் திறவகையினும் = வந்தவினை முடிந்தபொழுது தேர்ப்பாகனொடு தலைவன் தான் செய்யவிரும்புவன கூறும் வகையினும்; காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்=பிறர் நாடு காக்குமிடத்தானும் ஓர் பிரிவின் கண்ணும்; பரத்தையினகற்சியிற் பரிந்தோட்குறுகி = பரத்தைப் பிரிவால் பரியும் தலைவியை அணுகி; இரத்தலும் = தன் தவறு பொறுக்குமாறு தலைவன் வேண்டுதலும்; தெளித்தலும்=தன் தவறின்மை கூறித் தலைவியைத் தேற்றலும்; என இருவகையொடு=என இவ்விரண்டு வகையொடுகூட; உரைத்திற நாட்டம்=மேற்கூறிய இடங்களிலெல்லாம் கூற்றுவகை நாடுதல்; கிழவோன் மேன=தலைவன்கண் நிகழும்.

குறிப்பு:—இச்சூத்திரம், ஒன்றாத் தமரினும் என்பது முதல் ஒருதிறத்தானும் என்றதுவரை உடன்போக்கில் தலைவன் கூற்று நிகழுமிடங்களைச் சுட்டும் பகுதியும், பின் எஞ்சியவெல்லாம் பிரிவின்கண் தலைவன் கூற்று நிகழுமிடங்களைச் சுட்டும் பகுதியுமாக அமைந்துள்ளது. பிற்றைய பிரிவுப்பகுதியில் ஆறுவகைப்பிரிவும்

கூறப்படுகிறது. நாளது சின்மையும் என்பதுமுதல், பொருள்வயின் ஊக்கிய பாலினும் என்பதீறுகப் பொருட் பிரிவும் (1), வாயினும் கையினும் என்பதுமுதல் எடுத்து வற்புறுத்தலும் என்றதுவரை ஓதற் பிரிவும் (2), தூதி டையிட்ட வகையினுனும் என்பதால் தூதிற் பிரிவும் (3), மண்டிலத்தருமை முதல் வினைத்திற வகையினும் என்றதுவரை பகைவயிற் பிரிவுவகையும் (4), காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும் என்பதால் நாடு காவற் பிரிவும் (5), பரத்தையினகற்சி என்பதால் பரத்தையிற் பிரிவும் (6), ஆகப் பிரிவு வகை ஆறும் முறையே வகைப் படுத்திக் கூறப்பட்டன. பாசறைப் புலம்பல், பாகனெடு கூறல் முதலிய பகைவயிற் பிரிவின்பாற் பட்டடங்கும். ஆகித்தோன்றும் பாங்கோர் பாங்கினும், மூன்றன் பகுதியும் என்பது,—அதற்கு முன் வகைப்படுத்திக் கூறப்பட்ட "பொருள், ஓதல், தூது என்ற மூன்றன் பகுதிகளினும் உரிய இடத்துத் தலைவன் கூறும்" —எனத் தொகுத்து உணர்த்தும் தொடராயமையும்; 'மூன்றன் பகுதி' என்பதற்கு, "இப்பகுதியில் தொல் காப்பியரால் சுட்டி விளக்கப்பெருத பிற நூல்களிற் கண்ட நால்வகைவலியுள் மூன்றென" இளம்பூரணரும், "அறம், பொருள், இன்பமென"—நச்சினர்க்கினியரும் தம்முள் மாறுபட்டு இருவேறு பொருள் கூறுகின்றனர். இவை அறுவகைப் பிரிவிலடங்குதலானும், கூறும் தொகையால் குறிக்கும் வகைகளை நூலில் விளக்காது சூத்திரிப்பது நூன்மரபாகாமையானும், ஈண்டுப் பிரிவு வகை மூன்றும் விளக்கப்பட்டு அவற்றை அடுத்து

'மூன்றன்பகுதி' எனத்தொகுத்து கூறப்படுதலானும், இத்தொடர் இச்சூத்திரத்தில் தெளிக்கப்பட்ட பிரிவு வகைமூன்றனையே குறிப்பது விளக்கமாகும். இவ்வாறே புறத்திணையியல் (24) "மாற்றரும் கூற்றம்" என்னும் சூத்திரத்திடையில் 'ஈரைந்தாகும்' எனத்தொகுத்துப் பிரித்ததும் காண்க.

பொருட் பிரிவுப் பகுதிக்கண், ஒருபுறம் பொருட் பிணியால் பிரிய விரும்புதலும், மறுபுறம் காதலால் பிரிவொல்லாது செலவழுங்குதலுமாகத் தம்முள் முரண் படும் இருவேறுணர்ச்சிகள் தலைவன்பால் நிகழுமியல்பை விளக்கிய பகுதி நயந்து பாராட்டற்பாலது. நாளது சின்மையால் பொருளீட்டும் விருப்பம் காதல் பெருக்கால் தகைக்கப்படுவதும், அன்புபற்றித் தலைவி பொருட்டுப் பொருளீட்டும் விருப்பம் அவ்வன்பிற்குரிய தலைவியின் பிரிவருமையால் தகைக்கப்படுவதும், இயல்பாதலின் ஒன்றூப் பொருள்வயின் ஊக்கியபாலெனப் பொருட் பிரிவில் தலைவன் உள்ளத்தில் நிகழும் விருப்பு தடையுணர்ச்சி முரண் வலியுறுத்தப்பட்டது.

'உரைத்திற நாட்டம் கிழவோன்மேன' என்பதை, அப்பாற்பட்ட ஒருதிறத்தானும், ஒன்றாப் பொருள் வயின் ஊக்கியபாலினும், ஊதியங்கருதிய ஒருதிறத்தானும், தூதிடையிட்டவகையினானும், மூன்றன்பகுதியும், வினைத்திறவகையினும், ஆங்கோர்பக்கமும், இரத்தலும், தெளித்தலும் என வரும் ஒவ்வொன்றோடும் தனித்தனி கூட்டுக.

பொருள், ஓதல், தூது, பகை, காவல், பரத்தை, என அறுவகைப் பிரிவும் வகைபெறக்கூறும் இச்சூத்திரத்தில் முதல் மூன்றையும் 'மூன்றன்பகுதியு' மெனத் தொகுத்துப் பிரித்தார்; மற்ற மூன்றில் பகை காவலாகிய இரண்டும் தன்னளவிலும் பரத்தை தலைவி அளவிலும் பகைமை சுட்டுதலால் அம்மூன்றையும் வேறாக்கி, எண்ணுர்மைகளை எல்லாம் இறுதியில் ஒடுக்கொடுத்துக் கூட்டிப் பிரிவுவகை ஆறும் விளக்கப்பட்டுள.

ஒன்றாத்தமரினும், பருவத்தும், சுரத்தும் என்பவற்றுள் ஒவ்வொன்றின் கண்ணும் தலைவன் வலித்தலும், விடுத்தலும் இயல்பாகும். அவை வருமாறு:— ஒன்றாத் தமர் உடன்படுமாறு தலைமகன் சான்றோரை விடுத்தது கேட்ட தோழி கூற்றாகவரும்,

"எக்கர் ஞாழல் சிறியிலைப் பெருஞ்சினை
ஓதம் வாங்குந் துறைவன்
மாயோள் பசலை நீக்கின னினியே."

என்னும் ஐங்குறுநூற்று (145-ம்) செய்யுளால், தலைவிதமர் மகட்கொடைக்கு ஒன்றாவழித் தலைவன் உடன்கொண்டுகழியத் துணிதலுண்மை விளங்கும்.

"பெருநன் றாற்றிற் பேணரு முளரே,
ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர வளிமதி, இலைகவரப்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரன்
மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட! நின்னல திலளே." (குறுந். 115)

இக்குறுந் தொகைச் செய்யுளில், 'நன்மலை நாட நின்னலதிலளே' எனத் தோழி தலைவற்குக் கூறுதலால், தலைவனுக்குத் தலைவியைத்தரத் தமர் ஒன்றுமையும் அதனால் தலைவன் கொண்டு தலைக்கழிய வலித்தலும் கூறப்பட்டது.

இனி, மணமறுத்த ஒன்றாத்தமரை உடன்படுத்தற் பொருட்டுப் பொருளீட்டக் கருதித் தலைவியை விடுத்துப் பிரிவதற்குச் செய்யுள் :—

"இலையிலஞ்சினை" எனும் (254-ம்) குறுப்பாட்டில்,

> "வாரா, தோழி........................
> செய்பொருள் தரல்நசைஇச் சென்றோர்
> எய்தின ராலென வரூஉந் தூதே."

எனப் பொருள்தேடித்தரச் செல்லும் தலைவன் பிரிவு கூறப்படுதலறிக.

"பொத்தில் காழி" எனும் (255-ம்) குறுப்பாட்டிலும்,

> "தங்கட னிறீஇய ரெண்ணியிடந்தொறும்
> காமர் பொருட்பிணிப் போகிய
> நாம்வெங் காதலர் சென்றவாறே."

எனத் தலைவன் பொருட்பிரிவு வருதலறிக.

அப்பிரிவில் தலைவன் கூற்றுக்குச் செய்யுள் வந்துழிக் கண்டு கொள்க.

உடன் போக்கில் வலித்துக்கொண்டு செல்லும் தலைவன் தலைவிக்குச் சுரத்திடைக் கூறுதற்குச் செய்யுள் :—

"அழிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
நலமென் பணைத்தோள் எய்தின மாகலின்,
பொரிப்பூம் புன்கின் எழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை அணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறும் நெடிய வைகி,
மணல்காண் டோறும் வண்டல் தைஇ,
வருந்தா தேகுமதி, வாலெயிற் றோயே;
மாநனை கொழுதி மகிழ்குயி லாலும்
நறுந்தண் பொழில கானம்,
குறும்ப லூரயாம் செல்லு மாறே."

(நற்றிணை. 9)

"வருமழை கரந்த வானிற விசும்பின்
நுண்டுளி மாறிய உலவை யாங்கட்
டால நீழல் அசைவு நீக்கி,
அஞ்சுவழி அஞ்சா தசைவழி யசைஇ,
வருந்தா தேகுமதி வாலிழைக் குறுமகள்!
இம்மென் பேரலர் நும்மூர்ப் புன்னை
வீமல ருதிர்ந்த தேனாறு புலவிற்
கான லார்மணன் மரீஇக்
கல்லுறச் சிவந்தநின் மெல்லடி யுயற்கே."

(நற்றிணை. 76)

எனவரும் நற்றிணைச் செய்யுளுமதுவே.

"புலிபொரச் சிவந்த புலாவஞ் செங்கோட்
டொலிபன் முத்த மார்ப்ப வலிசிறந்து
வன்சுவற் பராரை முருக்கிக் கன்றொடு
மடப்பிடி தழீஇய தடக்கை வேழந்
தேன்செய் பெருங்கிளை யிரிய வேங்கைப்
பொன்புரை கவழம் புறந்தரு பூட்டு
மாமலை விடரகங் கவைஇக் காண்வரக்
கண்டிசின் வாழியோ குறுமகள்! நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கட்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே."

என்னும் நற்றிணைப் (202) பாலைச் செய்யுளுமது.

இனி, சுரத்தினதருமை கருதித் தலைவியை விடுத்தற்குச் செய்யுள் :—

"உமணர், சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
யூர்பாழ்த் தன்ன, வோமையம் பெருங்காடு
இன்னா வென்றி ராயின்,
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே."
(குறு. 124)

இதில் "என்றிராயின்" என்பதால், விட்டுப்பிரியும் தலைவன் கூறியதைத் தோழி கொண்டு கூறினாளென்றறிக. இனி, விட்டுச் சென்ற தலைவன் இடைச்சுரத்துத் தலைவியை நினைந்து கூறற்குச் செய்யுள் :—

"எரிகவர்ந் துண்ட வென்றூழ் நீளிடைச்
சிறிதுகண் படுப்பினுங் காண்குவென் மன்ற
நள்ளென் கங்குல் நளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கிற்
றேம்பாய் கூந்தன் மாஅ யோளே."
(ஐங். 324)

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மொ டுணீஇய
வருகதில் லம்ம தானே
அளியளோ அளியளென் னெஞ்சமர்ந்
தோளே." (குறு. 56)

இடைச்சுர மருங்கில் தமர்வர, தலைவன் அருளால் மறைதற்குச் செய்யுள்:—

"அன்றை யனைய வாகி யின்றுமெங்
கண்ணுள் போலச் சுழலு மாதோ
புல்லிதழ்க் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ
வைகுறு மீனின் இனையத் தோன்றிப்
புறவணி கொண்ட பூநாறு கடத்திடைக்
கிடினென விடிக்குங் கோற்றொடி மறவர்
வடிநவில் அம்பின் வினையர் அஞ்சா
தமரிடை யுறுதர நீக்கிநீர்
எமரிடை யுறுதர வொளித்த காடே."
(நற். 48)

இதில், முன் தலைவன் செய்ததைத் தோழி கொண்டு கூறியதாகக் காண்கின்றோம்.

"வினையமை பாவையி னியலி நுந்தை
மனைவரை யிறந்து வந்தனை யாயிற்
தலைநாட் கெதிரிய தண்பெய லெழிலி
அணிமிகு கானத் தகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டு
நீவிளை யாடுக சிறிதே; யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன், பெயர்க்குவென்;
நுமர்வரின் மறைகுவென், மாஅ யோளே."

எனும் நற்றிணை (362-ம்) செய்யுளுமது. இதில் தேடிப் பின்வந்த தலைவிதமர்க்கு ஊறு செய்யாது அருளான் ஒளிக்கும் தலைவன் தானே கூறியதும் அறிக. கற்பொடு புணர்ந்த கௌவைக்குத் தலைவன் கூற்றாகச் செய்யுள் வரின் கண்டுகொள்க.

இனி, இதில் நாளது சின்மை, தாளாண்பக்கம், இன்மையினிளிவு, அன்பினதகலம், எனும் நான்கும் பொருள்தேடத் தூண்டுதலும், அப்பொருட்பிணியை முறையே இளமையதருமை, தகுதியதமைதி, உடைய (காதல்) உயர்ச்சி, அகற்சியதருமை, எனும் நான்கும் இன்பவிழைவால் தகைப்பதும் கூறப்படுகிறது.

நாளது சின்மை பொருள்தேட வலித்தலும், அப்பொருட்பிணி தகைக்கும் இன்பநுக ரிளமையும், தம்முள் ஒன்றுமைக்குச் செய்யுள் :—

7083



"புணரிற் புணராது பொருளே; பொருள்வயிற்
பிரியிற் புணராது புணர்வே; ஆயிடைச்
சேர்பினும் செல்லா யாயினும் நல்லதற்
குரியை வாழியென் னெஞ்சே; பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ; யானே
விழுநீர் வியலகந் தூணி யாக
எழுமா ணளக்கும் விழுநிதி பெறினும்,
கனங்குழைக் கமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தனென்;
எனைய வாகுக வாழிய பொருளே."

(நற்றிணை. 16)

"வங்காக் கடந்த செங்காற் பேடை
எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழலிசைக் குரால குறும்பல அகவும்
குன்றுறு சிறுநெறி அரியவென் னாது
மறப்பருங் காதலி யொழிய
இறப்பல் என்பதீண் டின்மைக்கு முடிவே."

(குறுந். 151)

எனும் குறுந்தொகைச் செய்யுளுமது.

பொருள் வலிக்கும் நெஞ்சுக்கு அதனொடு பொருந்தா இளமையதருமை தலைவன் கூறற்குச் செய்யுள்:—

'பைங்காய் நல்லிட மொரீஇ' என்னும் நற்றிணைச் செய்யுளில்,

"........பாழ்நாட் டத்தம்
இறந்துசெய் பொருளும் இன்பம் தருமெனில்
இளமையிற் சிறந்த வளமையு மில்லை;
இளமை கழிந்த பின்றை வளமை
காமந் தருதலு மின்றே; அதனால்
நில்லாப் பொருட்பிணிச் சேறி,
வல்லே நெஞ்சம் வாய்க்கநின் வினையே."

(நற். 126)

எனத் தலைவன் கூறுதல் காண்க இன்னும்,

அருவியார்க்கும், எனும் நற்றிணைச்(205) செய்யுளில்

"துன்னருங் கானம் என்னுய் நீயே;
குவளை யுண்கண் இவளின் டொழிய
ஆள்வினைக் ககறி யாயின், இன்றொடு
போயின்று கொல்லோ தானே.........
ஆய்நிறம் புரையுமிவள் மாமைக் கவினே."

என வருவதுமது.

"முதிர்ந்தோ ரிளமை ஒழிந்தும் எய்தார்;
வாழ்நாள் வகையளவு அறிஞரு மில்லை;
... ... ... ... ...
கருங்கண் வெம்முலை ஞெமுங்கப் புல்லிக்
கழிவதாக கங்குல்."

(நற். 314)

என்று தலைவன்கூறியதைத் தலைவி எடுத்துக்கூறும் செய்யுளில், இளமையதருமையும் நாளது சின்மையும் தம்முள் ஒன்றாது முரணுதலைக்காண்க.

தாளாண்மையால் பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைவிதகுதி நோக்கித் தலைவன் பிரிவருமை கூறுதற்குச் செய்யுள் :—

"வினையே ஆடவர்க் குயிரே, வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவ ருயிரென
நமக்குரைத் தோரும் தாமே;
அழாஅல், தோழி! அழுங்குவர் செலவே."

இக் குறுந்தொகை (135-ம்) செய்யுளில் தோழி கொண்டு கூறிய தலைவன்கூற்றால், ஆடவர்க்குத் தாளாண்பக்கம் இன்றியமை யாதென்பதும், மனையற மகளிரின் தகுதி பேணுதல் அவ்வாடவர் கடனென்பதும், இவ்வாறு இருவேறுணர்ச்சி தம்முள் ஒன்றாப் பொருட்பிணியின் கண் தலைவற்குக் கூற்று நிகழு மென்பதும் காண்க.

இன்னும்,

"ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்பவும்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவுந்
தான்வரல் துணிந்த இவளினும், இவளுடன்
வேய்பயில் அழுவம் உவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தக வுடைத்தே."
(பொருள்—சூ. 41. நச்சினர்—உரைமேற்கோள்.)

என்னும் பொருளதிகாரச் சூத்திரம் 41-ன் உரைமேற்கோள் செய்யுளாலும், ஒன்றுப் பொருட்பிணியில் தலைவியின் பிரிவருமை தலைவன் கூறுவதறிக.

இனி, இன்மையதிளிவும் உடைமைய துயர்ச்சியும் கருதித் தலைவன் கூறுதற்குச் செய்யுள் :—

> " ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச்
> செய்வினை கைம்மிக எண்ணுதி ; அவ்வினைக்
> கம்மா அரிவையும் வருமோ !
> எம்மை யுய்த்தியோ ! உரைத்திசி னெஞ்சே."
> (குறுந். 613)

இச் செய்யுளில், 'இல்லோர்க்கில்லெனச் செய்வினை கைம்மிக எண்ணுதி' என்பதால் இன்மையதிளிவும், 'அம்மா அரிவையும் வருமோ' என்றதால் உடைமையாம் காதலின் உயர்வும், தம்முள் ஒன்றுமை தன் நெஞ்சிற்குத் தலைவன் கூறிச் செலவு தவிர்வது காண்க.

இனி, இவ்வாறு செலவழுங்காமல் தலைவன் பிரிதலும் உண்டு ; அதற்குச் செய்யுள் :—

> " இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
> அசையுட னிருந்தோர்க் கரும்புணர் வின்மென—
> வினைவயிற் பிரிந்த வேறுபடு கொள்கை,
> அரும்பவி ழலரிச் சுரும்புண் பல்போ
> தணிய வருதுநின் மணியிருங் கதுப்பென—
> எஞ்சா வஞ்சினம் நெஞ்சுணக் கூறி,

மைசூழ் வெற்பின் மலைபல இறந்து
செய்பொருட் ககன்ற செயிர்தீர் காதலர்
கேளார் கொல்லோ, தோழி!
... ... ...
......கார்ப் பெயற் குரலே.''

எனவரும் நற்றிணைச் (214) செய்யுளில் இவ்வாறு ஒன்றுப் பொருள்வயின் மாறுபட்டலைக்கும் உணர்ச்சி முரண்கூறித் தலைவன் ஒன்றுப் பொருள்வயிற் பிரிந்தமையும் காண்க. ''அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்'' எனும்பாலைக்கலியுமதுவே.

(பாலைக்கலி. 11)

அன்புமிகையால் மனை மாட்சிக்குப் பொருள் வலித்தலும் தலைவியிற் பிரிவருமையால் செலத்துணியாமையு மாகிய ஒன்றுப்பொருட் பிணிக்குச் செய்யுள்:—

''மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடை பலவுடன் பொதிந்து
பெரும் பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே; நன்மா மேனி
புனற்புணை யன்ன சாயிறைப் பணைத்தோள்
மணத்தலும் தணத்தலு மிலமே;
பிரியின் வாழ்தல் அதனினு மிலமே.''

(குறு. 168)

''மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் றோன்றும

கான நீளிடைத் தானும் நம்மொ
டொன்றுமணம் செய்தன ளிவளெனில்
நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே.''

என்ற குறுந்தொகை (347-ம்) பாட்டிலும், அன்பினதக லமும் அகற்சியதருமையும் ஒன்றுப்பொருள்வயின் ஊக்குதல் உணர்க.

இனி, ஓதற் பிரிவில் கூற்று நிகழ்தற்குச் செய்யுள்:—

"பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தான் மறுத்தரல் ஒல்வதோ?
தீங்கதிர் மதியேய்க்கும் திருமுகம், அம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்.''

என்னும் பாலைக்கலித் (14) தாழிசையில் 'வாயின்வகுத்த கல்விப்பகுதியின் ஊதியங்கருதிய' தலைவன் பிரிவருமை காண்க.

"பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்துநீ
மன்னய புணர்ச்சியான் மறுத்தரல் ஒல்வதோ?
புரியவிழ் நறுநீலம் புரையுண்கண் கலுழ்பானாத்
திரியுமிழ் நெய்யேபோற் றெண்பனி யுறைக்குங்கால்.''

என்பதால், 'கையின் வகுத்த கல்விப்பகுதியின் ஊதியங்' கருதித் தலைவன் பிரிந்தமை அறிக. இப்பிரிவுகளில் தலைவன் கூற்று வந்துழிக் கண்டுகொள்க.

புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தும் தலைவன் கூற்றுக்குச் செய்யுள் :—

"நாளும் நாளும் ஆள்வினை யழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழெனஒண்பொருட் ககல்வர்நம் காதலர்;
கண்பனி துடையினித் தோழி! நீயே."
(சிற்றெட்டகம்)

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசை யுடனிருந்தோர்க் கரும்புணர் வின்மெனவினைவயிற் பிரிந்த வேறுபடு கொள்கை
... ... ... ... ...
மைசூழ் வெற்பின் மலைபல இறந்து
செய்பொருட் ககன்றநம் செயிர்தீர் காதலர்."
(நற். 124)

எனும் நற்றிணைச் செய்யுளடிகளுமது. இச்செய்யுள் தலைவி கூற்றாயினும், இதில், 'இன்மென' என்பதனால் தலைவன் கூறியதைத் தலைவி கொண்டு கூறியது என விளங்குதலால், புகழும் மானமும் தலைவன் எடுத்து வற்புறுத்தியதறிக.

"மிகைதணித் தற்கரி தாமிரு வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற் றூர்நமர்..."

என்னும் மணிவாசகர் கோவைச் செய்யுளில் தோழி கூற்றால் தலைவன் தூதிடையிட்டுப் பிரிதல் கூறப்படுகின்றது. தூதுபற்றிய பிரிவில் தலைவன் கூற்றுக்குச் செய்யுள் வந்துழிக் காண்க. 'கொடுமிடறும்' எனும் (36-ம்) கலியில், தூதொடு மறந்தார் கொல்லோ என்ப

தனால், தூதின் பொருட்டுப் பிரிதற்கரிய தலைவியையும் தலைவன் பிரிந்ததறியப்படும்.

முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி முதலியவற்றில் மண்டிலத்தருமையும் தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும் பலவிடத்தும் வருதல் காண்க. தன் வேந்தனின் பகைவராய தோன்றல் சான்ற மாற்றாரைப் பொருது வெல்லப் பிரியும் தலைவன் கூற்று வருமாறு:—

"பல்லிருங் கூந்தல்! பசப்பு நீவிடின்
செல்வேந் தில்ல யாமே, செற்றோர்
வெல்கொடி அரண முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே."

(ஐங். 429)

இனி, பாசறைப் புலம்பல் வருமாறு:—

"புகழ்சால் சிறப்பிற் காதலி புலம்பத்
துறந்துவந் தனையே, அருந்தொழிற் கட்டூர்
நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை
உள்ளுதொறுங் கலிழு நெஞ்சம்!
வல்லே எம்மையும் வரவிழைத் தனையே."

(ஐங். 445)

வினை முற்றிய தலைமகன் பாகனொடு விரும்பிக் கூறுதற்குச் செய்யுள்:—

"விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன்; தீம்பெயற்
காரு மார்கலி தலையின்று; தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வா யாழி உள்ளுறு புருளக்
கடவுக, காண்குவம், பாக!......" (அகம். 54)

காவலுக்குப் பிரிந்த தலைவன் தான் வருவதாய்த் தலைவிக்குத் தூதனுப்பியது:— "ஒருகுறை ஒருவன் போல" என்னும் பாலைக்கலியில்

"ஒல்குபு நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புகழ் உலகேத்த விருந்துநாட் டுறைபவர்
... ... ... ... ...
... ... ... ...நம் காதலர்
... ... ... ... ...
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே."
(கலி. 25)

இனி, பரத்தையினகற்சியில் பரிந்த தலைமகளிடத் துத்தலைவன் இரத்தலும், தெளித்தலும் என இருவகை யினும் கூற்று நிகழ்தற்குச் செய்யுள்:—

'ஒரூஉ, கொடியியல் நல்லார்க்கு' என்னும் மருதக் கலியில்,

"ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர்
வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு" எனவும்,

“ அது தக்கது, வேற்றுமை என் கண்ணோ ஓராதி,
தீதின்மை
தேற்றக்கண் டியாய் தெளிக்கு.” (மருதக்கலி. 88.)

எனவும் தலைவன் தலைவியிடம் இரந்தும் தெளித்தும் கூறுதலும்,

“ இனித் தேற்றேம்யாம்,
தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீகூறும் பொய்ச்சூழ் அணங்காயின்
வேற்றினி யார்மேல் விளியுமோ கூறு.”
(கலி. 88.)

எனக் கூறித் தலைவி ஊடல் தணிதலும் வந்தமை காண்க.

“ நில்லாங்கு நில்லாங்கு” என்னும் மருதக்கலியுள்,
“ ஆயும் ஆயிழாய் அன்னவை யானுங் கறியாமை
போற்றிய நின்னைத் தொடுகு.” (கலி. 45.)

எனத் தன் பரத்தமைக்குப் புலந்த தலைவியைத் தெளிக்கு முகத்தானும்,

“ நல்லாய்! பொய்யெல்லாம் ஏற்றித் தவறுதலைப் பெய்து
கையொடு கண்டாய், பிழைத்தேனருளின்.”
(மருதக்கலி. 45.)

என இரக்கு முகத்தானும், தலைவன் கூற்று நிகழ்த்தியது காண்க.

சூத்திரம் :—41.

எஞ்சி யோர்க்கும் எஞ்சுத லிலவே.

கருத்து.—இது, முன் சூத்திரங்களிற் கூறப் பெறாப் பிறரும் கூற்றுக் குரியராதல் உண்டு என்று எய்தாத தெய்துவிக்கிறது.

பொருள்:—எஞ்சியோர்க்கும் = இதுவரை குறித்துக் கூறப்படாத செவிலி, பாங்கர், ஆயத்தார், பரத்தையர், வாயிலாவார், பாகன், பாணன் போன்ற பிறர்க்கும்; எஞ்சுதலில = அகத்துறைகளில் கூற்று ஒழிதல் இல்லை.

குறிப்பு:—ஈற்றேகாரம் அசை. இவ்வியலில் தலைமகள் கூற்று தனித்துக் கூறப்படாதது சிந்திக்கத்தக்கது. உரையாசிரியர் இளம்பூரணர் 'தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம், காலப்பழமையால், ஏடு பெயர்த்தெழுதுவார் வீழ எழுதினர்போலும்' எனக்கூறி, தலைமகள் கூற்றுவரும் பல இடங்களைச் சுட்டி விளக்கியுள்ளார். அகத்துறைப் பாட்டுக்களில் தலைவி கூறுமிடங்கள் பலபடியாகப் பாராட்டப்படுதல் பண்டைப் பாட்டுக்களில் பரக்கக் காணலாம். களவியல் 20-ம் சூத்திரத்தில் தலைவி கூற்று நிகழுமிடங்களைத் தொல்காப்பியரே கூறியுள்ளார். அவற்றுட் சில துறைகளுக்குச் செய்யுள் வருமாறு:—

1. "காணுங்காற் காணேன் தவறாய, காணாக்காற்
காணேன் தவறல் லவை." (குறள். 1286.)

2. "உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்." (குறள். 1177.)

3. "புலப்ப லெனச்சென்றேன், புல்லினேன் நெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு." (குறள். 1259.)

4. "மன்ற மராத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப; யாவதும்
கொடியோ ரல்லரெங் குன்றுகெழு நாடர்;
பசைஇப் பசந்தன்று நுதலே,
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே."
(குறுந். 87.)

இனி, செவிலி கூற்றுக்குச் செய்யுள் :—

"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇ
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே."
(குறுந். 167.)

"கானங் கோழி கவர்குரற் சேவல்
ஒண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநா றுபுறவிற்
சீறூ ரோளே மடந்தை; வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்

சேர்ந்துவர லறியாது செம்ம றேறே." (குறு.242)

பாங்கன் கூற்றிற்குச் செய்யுள் :—

"காமம் காம மென்ப, காமம்
அணங்கும் பிணியு மன்றே;
முதைச் சுவற் கலித்த முற்றா விளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம், பெருந்தோ ளோயே."
(குறுந். 204.)

இது, தலைமகற்குப் பாங்கன் உரைத்தது.

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்கலாற் றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே."
(குறுந். 58.)

இக் குறுந்தொகை (58-ம்) பாட்டு, கழறிக்கூறிய பாங்கற்குத் தலைவன் மாறிக் கூறுதலாம்.

ஆயத்தார் கூற்றுக்குச் செய்யுள் :—

"தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையா றோம்பென
ஓரை ஆயங் கூறக் கேட்டும்,"

எனக் குறுந்தொகை (48-ம்) செய்யுளில் ஆயத்தின் கூற்று நிகழ்ந்தமை காண்க.

பரத்தையர் கூற்றிற்குச் செய்யுள் :—

"கூந்த லாம்பன் முழுநெறி யடைச்சில்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறும், தானஃ
தஞ்சுவ துடையளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடுங் காக்கத்தன் கொழுநன் மார்பே."
(குறுந். 80.)

"கணைக்கோட்டு வாளை கமஞ்சூல் மாமழை
துணர்த்தேக் கொக்கின் றீம்பழங் கதூஉம்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பவ்வ மணங்குக, தோழி!
மனையோள் மடமையிற் புலக்கும்
அனையே மகிழ்நற்கியா மாயின மெனினே."

எனும் குறுந்தொகை (164-ம்) செய்யுள் காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினர் கேட்ப உரைத்தது.

"அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூரன்
பொற்கோ லவிர்தொடித் தற்கெழு தகுவி
எற்புறங் கூறுமென்ப; தெற்றென

வணங்கிறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன; அவ்வரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் கிவரும் மள்ளர் போரே."

எனுங் குறுந்தொகை (364-ம்) செய்யுளில் இற்பரத்தை பாங்காயினர் கேட்பக் கூறியது காண்க.

"நகைநன் குடையன் பாண! நும் பெருமகன்
மிளைவலி சிதையக் களிறுபல பரப்பி
யரண்பல கடந்த முரண்கொள் தானை
வழுதி வாழிய பலவெனத் தொழுதீண்டு
மன்னெயி லுடையோர் போல வஃதியா
மென்னலும் பரியலோ விலமெனத் தண்ணடைக்
கலிமா கடைஇ வந்தெஞ் சேரித்
தாருங் கண்ணியுங் காட்டி யொருமைய
நெஞ்சங் கொண்டமை விடுமோ வஞ்சக்
கண்ணுடைச் சிறுகோல் பற்றிக்
கதம்பெரி துடையள்யா யழுங்கலோ விலளே."

எனும் நற்றிணை (150-ம்) செய்யுளும் பரத்தை கூற்றாகும்.

பாகன் கூற்றிற்குச் செய்யுள்:—

"விதையர் கொன்ற முதையற் பூழி
யிடுமுறை நிரப்பிய வீரிலை வரகின்
கவைக்கதிர் கறித்த காமர் மடப்பிணை

யரலை யங்காட் டிரலையொடு வதியும்
புறவிற் றம்மநீ நயந்தோ ளூரே.
எல்லிவிட் டன்று வேந்தெனச் சொல்லுபு
பரியல்; வாழ்கநின் கண்ணி; காண்வர
விரியுளைப் பொலிந்த வீங்குசெலற் கலிமா
வண்பரி தயங்க வெழிஇத் தண்பெயற்
கான்யாற் றிடுமணற் கரைபிறக் கொழிய
வெவ்விருந் தயரு மனைவி
மெல்லிறைப் பணைத்தோட் டுயிலமர் போயே."

பாணன் கூற்றிற்கு பாட்டு வருமாறு:—

"நினக்கியாம் பாணரு மல்லே மெமக்கு
நீயும் குருசிலை யல்லை மாதோ;
நின்வெங் காதலி தன்மனைப் புலப்பி
ஈரித ழுண்கண் உகுத்த
பூசல் கேட்டு மருளா தோயே." (ஐங். 480.)

கீழ்வரும் அயலோர் கூற்று 'ஊரும் அயலும்' என்னும் செய்யுளியல் (503-ம்) சூத்திரத்திற்கு மாறான பிற்கால வழக்காகும்.

"துறந்ததற் கொண்டு துயரடச் சாஅ
யறம் புலந்து பழிக்கு மளைகணாட்டி!
எவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன ளோநின் மகளே,
வெந்திறல் வெள்வேல் விடலை முந்துறவே."
(ஐங். 393.)

இது, உடன்போய்த் தலைமகள் மீண்டுவந்துழி அயலோர் அவள் தாய்க்குச் சொல்லியது.

சூத்திரம் :—42.

நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்.

கருத்து :—இது, ஐந்திணை இயல் விளக்கிய முன் சூத்திரத்தின் அடங்காமல் திணைக்குரிப்பொருளாய் அகத்துறைகளில் வந்துபயில்வனவற்றுள் பிறிதொரு செய்தி கூறுகிறது.

பொருள் :—நிகழ்ந்தது = தலைமக்கள் பால் முன் நிகழ்ந்த செய்திகள்; நினைத்தற்கு = பின் ஏற்றபெற்றி நினைவுறுதற்கு; ஏதுவுமாகும் = ஏற்புடை ஏதுக்களாதலு முண்டு.

குறிப்பு :—இந்நூலார், முன் 'புணர்தல் பிரிதல்' என்னும் (14-ம்) சூத்திரத்தால் திணைக்குரிப்பொருள் ஐந்தையும் சுட்டினர். அவற்றுள் அடங்காமல் திணைக் குரிப் பொருளாகச் சான்றோர் செய்யுளில் ஆட்சி பெறு வன வேறு சிலவும் உளவாதலின் அவற்றை "உரிப் பொருளல்லன" எனும் சூத்திரத்தால் சுட்டி, அவற்றுள் கொண்டு தலைக்கழிதல் முதலிய சிலவற்றை இயைபு நோக்கி ஐந்திணை இலக்கணச் சூத்திரத்தை அடுத்தே கூறி, அவ்வாறு உரிப்பொருளாகும் வேறு சிலவற்றை இச்சூத்திரத்தானும் அடுத்த சூத்திரத்தானும் விளங்க வைத்தார்.

முன் நிகழ்ந்தது காதலர் பின்னினைப்பிற்கு ஏதுவாதல் அகத்துறையில் இயல்பாம் என்பதை இச்சூத்திரத்தானும், அவ்வாறு நினைத்துக் கூற்று நிகழ்தலும் அகத்துறையின்பாற் பட்டதே என்பதை அடுத்த சூத்திரத்தானும் தொல்காப்பியர் விளக்குகிறார்.

இனி, இச் சூத்திரமும் அடுத்த சூத்திரமும் காதற் கூற்றுக்குப் பொருளாமாயினும், கொண்டு தலைக்கழிதல் காட்சி முதலியன போலப் பெருவரவின்மையான் அவற்றோடு கூறாது, ஈண்டுக் கூற்று வகைகூறும் சூத்திரங்களோடு இவற்றை இந்நூலார் கூறினாரென்க.

நிகழ்ந்தது நினைத்தற்குப் பாட்டு வருமாறு:—

"யாருமில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே."(குறு.25.)

இது, தலைவி நிகழ்ந்தது நினைத்தற்குச் செய்யுள்.

இனி, தலைவன் நிகழ்ந்தது நினைத்தற்குச் செய்யுள்:-

"இரண்டறி கள்விநங் காத லோளே;
முரண்கொள் துப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு னம்மோ ரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்

சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே."

(குறு. 312.)

" அயத்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன
நகைப்பொலிந் திலங்கு மெயிறுகெழு துவர்வாய்,
ஆகத் தரும்பிய முலையள், பணைத்தோள்
மாத்தாட் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு
பேயு மறியா மறையமை புணர்ச்சி
பூசற் றுடியிற் புணர்வுபிரிந் திசைப்பக்
கரந்த கரப்பொடு நாஞ்செலற் கருமையிற்
கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்த மண்ணுநர் போல
கடுங்கஞர் தீர முயங்கி நெருநல்
ஆக மடைதந் தோளே, வென்வேல்
களிறு கெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறு நீரடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவு ளெழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே."

எனும் அகம் (62-ம்) செய்யுளுமதுவே.

சூத்திரம்:—43.

நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே.

கருத்து:—இதுவும், முற்சூத்திரத்தைப்போலவே, ஐந்திணைச் சூத்திரங்களி னடங்காது, அறவே அவற்றின் வேறுமாகாது, திணைக்குரிப் பொருளாய் அகத்துறையில் வந்து பயிலும் பிறிதொன்று கூறுகிறது.

பொருள்:— நிகழ்ந்தது கூறி = காதலர் தம்முள் நிகழ்ந்த செய்தியை எடுத்துக் கூறி; நிலையலுந்திணையே = நிலைபெறுதலும் அகத்துறை ஒழுக்கமேயாகும்.

குறிப்பு:—பழைய உரைகாரர் இவ்விரு சூத்திரங் களையும் பாலைத்திணைக்கே உரியனபோலக் கொள்ளுதல் அமைவுடைத்தன்று; பாலையல்லாப் பிற திணைகளினும் நிகழ்ந்தது நினைத்தலும் நிகழ்ந்ததுகூறி நிலையலும் வருதலின், அவை எல்லாத்திணைக்கும் உரியவாய் அமையு மென்க. அதுபற்றியே, பாலைத்திணை இயல்புகளோடு இவற்றைக் கூறாது, அவைமுடிந்து பொதுவியல் கூறும் இவ்விடத்து இச்சூத்திரங்கள் வைக்கப்பட்டன. மேலும், இவை புணர்ச்சி முதலிய ஐந்தனுள் எதனினும் அடங்கா மல் உரிப்பொருளாயுமமைதலின், "நிலையலும் பாலை"— "நிலையலும் பிரிவு"— என்னாது, ஐந்திணைகள்போல "நிலையலும் திணையே" எனப் பொதுப்படக்கூறிய பெற்றியுமறிக.

தலைவி நிகழ்ந்தது கூறி நிலையலுக்குப் பாட்டு:—

"கேட்டிசின் வாழி, தோழி! யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்

தமளி தைவந் தனனே, குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே." (குறு. 30.)

"துறுக லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்
நெஞ்சுகள னாக 'நீயலென் யா'னென—
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தவாஅ வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே." (குறு. 36.)

என்பதுமது.

"கொடியவுங் கோட்டவும் நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலன்கோதைத்
தொடிசெறி யாப்பமை யரிமுன்கை யணைத்தோளா
யடியுறை யருளாமை யொத்ததோ நினக்கென—
நரந்தநா றிருங்கூந்தல் எஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரலமை யொருகாழ்
விரன்முறை சுற்றி மோக்கலு மோந்தனன்;
நறா அவிழ்ந்தன்ன என் மெல்விரற் போதுகொண்டு
செறாஅச் செங்கண் புதைய வைத்துப்
பறாஅக் குருகி னுயிர்த்தலு முயிர்த்தனன்;
றொய்யி லிளமுலை யினிய தைவந்து
தொய்யலந் தடக்கையின் வீழ்பிடி யளிக்கு
மையல் யானையின் மருட்டலு மருட்டினன்;
அதனால் அல்லல் களைந்தனன், தோழி!"

எனவரும் குறிஞ்சிக்கலி (18-ம்) செய்யுளடிகளும் முன் நிகழ்ந்ததைத் தலைவி கூறி நிலையலாகும்.

“மின்னொளி ரவிரற லிடைபோழும் பெயலேபோற்
பொன்னகை தகைவகிர் வகைநெறி வயங்கிட்டுப்
போழிடை யிட்ட கமழ்நறும் பூங்கோதை
யின்னகை யிலங்கெயிற்றுத் தேமொழித் துவர்செவ் [வாய்
நன்றுதா னினக்கொன்று கூறுவாங் கேளினி;
நில்லென நிறுத்தா னிறுத்தே வந்து
நுதலு முகனுந் தோளுங் கண்ணு
மியலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ—
யையேய்க் தன்று பிறையு மன்று,
மைதீர்ந் தன்று மதியு மன்று,
வேயமன் றன்று மலையு மன்று,
பூவமன் றன்று சுனையு மன்று,
மெல்லவியலு மயிலு மன்று,
சொல்லத் தளருங் கிளியு மன்று,

எனவாங்கு,

அனையன பலபா ராட்டிப் பையென
வலைவர் போலச் சோர்பத னொற்றிப்
புலையர் போலப் புன்க ணோக்கித்
தொழலுந் தொழுதான், றொடலுந் தொட்டான்
காழ்வரை நில்லாக் கடுங்களி றன்னோன் ;
தொழூஉம் தொடூஉ மவன் றன்மை
யேழைத் தன்மையோ வில்லை தோழி.”

(குறிஞ்சிக்கலி—19.)

என்பதும், தலைவி நிகழ்ந்தது கூறி நிலையற்றுறையே.

இனித் தலைவன் நிகழ்ந்தது கூறி நிலையனுக்குச் செய்யுள் :—

" அணிநிலை பொறாஅ தமரிய முகத்தள்,
விளிநிலை கொள்ளாள். தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்,
கண்ணிய துணரா வளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த வோமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கும் நிரைநிலை யதர
பரன்முரம் பாகிய பயமில் கான
மிறப்ப வெண்ணுதி ராயின்—அறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
யன்ன வாக வென்னுநள் போல—
முன்னங் காட்டி முகத்தி னுரையா
வோவச் செய்தியி னொன்றுநினைந் தொற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்

தூநீர் பயந்த துணையமை பிணையன்
மோயினள் உயிர்த்த காலை, மாமலர்
மணியுரு விழந்த வணியழி தோற்றங்
கண்டே கடிந்தனஞ் செலவே; யொண்டொடி—
உழைய மாகவும் இனைவோள்—
பிழையலண் மாதோ பிரிதுநா மெனினே.''

(அகநா. 5.)

சூத்திரம் :—44.

"மரபுநிலைதிரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும் என்ப."

கருத்து:— இது, மேற்சூத்திரங்களி லடங்காத அகத்துறைப் பகுதிகளுள், ஐந்திணை அல்லாத உரிப் பொருட்கெல்லாம் ஓர் புறனடை கூறுகிறது.

பொருள் :—மரபு நிலைதிரியா மாட்சிய வாகி=முறைமை இயல்கெடாமலும், மாண்பு தருவனவுமாகி; விரவும் பொருளும் விரவும் என்ப=திணைக்குரிப்பொருளாய் ஐந்திணை ஒழுக்கத்தோடு அமைய அகத்துறைகளில் கலந்து வரத்தகுவன பிறவும் வந்து பயிலும் என்று கூறுவர் அகப்பொருணூலோர்.

குறிப்பு:-இவ்வாறு கொள்ளாமல், இச்சூத்திரத்திற்கு "முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவுதலாமென" இளம்பூரணர் கூறும் பொருள் பொருந்தாது.

இதுவும் முன்னிரண்டும் இந்நூலார் திணைப்பொருள்களெனப் பொதுப்படக் கூறியதால், உரைகாரர் இதை முல்லைக்கும் முன்னிரண்டைப் பாலைக்கும் தனித்தமைத்துக் கூறுவது சூத்திரக் கருத்தாகாமை தேற்றம். மேலும், 'திணை மயக் குறுதலும்' என்னும் இவ்வியலின் முன் (12-ம்) சூத்திரத்தால் முதலொடு திணைக்குரிப் பொருள் ஐந்து மயங்குதற்கும், 'உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே' என்னும் (13-ம்) சூத்திரத்தால் ஐந்திணை இலக்கணத்திலடங்காத அகத்திற்குரிய பிற உரிப் பொருளெல்லாம் முதற் பொருளொடு மயங்குதற்கும், 'எந்நிலமருங்கிற் பூவும் புள்ளும்' என்னும் (19-ம்) சூத்திரத்தால் கருப்பொருள்கள் தம்முள்ளும் முதல் உரிப்பொருள்களோடும் விரவுதற்கும், புறனடைச் சூத்திரங்கள் தனித்தனியே கூறி வைத்தாராதலால், ஈண்டு மீண்டும் முன்கூறிய முதலொடு கருப்பொருள் விரவுதலையே கூறினரென்பது கூறியது கூறலா மாதலின் அது பொருந்தாதென்க. ஐந்திணையிலடங்காப் பிற உரிப் பொருட்டுறைகள் இவ்வியலில் மேற்சுட்டினமட்டோடமையாது வேறு வருவனவு முளவாதலின், அவற்றை யமைக்க இப்புறநடை ஈண்டுக் கூறப்பட்டது.

தலைமக்களின் மனையற மாட்சியைச் செவிலி வியந்து பாராட்டல், கற்பறக்காதலால் இற்சிறப்பின்பம் தலைவன் பாராட்டல், தலைவன்வரவு கூறுவாரைத் தோழி வாழ்த்தல், அவரைத் தலைவி வாழ்த்தல், இயற்பட மொழிதல், பரத்தை தலைவி பாங்காயினர் கேட்பக் கூறல் போல் பலவையும் பிறவும் முன் கூறியவற்று ளடங்காமையின்,

அவையமைய இப்புறனடைச்சூத்திர மின்றியமையாமை யறிக.

“பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோ
லுண்ணென் றோக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந் தொழியப் பந்த ரோடி
ஏவன் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவு மொழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்;
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணுஞ் சிறுமது கையளே.”

(நற். 110.)

தலைவன் இற்சிறப்பின்பம் பாராட்டற்குச் செய்யுள்:—

“விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே,
பூப்போ லுண்கண் பொன்போல் மேனி
மாண்வரி யாகக் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே.”

(குறு. 101.)

இக் குறுந்தொகைப் பாட்டு இல்லற நடத்தும் தலைவன் தான் தன் கற்புயர்காதல் மனைவியாலெய்தும் இற்பேரின்பத்தைப் பாராட்டியது.

இனி, தலைவன் வரவு கூறுவாளைத் தோழி வாழ்த்தற்குச் செய்யுள்:—

" அரும்பெற லமிழ்த மார்பக மாகப்
பெரும்பெய ருலகம் பெறீஇயரோ வன்னை,
தம்மில் தமதுண் டன்ன சினைதொறும்
தீம்பழந் தூங்கும் பலவி
னோங்குமலை நாடனை வருமென் றோளே."
(குறு. 83.)

அவ்வயலிலாட்டியைத் தலைவி வாழ்த்தற்குச் செய்யுள்:—

" அமிழ்த முண்கநம் மயலி லாட்டி,
பால்கலப் பன்ன தேக்கொக் கருந்துபு
நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி யயலது
முள்ளி லம்பணை மூங்கிலிற் றூங்குங்
கழைநிவந் தோங்கிய சோலை
மலைகெழு நாடனை வருமென் றோளே."(குறு.201.)

தலைவி இயற்பட மொழிதற்குச் செய்யுள்:—

" இதுமற் றெவனோ, தோழி! துனியிடை
இன்னர் என்னு மின்னாக் கிளவி?

இருமருப் பெருமை யீன்றணிக் காரா
உழவன் யாத்த குழவியி னகலாது
பாற் பெய் பைம்பயி ராரு மூரன்
திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டி ராகிய நமக்கே?" (குறு 181.)

"நிலத்தினும் பெரிதே, வானினு முயர்ந்தன்று,
நீரினுமாரள வின்றே, சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே."
(குறுந். 2.)

என்பதுமியன் மொழிதலாம்.

பரத்தை தலைவி பாங்காயினர் கேட்பக் கூறியதற்குச் செய்யுள் :—

"கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்,
எம்மிற் பெருமொழி கூறித், தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கு
மாடிப் பாவை போல,
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே."
(குறுந். 8.)

"கணைக்கோட்டு வாளை கமஞ்சூன் மடநாகு
துணர்த்தேன் கொக்கின் தீம்பழங் கதூஉந்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பௌவ மணங்குக, தோழி!
மனையோண் மடமையிற் புலக்கும்
அனையே மகிழ்நற்கியா மாயின மெனினே."

என்னும் குறுந்தொகை (164-ம்) செய்யுள் காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினர் கேட்ப உரைத்ததாகும்.

சூத்திரம் 45.

உள்ளுறை உவமம், ஏனை உவமமெனத்
தள்ளாதாகும், திணையுணர் வகையே.

கருத்து:—இது, அகத்துறைச் செய்யுட்களில் வரும் உரிப்பொருட் பகுதிகள் எல்லாவற்றிற்கும் சிறப்பாக உரித்தாம் உவம வகை கூறுகிறது.

பொருள்:—திணையுணர் வகையே=ஐந்திணை உணர்த்தும் உரிப்பொருட் பகுதிகளில்; உள்ளுறை உவமம்= உள்ளுறை உவமமானது; ஏனை உவமமெனத் தள்ளாதாகும்=மற்றைய உவமத் தோற்றம்போல அருகாமல் வந்து பயிலும்.

குறிப்பு:—ஈற்றேகாரம் பிரிநிலை, அகத்துறைகளுள் திணையுணர்வகையை வேறுபிரித்தலின். அவ்வகையல்லாப் பிற அகப்பகுதிகளில் ஏனையுவமம் அருகாது என்பது குறிப்பு.

உவமம், வெளிப்படத் தோன்றும் உவமமும், உள்ளுறை உவமமுமென இருவகைத்தாம். இவற்றுள் உள்ளுறை உவமமே திணையுணரும் உரிப்பொருட் பகுதிகளைச் சிறப்பித்தற்கு உரித்தாகும். ஏனைய உவமம் அவ்வாறு அகவொழுக்க வகைகளுக்குச் சிறவாதாகையால், அகத்துறைகளில் திணையுணரும் பகுதிகளுக்கு அத்துணையா ஆட்சி பெறுதலில்லை. ‘தள்ளாதாகும்’ என்றதனால், ஏனை உவமம் அருகிப் பயிலும் என்பதும், உள்ளுறை உவமம் அவ்வாறன்றிப் பெருவரவிற்றாம் என்பதும் பெறப்படும்.

உள்ளுறை, உவமத்தின் ஒரு பகுதியா யடங்குமே னும், புறத்திற்கே பெரிதும் உரிமை கொள்ளும் ஏனை உவமம் போலாது அகத்திற்கே சிறந்துரிய தாதலின், இது உவம இயலிற் கூறப்பெறுது அகவொழுக்கம் கூறும் இத்திணையிற் கூறப்பட்டது. ஏனை உவமத்தை 'அகத் திணைக்குரித்தல்லாதது' என ஏனை உவமச் சூத்திரத்தின் கீழ் விரிவுரையில் நச்சினார்க்கினியர் கூறுவர். சான்றோர் செய்யுட்களில் அருகிய ஆட்சி அகத்திணையிலும் 'ஏனை உவமம்' பெறுதலின், அதனை அறவே அகத்திணைக்கு உரித்தில்லை என விலக்குதல் பொருந்தாது. இன்னும் இளம்பூரணர் உள்ளுறை உவமம் ஒழிந்த உவமம் என இருவகையாலும் 'திணையுணர்வகை தப்பாதாகும்' எனக் கூறுவதாலும், ஏனை உவமத்திற்கு அருகியேனும் அகத் திணைக்கண் ஆட்சி உண்மை தெளியப்படும்.

சூத்திரம் 46.

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே.

கருத்து:—இது, உள்ளுறை உவமத்திற்கு நிலைக்களம் உணர்த்துகிறது.

பொருள்:—உள்ளுறை = அகத்திணையிற் பயிலும் உள் ளுறை உவமம்; தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்கொள் ளும் = கருப்பொருள்களுள் தெய்வம் நீக்கி மற்றையவற் றைத் தனக்கு நிலைக்களனாகத் தழுவி வரும்; என்ப குறி யறிந்தோரே = என்று கூறுவர் ஒப்பியலறிந்தோர்.

குறிப்பு:—ஈற்றேகாரம் அசை. ஒப்பியலறிந்தோர் என்னு மெழுவாய் கூறுவர் என்னும் வினைக்கேற்ப அவாய் நிலையாற் பெறப்பட்டது.

சூத்திரம் 47.

உள்ளுறுத் திதனோ டொத்துப் பொருண் முடிகென
வுள்ளுறுத் திறுவதை உள்ளுறை உவமம்.

கருத்து:— இது, உள்ளுறை வுவமத்தின் இயல்பு கூறுகின்றது.

பொருள்:—உள்ளுறுத்திதனோடு ஒத்துப் பொருள் முடிகென=வெளிப்படக் கூறும் பொருளோடு, உள்ளும் பொருளும் ஒத்து முடியுமாறு; உள்ளுறுத்திறுவதை உள்ளுறை உவமம்=உள்ளத்து ஊன்றி நுணுகி உணர அமைந்து முடிவது உள்ளுறை உவமமாகும்.

குறிப்பு:—இறுவதை என்பது, ஏற்றை என்பது போல, ஐயீறு பெற்று முடிந்த பெயர்.

"எற்றோ வாழி, தோழி! முற்றுபு
கறிவளர் அடுக்கத்து இரவின் முழங்கிய
மங்குன் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட விழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி யருவி உண்டுறை தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்தும் சால்பீன் றன்றே"
(குறுந். 90.)

மிளகுக் கொடி வளரும் மலையில், இரவில், இடி முழங்கும் கார்தரு மழையில், உயிர் நிறைந்த முசுக்கடுவன் விரும்ப அதன் கையகப்படாது கிளையினின்று நழுவிய மணமுள்ள பலாக்கனியை மலையருவி தக்கார் உண்ணத் தருந்த துறையில் கொண்டு தரும் குன்ற நாடன் 'கேண்மை மெல்லிய தோளைச் சிறிது வருத்தினும் அமைதியை அளித்தது' என்றது வெளிப்படக் கூறும் பொருள். இதில், செல்வம் நிறைந்த அயலார் தலைவியை விரும்பி வந்தோர் வரைய வொண்ணாமல், ஊரலரை அஞ்சிச் செறித்த தலைவியை காவல் நிறைந்த இற்புறத்தில் இரவில் தோழி கொண்டுதர, தலைவன் உடன் கொண்டுசென்று, அவளைத் தன் மனையில் கற்பறம் சிறக்கக் காதலால் மணந்து நன்மையைத் தந்தான் என்பது உள்ளுறுத்து ஒத்து முடிவதால், இது உள்ளுறை உவமமாமாறு காண்க.

சூத்திரம் 48.

ஏனை உவமம் தானுணர் வகைத்தே.

கருத்து:—இஃது உள்ளுறை ஒழிந்த மற்றைய உவமத்தோற்றம் உணர்த்துகிறது.

பொருள்:—ஏனை உவமம் = உள்ளுறை ஒழிந்த பிற உவமம்; தானுணர் வகைத்தே = நுணுகி உள்ளுறுத் துணர வேண்டாது, பட்டாங்கே சொல்வழிப் பொருளறியக் கிடக்கும் கூறுபாட்டை யுடைத்து.

குறிப்பு:— அகத்திணைக்குச் சிறந்துரிய உள்ளுறையைக் கூறிய பின், ஒப்பக்கூறல் ஒன்றென முடித்தல்

தன்னின முடித்தல் என்னுமுறைபற்றி, உள்ளுறுத் துணரும் உள்ளுறை உவமம் போலாது பட்டாங்குணரும் பான்மைத்தாம் "ஏனை உவம" இயலும் உடன் கூறப் பட்டது. திணையுணர்வகையல்லாப் பிற அகப்பகுதிகளி னெல்லாம் ஏனையுவமும் ஒத்த வழக்குரிமை கொள்ளுத லின், அதுவுமிங்கமைய விளக்கப்பட்டது.

இனி, உருவகத்தை உள்ளுறை உவமமென மயங்க வைக்கும் நச்சினார்க்கினியர் சிறப்புரை பொருந்தமையு மறிக.

சூத்திரம் 49.

காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி,
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடு மவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

கருத்து:— இது, அகத்திணை எழனுள் மேல் நடு வணைந்திணைக்குரிய இயல்புகள் கூறியபின், எஞ்சி நின்ற இரண்டில் கைக்கிளை இயல்பை விளக்குகிறது

பொருள்:— காமஞ்சாலா இளமையோள் வயின் = காதற் செவ்வி கனியும் பருவம் வராத சிறுமி ஒருத்தி யிடம்; ஏமஞ்சாலா இடும்பை எய்தி = ஒரு தலைவன் தனக்கு மருந்து பிறிதில்லாப் பெருந்துயராம் காதனோய்.

கொண்டு; நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால் தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து = பட்டாங்குப் புகழ்தலும் (ஆற்றாமையால்) பழிப்பதுபோலப் புகழ்தலுமாகிய இருவகையானும் தன்பாலும் அச்சிறுமிபாலும் வீறுபெறத் தக்கன சார்த்தி; சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல் = மறுமாற்றம் பெறாத வழியும் தன்னுணர்ச்சி தானுரைத்து மகிழ்வது; புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு = பொருந்தி வெளிப்படும் கைக்கிளைத் திணையின் குறிப்பாகும்.

குறிப்பு:— 'கைக்கிளை' என்பது ஒருமருங்கு பற்றிய குற்றமற்ற காதலாகும். காமச்செவ்வி அறியாச் சிறுமியிடம் தலைமகனொருவனுக்குத் தன்னலமறந்து 'அவள் பொருட்டே வாழ்வு' எனக்கொள்ளும் காதற் பெற்றி தோன்றுங்கால், அது கைக்கிளை எனப்படும். காதலுணரும் பருவமுற்றாள் தன்னைக்காதலியாத வழி தான் அவளைக் காதலிப்பதை, ஆடவனுக்கு 'நோந்திறப்' பெருந்திணையாகக் கொள்வதல்லது செந்திறக்காதல் வகையாகப் பாராட்டுதல் பழந்தமிழ் மரபன்று. பருவ மின்மையால் தன்னைக் காதலிக்க ஒல்லாத சிறுமியாயினும், அவள் தன்காதலுக்கு உரியளாதலின் காதலன் எனைத்து வகையானும் அவள் நலம் பேணுவதும், தன் புரைதீர் காதலால் தன்னொடும் அவளொடும் 'கொள்ளாத கூறாமல்' பெருமை பேணும் பெற்றியனவே சார்த்திக் கூற்று நிகழ்த்துவதும், தனக்கு அவள்தந்த காதல் நோய்க்கு "அணியிழை (காமஞ்சாலாமையின்) தானே மருந்தாக" வொல்லாமையால் அவன் இடும்பைக்கு ஏமம்

பெறுனையினும், தன் காதலுணர்ந்து அவள் அதற்கேற்ற பெற்றி மறுமாற்றம் கூறவொண்ணளாயினும், அவள்பால் தன்னுணர்வுரைத்து மகிழ்வதும், குற்றமற்ற கைக்கிளையின் குறிகளாகும் என்பது இச்சூத்திரத்தில் வற்புறுத்தப்படுகிறது.

அத்தகைய கைக்கிளையும் ஆடவர்க்கே அமைவதன்றி மகளிர்க்கு கூறுவது மரபன்று. மகளிர்பால் ஒருதலைக் காம வெளிப்பாடு அவர்தம் பெண்ணீர்மைக்குப் பொருந்திய பொற்புடை நெறியாகாமையின், அதனைக் கைக்கிளையின் பாற்படுத்தாமல் பெருந்திணையில் அடக்குவதே புலனெறி வழக்கில் பண்டையோர்கொண்ட தமிழ் மரபாம்.

கைக்கிளைத் தலைவனுக்கும் அவன் காமஞ்சாலாக் காதற் சிறுமிக்கும் வீறுதர வருவனவே அவன் கூற்றும்; அல்லாதன அவன் வாய்பிறவா, என்பதை வற்புறுத்தற்கு 'தருக்கிய புணர்த்து' என்றுரைக்கப்பட்டது. 'தருக்கிய சிறை' எனும் கம்பர் சொற்றொடரும் வீறுதரும் தருக்கின் பெற்றியை வலியுறுத்தல் காண்க.

பண்டைத் தமிழ்ப்புலவர் கொண்ட தூயகைக்கிளையின் பெற்றியும் பெண்மைப் பண்பும் பாராட்டாது, பிற்காலத்தில் பிறர் பெருந்திணையின்பாற்படும் புரைபடு மிழிந்த ஒருதலைக் காமத்தை பெண்பாற் கைக்கிளை எனக் கொள்வாரானார். தம் புதுக் கொள்கைக்குத் தொல்காப்பியர் நூலில் இடமின்மை கண்டுவைத்தும், "புல்லித்

தோன்றும் கைக்கிளை" எனலால் "புல்லாமல் தோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும்; அது காமஞ்சான்ற கலை மகள் மாட்டு நிகழும்" எனவும், அது களவியலிற் கூறப் படுவதுபோலவும் பழைய உரைகாரர் கூறுவர். அவரைப் பின்பற்றி நாற்கவிராஜ நம்பியும் தன்னகப்பொருளில் 'காமஞ் சான்ற இளமையோள் வயின்' என்றே இலக் கணம் வகுத்து, காமஞ்சாலா இளமையோள்பால் நிகழும் தலைவனின் தூய காதலைப் பாராட்டா தொழிந்தார்.

காட்சி முதலியவற்றை கைக்கிளை எனக் கொள்ளா மல் காமக்குறிப்பாம் ஐந்திணை உரிப்பொருள்களின் பாற் படுத்தித் தொல்காப்பியர் இவ்வகத்திணையியலிலும் கள வியலிலும் கூறுதலானும், களவு இருமருங்கொத்த அன் பினைந்திணையின் பாற்பட்டடங்குதலானும், அவற்றின் வேறுபட்ட பெருந்திணையைப்போலவே கைக்கிளையும் அவற்றுள் அடங்காத வேறுதிணையாய்ப் பிரித்துக் கூறப் படுதலானும், களவியலிற் கூறப்படும் எதுவும் அன்பின் ஐந்திணையன்றிக் கைக்கிளைத்திணை ஆகாமை ஒருதலை. இச்சூத்திரத்திற் கூறப்படும் கைக்கிளை குற்றமற்ற பெற் றியதாதலின், பொருந்தாக் காமமாகிய பெருந்திணை போலாது கைக்கிளை பொருந்தும் தூய காதலாம் எனற்கே "புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே" என இந்நூலார் விளங்கவைத்தார். (புல்லுதல்=பொருந் துதல், = தழுவுதலுமாம்.)

"வாருறு வணரைம்பால்" எனும் குறிஞ்சிக் கலியுள்,

"உள்ளுநர் என் உயிரைஉண் டுயவுநோய் கைம்மிக
இளமையா னுணராதாய் நின்தவ றில்லானும்
களைநரின் நோய்செயுங் கவினறிந் தணிந்துதம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்." (1)

"நடைமெலிந் தயர்வுறீஇ நாளுமென் நலியுநோய்
மடைமையான் உணராதாய் நின்தவ றில்லானும்
இடைநில்லா தெய்க்குநின் உருவறிந் தணிந்துதம்
உடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்."(2)

"அல்லல்கூர்ந் தழிவுற அணங்காகி அடருநோய்
சொல்லினு மறியாதாய் நின்தவ றில்லானும்
ஒல்லையே உயிர்வவ்வும் உருவறிந் தணிந்துதம்
செல்வத்தாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்." (3)

என வந்தமை காண்க. இத்தாழிசைகளுள், (1) தலைவன் தன்னை நலியும் காமநோயை 'இளமையா னுணராதாய்', 'மடமையா னுணராதாய்', 'சொல்லினு மறியாதாய்' எனக் கூறுதலால், அவள் காமஞ்சாலா இளமையோள் என்பது அறியப்படும். (2) 'களைநரின் நோய் செயும் கவின்' எனவும், 'இடைநில்லா தெய்க்கு நின் உரு' எனவும். 'ஒல்லையே உயிர் வவ்வும் உரு' எனவும் அவளைப் புகழ்வதாலும், இக்கலியுள் சுரிதகத்தில் 'மற்றிந் நோய் பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயின், பொலங்குழாய் மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி நிறுக்குவன்போல்வல் யான், நீ படுபழியே' எனப் பழிப்பது போல அவள் பெருமை கூறுதலாலும், நன்மையும் தீமையும் என்றிரு திறத்தாலும் தன்னொடும் அவளொடும் தலைவன் தருக்கிய புணர்த்துக் கூறுதல் காண்க. (3) இளையோள் தனக்கு மறுமாற்றம் கூறுவழியும், "நுமர்தமரில்லென்பாய்" என விளித்து அவளிடம் சொல்லெதிர் பெறாத்தலைவன் தானே சொல்லி இன்புறுதல் காண்க..

சூத்திரம் 50.

ஏறிய மடற்றிறம், இளமை தீர்திறம்,
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்,
மிக்க காமத்து மிடலொடு தொகைஇ,
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

கருத்து:—இது, நிறுத்தமுறையானே, எழுதிணைகளுள் இறுதியாக எஞ்சி நின்ற பெருந்திணை இயல் கூறுகிறது.

பொருள்:—ஏறிய மடற்றிறம் = மடலேறுவேன் எனக் கூறுதலோடமையாது, தலைவன் மடலேறுதலும்; இளமை தீர்திறம் = இன்பம் துய்த்தற்கு உரிய பருவம் கழிந்த பிறகு எழும் விழைச்சு விருப்பமும்; தேறுதலொழிந்த காமத்து மிகுதிறம் = தெளிய வொண்ணாமல் அறிவழிக்கும் கழி காமமும்; மிக்க காமத்து மிடலொடு தொகைஇ = கரைகடந்த காமத்தால் விரும்பாரை வலிதிற் புணரும் வன்கண்மையொடு கூட்டி; செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே = கூறப்பட்ட இந்த நான்கும் புரைபடு காம இழிவொழுக்கத்தின் வகை குறிப்பனவாகும்.

குறிப்பு:—திணை என்பது ஒழுக்கம் இங்குப் 'பெருந்திணை' என்பது குறிப்பால் சிறிய ஒழுக்கம் எனப் பொருள்படும். கழிகாமத்தைச் சிறுமை எனக் கூறும் மரபு, "செருக்கும் சினமும் சிறுமையும்" எனும் குறளில் காமக் குற்றத்தைச் 'சிறுமை' எனலால் அறிக. அறிவுடை மக்கட்டன்மைக் கமையாத இப் புரையொழுக்கத்தைப் பெரிய

ஒழுக்கம் என்றது, அது ஒழுக்கத்தொடு படாதென்பது குறிக்கும் அவையல்கிளவியாகும். மங்கலமற்றதையும் இடக்கரையும் மறைத்து எதிர்மறைப் பெயரால் வழங்குவது அடிப்பட்ட தமிழ் மரபு. தாலி பெருகிற்று, விளக்கைப் பெருக்கு, என்பவற்றுள் பெருமைச்சொல் மறுதலைப் பொருளில் வருவது போலவே, பொருந்தாக் காமத்தைப் பெருந்திணை என்பதிலும் பெருமை அடை ஒழுக்கச் சிறுமையைச் சுட்டுவதாகும். எனவே, பெருந்திணை என்பது அவையில் உரைக்கவொண்ணு இழிவொழுக்கத்தை மறைத்துக்கூறும் செய்யுள்வழக்கச் சொல்லாகும்.

பெருந்திணைவகை நான்கனுள், மடலேறுதலும் விரும்பாரை வலிந்து கூடலும் ஆடவர் மாட்டே நிகழும். மடன்மா கூறுதலும் கற்புடை மகளிர்க்குப் பொற்புடை நெறியன்மையின், மடலேறுதல் எஞ்ஞான்றும் அவர்கின்மை தெளியப்படும். மிக்க காமத்து மிடல் தம்மின் வலியராய ஆடவர்பால் மெல்லியலார்க்கு ஒல்லாதாகும். இளமைதீர் திறமும் தேறுதலொழிந்த காமமும் இருபாலார்க்கும் பொதுவாகும்.

(1) ஏறிய மடற்றிறம் பெருந்திணைக் குறிப்பாதற்குச் செய்யுள் :—

“மடலே காமந் தந்த தலரே
மிடைபூ வெருக்கி னலர்தந் தன்றே,
இலங்கு கதிர் மழுங்கி யெல்விசும்பு படரப்
புலம்புதந் தன்றே, புகன்றுசெய் மண்டில

மெல்லாந் தந்தன் றலையும் பையென
வடந்தை துவலை தூவக் குடம்பைப்
பெடைபுண ரன்றி லியங்குகுர லளைஇக்
கங்குலுங் கையறவு தந்தன்று,
யாங்காகு வென்கொ லளியேன் யானே?"
(நற். 152.)

"நாணுக நாறு நனைகுழலாள் நல்கித்தன்
பூணாக நேர்வளவும் போகாது—பூணாக
மென்றே னிரண்டாவ துண்டோ மடன்மாமே
னின்றேன் மறுகிடையே நேர்ந்து."
(திணைமாலை நூற்றைம்பது—16.)

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன், இன்று
(டையேன்
காமுற்றார் ஏறுமடல்." (குறள். 1133.)

'எழின்மருப் பெழில்வேழம்' என்னும் நெய்தற் கலியு (21)ம், 'சான்றவிர் வாழியோ' என்னும் (22-ம்) நெய்தற்கலியும் ஏறியமடற்றிறப் பாக்களாதல் காண்க.

(2) இளமை தீர் திறம் பெருந்திணைக் குறிப்பாதற்குச் செய்யுள் :—

"மின்சாயன் மார்பன் குறிநின்றேன் யானாகத்
தீரத்தறைந்த தலையுந்தன் கம்பலுங்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநம்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்

தோழிநீ போற்றுதி யென்றி, அவனங்கே
பாராக் குறழூப் பணியாப் பொழுதன்றி
யாரிவ ணின்றீ ரெனக்கூறி, பையென
வைகாண் முதுபகட்டிற் பக்கத்திற் போகாது
தையா றம்பலந் தின்றியோ வென்றுதன்
பக்கழித்துக் கொண்டீ யெனத்தரலும், யாதொன்
வாய்வாளே னிற்ப, கடிதகன்று கைம்மாறிக் [றும்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ மற்றியா
னேனைப் பிசாசரு ளென்னை நலிதரி
னிவ்வூர்ப் பலிநீ பெறூஉமற் கொள்வேனெனப்
பலவுந் தாங்காது வாய்பாடி நிற்ப,
முதுபார்ப்பா னஞ்சினனாக லறிந்தியா னெஞ்சா
தொருகை மணற்கொண்டு மேற்றாவக் கண்டே
கடுதாற்றிப் பூச றுெடங்கினன், ஆங்கே
யொடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்க
ணிருட்புலி கொண்மார் நிறுத்த வலையுளோ
ரேதில் குறுநரி பட்டற்றாற் காதலன்
காட்சி யழுங்க நம்மூர்க் கெலாஅ
மாகுல மாகி விளைந்ததை யென்றுந்தன்
வாழ்க்கை யதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து."

(குறிஞ்சிக்கலி. 29.)

இக்குறிஞ்சிக்கலியுள், 'தீரத்தறைந்த தலையும்'— 'வைகாண் முதுபகட்டின்' 'முதுபார்ப்பான்'—என வருதலால், இளமை தீர்ந்தான் ஒருவன் இணைவிழைச் சினை மேற்கொண்டான் என்பது புலனாகும்.

(3) தேறுதலொழிந்த காமத்து மிகுதிறம் பெருந்திணைக் குறிப்பாதற்கு, தன்னை விரும்பாப் பிறன் மனையாளைப் பெட்டொழுகும் பேதையான தென்னிலங்கை அரக்கன் காமக்கதை சாலும். இராவணன் தன் காமப் புரையுணர்ந்து தேறாமல் இறக்குமட்டும் உளத்ததனை வளர்த்த பெருந்திணைப் பெற்றியைக் காட்டும் கம்பர் பாட்டுமிங்குக் கருதற்குரியது.

"வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி [மேலும் கீழும்
எள்ளிருக்கு மிடனின்றி உயிரிருக்கு மிடனாடி யிழைத்தவாறோ?
கள்ளிருக்கு மலர்ந்த கூந்தற் சானகியை மனச்சிறையிற் கரந்த [காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் [வாளி."

(4) மிக்ககாமத்து மிடல் பெருந்திணைக் குறிப்பாதற்குச் செய்யுள் :—

"என்றவ ளரசன் தன்னை நோக்கலள், இவன் கணோர்வுஞ்
சென்றமை குறிப்பிற்றேறிக், கூத்தெலா மிறந்தபின்றை
நின்றது மனத்திற் செற்றம், நீங்கித்தன் கோயில்புக்கான்
மன்றல மடந்தை தன்னைவலிதிற்கொண் டொலிகொடா
ரான்." (சிந்தா. 685-காந்.)

"தேனுடைந் தொழுகுஞ் செவ்வித் தாமரைப் போதுபுல்லி,
ஊனுடை உருவக் காக்கை இதழுகக் குடைந்திட்டாங்கு,-
கானுடை மாலைதன்னைக் கட்டியங்காரன் சூழ்ந்து
தானுடை முல்லையெல்லாம் தாதுகப் பறித்திட்டானே.
(சிந்தா. 686-காந்.)

சூத்திரம் 51.

முன்னைய நான்கும் முன்னதற் கென்ப.

கருத்து:—இது, கைக்கிளை பெருந்திணைகள் ஆகிய இரு சூத்திரங்கட்குமுன், ஐந்திணைகளுள் அடங்காமல் திணைக்கு உரிப்பொருள்களாய் அகப்பகுதியில் வரும் பொது இயல்களாகக் கூறபபட்ட நான்கும், கைக்கிளை பெருந்திணையாய இரண்டனுள் முன்னதாய கைக்கிளைக்கு உரியவாதல் கூறுகிறது.

பொருள்:—முன்னைய நான்கும்=மேல் கைக்கிளை பெருந்திணைச் சூத்திரங்கட்கு முன்னே கூறிய (1) நிகழ்ந்தது நினைத்தல் (2) நிகழ்ந்தது கூறிநிலையல் (3) மரபுநிலை திரியாது விரவும் பொருள் விரவல் (4) உள்ளுறை உவமம் திணைபுணர் வகையாதல் என்ற நான்கும்; முன்னதற்கென்ப=கைக்கிளை பெருந்திணையாகிய இரண்டனுள் முற்கூறிய கைக்கிளைக்காம் எனக் கூறுவர் பொருள் நூற்புலவர்.

குறிப்பு:—'என்ப' என்பதற்கேற்ப "பொருள் நூற் புலவர்" எனும் எழுவாய் அவாய் நிலையாற் கொள்ளப் பட்டது. "நிகழ்ந்தது நினைத்தல் முதல்" 'உள்ளுறை உவமம் திணைபுணர் வகை' யாதல் வரை கூறப்பட்ட நான்கும் அன்பினைந் திணைகளுக்குப் பொதுவாய்த் திணைக்குரிப் பொருளாய் அமைதலால், அன்பினைந் திணைகளின் இயல்புகூறும் பகுதிகளின் இறுதியில் அவை அடைவுபெறக் கூறப்பெற்றன. இவை, நடுவணைந்திணை

களுக்குச் சிறந்துரியவாதல் போலவே, புரைதீர்ந்த செந்திறக் கைக்கிளையின் கண்ணும் வந்து பயிலும்; ஆனல் நோந்திறப் பொருந்தாப் பெருந்திணையின்கண் இவை ஆட்சி பெறா.

தொல்காப்பியர் நூலில் குற்றமற்ற கைக்கிளை ஒன்றே கூறப்படுகிறது. நச்சினார்க்கினியர் கைக்கிளையாகக் கருதும் தமிழ் வழக்கல்லாத தவறுடைய கூட்டமெல்லாம் பெருந்திணையாகக்கருதலே ஆன்ற மரபாகும். குற்றமற்ற செந்திறக் கைக்கிளையில், தூய ஒருதலைக் காதலுடையான் ' தருக்கிய புணர்த்துச் சொல்லி யின்புறாஉம்' காலத்துத் தன் காதலியைப் பற்றிய முன் நிகழ்ச்சிகள் அவன் நினைத்ததற்கு ஏதுவாதலும், பின்கூறி இன்புறப் பெறுதலும், பிற விரவும் பொருள் விரவலும், உள்ளுறை உவமம் ஆளுதலும், இயலியையும் இன்பமும் பயக்கும். நோந்திறப் பெருந்திணையிலோ பழிபடும் முன் நிகழ்ச்சிகளை நினைத்தலும் கூறலும் நேராமையும், நேரின் இடும்பையன்றி இன்பந்தாராமையும் வெளிப்படை. ஆதலால் அவை பெருந்திணைக்கு பொருந்தாமை ஒருதலை. உள்ளுறை உவமமும் ஒத்த காம ஐந்திணைகளிலும் புரை தீர்ந்த கைக்கிளையிலும் சிறந்து வருதல்போல் பெருந்திணைக்கு மாட்சிப்படாமை எளிதில் தெளியப்படும். அதனல் இச்சூத்திரச் செம்பொருள் மேற்கூறியதே என்பது தேற்றம்.

இனி, இதற்குப் பழைய உரைகாரர் இருவரும் சூத்திரக் கருத்தொடு பொருந்தாது முரண்பட இரு

வேறு பொருள் கூறுவர். அவருரை பொருந்தாமை யாராய்வாம்.

இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் தரும் பொருளாவது:— "இயற்கை புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சியும் ஐயமும் தெரிதலும் தேறலும் என்ற குறிப்பு நான்கும் நற்காமத்துக்கு இன்றியமையாது வருதலின் முற்கூறிய சிறப்புடைக் கைக்கிளையாதற்குரிய என்று கூறுவர் ஆசிரியர், எ-று" இனி, இதன் கீழ் நச்சினார்க்கினியர் கூறும் சில சிறப்புக்குறிப்புக்களும் ஈண்டுக் கவனிக்கத்தக்கன. அவையாவன:—"களவியலிற்கூறும் கைக்கிளை சிறப்பின்மையின், முன்னதற்குரிய எனச் சிறப்பெய்துவித்தார். களவியலுள் 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என்றது முதலாக இந்நான்கும் கூறுமாறு ஆண்டுணர்க" என்பன.

இவ்வுரைக் கருத்து இச்சூத்திரத்தால் தொல்காப்பியர் சுட்ட நினைத்ததாமா? இங்கு நச்சினார்க்கினியர் கூறுவது அவருக்கு உடன்பாடாமேல், ஐயமகற்றி அக் கருத்தைப் பொருத்தமாக விளக்கும் சொற்பெய்து சூத்திரிப்பர் அன்றோ? அஃதவர் கருத்தன்மையை ஈண்டும் பிற இடங்களிலும் அவர் சூத்திரச் சொற் போக்கே தெளிய விளக்குகிறது.

முதலில், ஒரே சூத்திரத்தில் ஈரிடத்தில் வரும் "முன்" என்னும் சொல் அவ்விரிடத்தும் ஒரேவிதமாகப் பொருள்படவேண்டும். இலக்கண நூலில் சூத்திரச்

சொற்களை எளிதில் பொருள் விளங்குதற்கு மாறாக மயங்க அமைப்பது மரபன்று. இச்சூத்திர முதலில் "முன்னையநான்கும்" என்பதில் வரும் "முன்" என்பதைக் கீழே அல்லது பின் எனும்பொருள் குறிப்பதாகக் கொண்டு, இடத்தால் முன்னே களவியலில் கூறும் காட்சி முதலிய நான்கும் எனவும், இரண்டாவதாய் "முன்னதற்கென்ப" எனவருமிடத்துள்ள "முன்" என்பதை மேலே அல்லது காலத்தால் முன்னேஎனக் கொண்டு, மேற்கூறிய கைக்கிளை பெருந்திணை என்ற இரண்டனுள் கைக்கிளைக்குரிய" எனவும், நச்சினார்க்கினியர் பொருண்முடிவு செய்கின்றார். எனவே, இவ்வொரு சூத்திரத்தில் இருமுறை வரும் "முன்" என்னும் ஒரு சொல்லை—முன்னுக்குப்பின் முரணுவதான—இருவேறு பொருளில் இந்நூலார் கூறியதாகக்கொள்ள நேருகிறது.

"ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே"

சூத்திரம் எனவும்,

"முதலும் முடிவும் மாறுகோ ளின்றி
............பொருண்மை காட்டி
.......................................
நுண்ணிதின் விளக்கலது
நூலெனப் படுவது"

எனவும் நூலுக்கும் நூலினுட் சூத்திரத்துக்கும் (செய்யுளியலில்) இலக்கணம் வகுப்பவரே, தம்மிலக்கண விதிக்கு மாறாகத் தாமே முன்பின் முரணிப் பொருள்நனிவிளங்காது கற்பவர் மயங்குமாறு இச்சூத்திரத்தைத் தமது பெரு நூலில் யாத்துவைத்தார், எனக்கொள்ளுவது அவர் நூல் நோக்கிற்கும் சொற்போக்கிற்கும் பொருந்தாது? இங்கு இருமுறைவரும் "முன்" என்னும் சொல்லை ஈரிடத்தும் தெளிவான ஒருபொருள் குறியாமல் மாறான இருவேறு பொருள்படக் கூறி யாரையும் மயங்க வைக்க இந்நூலார் கருதார் என்பதொருதலை.

இனி இரண்டாவதாக, இங்கு "முன்னைய நான்கும்" என வரையறைப்பட்டவை, அடுத்து இவ்வியலில் விளக்கப் பெறுதனவாய், பின்னே வெவ்வேறு பொருள் நுதலிய பல்வேறு சூத்திரமும் ஒத்தும் கடந்து வேறோர் இயலில் வேறு பொருளிடைக்கூறப் போவனவற்றைக். குறிக்குமெனில், இங்கு அக்கருத்தைத் தெளிய விளக்கியிருத்தல் வேண்டும். இவ்வியலில் இச்சூத்திரம் கற்பவரை, இனிப் பின்கூறப்போகும் வேறோர் இயலில் இத்தொகையின் வகை நான்கும் சுட்டப்படுமெனத் தாம் கூறுமலே எதிர்பார்க்க வைக்கவும், இடையில் வருபவற்றுள் அவை எவை எனத் துணியாமல் மயங்கவைக்கவும் கருதுவரா? அவ்வாறு மயக்கம்தரும் கருத்தை அவருக்கேற்ற நினைப்பது உரையறமன்று. அண்மையில் வகை விரிகள் கூறப்பெற்று, எளிதில் தெளிவும் துணிவும் தருதற்கு ஏற்றவிடத்தன்றிப் பிற இடங்களிலெல்லாம்

இந்நூலார் வாளா தொகைகூறி அமைவதில்லை. தொகை தரும் இடந்தொறும் அதன் வகையும் விளக்கிச் செல்வத வர் பிறழா முறையாதல் இந்நூல் முழுவதும் காணலாம்.

அதுவேயுமன்றி, "பின் களவியலிற் குறிக்கப்படுவ தாகக் கருதும் ஒரு கைக்கிளையை விலக்கி, இங்குப் பெருந்திணைக்குமுன் விளக்கிய வேறொரு கைக்கிளையைக் குறிப்பதற்கு 'முன்னதற்மென்ப' எனச் சிறப்பெய்து வித்தார்" என்பர் நச்சினார்க்கினியர். அதனை அடுத்து "கள வியலில் 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என்றது முதலாக இந்நான்கும் கூறுமாறு ஆண்டுணர்க", எனக் கூறி, "முன்னைய நான்கும்" எனும் தொடரில் வரும் நான் கன்வகை விவரம் குறியாமல் வாளா தொகைகூறி விடுத் தார். களவியலில் அச்சூத்திரங்களுக்கு உரைகூறுமிடத் தும் எந்நான்கும் இவையென விளக்கினரிலர். அங்குத் தொல்காப்பியர் "காட்சி, ஐயம், தெளிவு" என மூன்றே குறிக்கக் காண்கிறோம். நச்சினார்க்கினியர் கூறுமாறு காட்சி - ஐயம் - இரண்டுந்தவிரத் தெரிதல் - தேறல் - என வேறிரண்டு கூட்டி நான்கு பகுதிகள் 'இயற்கைப் புணர்ச்சிக்கும்' தலைவன் தலைவியர் இருவரின் உள்ளவுடம் பாடு அறிய 'நாட்டம் இரண்டும் கூட்டியுரைக்கும் குறிப் புரைக்கும்' முன் நிகழ்வனவாகத் தொல்காப்பியர் கூறின ரிலர். ஆகவே, களவியலில் தொல்காப்பியர் மூன்றே இன்றியமையா நற்காம முற்குறிப்பாகக் கூறினராதலால், அவற்றை இங்குக் கைக்கிளைக் குறிப்பாமெனச் சுட்ட நினைப்பின் "முன்னைய மூன்று" மென்னாது "நான்கும்" என முறைபிறந்து கூறியிரார். ஈண்டு நான்கெனத்

தெளியக் கூறுதலால், இந்நான்கும் பின் களவியலிற் பேசப்படும் மூன்றல்லாத வேறுதல் வெளிப்படை. இச் சூத்திரத்து தொகையென் குறிக்கும் நான்கும் இவை யென விளக்கப்பெறாததால், இதனேடியைந்து பொருள் தெளிதற்கு உதவுவதான நான்கன்வகைஇச்சூத்திரத்தை யடுத்து இவ்வகத்திணையியலிலேயே விளக்கப் பெற்றிருக்க வேண்டுமென்பது எளிதில் தெளியப்படும். அவற்றை அறியின், சூத்திரச் செம்பொருளும் உடனறியப்படுவதாகும்.

இவ்வுண்மைகளை உணர்ந்த இளம்பூரணர் "முன்" என்பதற்கு இச்சூத்திரத்தில் ஈரிடத்தும் காலத்தால் முற்கூறப்பட்டதையே அமைத்துக்கூறும் கடன் மேற்கொள்டார்; கொண்டு, இதற்கு முற்கூறிய பெருந்திணைப் பகுதியாகக் காட்டிய நான்கு நிலைகளில் ஒவ்வொன்றின் முன்னிலையும் இதற்கும் பெருந்திணைச் சூத்திரத்திற்கும் முற்கூறிய கைக்கிளைக்கு பொருந்துமெனப் பொருள் கூறுவர். இவருரை "முன்" என்பதற்கு ஈரிடத்தும் ஓராங்கே நேர்பொருள் கூறும் பெற்றியளவில் குற்றமற்றது; நான்கெனும் எண்ணுக்கும் பொருந்துவது. எனில், பெருந்திணைப் பகுதிகளே தத்தம் முன்னைய நிலைகளில் கைக்கிளை ஆதற்கமையும் என்பது ஆன்றோர் வழக்கும் சான்றோர் செய்யுளும் தழுவாத முரணுகும். அப்பெருந் திணை நிலைகள் கைக்கிளையாவ தெப்படி என்பதையும் விளக்கிலர். இவர் அவ்வாறு கூறுவது, அதற்குமுன் கூறிய நான்கு அகத்திணைப் பொதுவிலக்கண குறிப்புக் களுக்கும் அவற்றின் பின் கூறும் கைக்கிளை பெருந்திணை

களுக்குமுள்ள இயலியையும் முரணும் கருதாததால் நேர்ந்ததாகும். அதனால் இச்சூத்திரத்திற்கு இளம் பூரணர் உரையும், நான்கென்னும் தொகைக்குரிய வகை தேறாமல் கூறியதன்றி, இச்சூத்திரக் கருத்தாகாமை யொருதலை.

அன்றியும், இளம்பூரணர் கூறியவாறே கொள்ளி னும், பெருந்திணைப்பகுதி நான்கன் முன்னிலைகள் கைக் கிளை ஒன்றற்கே அமையுமென்னும் நியதியில்லை. அந் நிலைகள் ஒத்தகாமத்திணைகளுக்கே சிறந்துரியன. ஆதலால் "முன்னதற்கென்ப" எனுந்தொடரை இங்குச் சிறிது முற்கூறிய கைக்கிளை ஒன்றற்கே உரியதுபோலக் கொள்ளற்கில்லை. மடலேறாமல் 'ஏறுவேன்' எனத் தோழிக்குக் கூறி "வெளிப்பட இரத்தலே-ஏறுமடற்றி றம்", 'நலம் பாராட்டலே - இளமைதீராத்திறம்', "புணரா இரக்கமே - தேறுதலொழிந்த காமத்துமிகாத் திறம்", "நயப்புறுத்தலே-மிக்க காமத்து மாறுத்திறம்", என அம்முன்னிலை நான்கையும் இளம்பூரணர் இச்சூத் திரச் சிறப்புரையில் விளக்குகிறார். வெளிப்பட இரத்த லும், நலம்பாராட்டலும், புணரா இரக்கமும், நயப்புறுத் தலும், ஆய நான்கும் கைக்கிளையினும் ஒத்த காம ஐந் திணைகளுக்கே பெரிதும் சிறப்புரிமை உடையவாகப் பண்டைச் செய்யுள்களில் பயிலப் பார்க்கிறோம். இந் நூலாரும் ஐந்திணைத் துறைகளை விளக்குமிடத்து இவற் றினையும் ஐந்திணைத் துறைகளோடு இயைத்துக் கூறு கின்றார். ஆகவே, இந்நான்கையும் கைக்கிளைக்குச் சிறந்

துரியவாக இங்குக் கொள்வது பொருந்தாது; அது இந்நூற் கருத்துமன்று. அதனாலும் அவருரை இச் சூத்திரப் பொருளாகாது.

இனி, இவ்வியலில் மேற்கூறிய நான்கு அகத்திணைகளின் பொதுவிலக்கணங்கள், இவ்வகத்திணையியலில் விளக்கிய உரிப்பொருளான ஒத்தகாமத்திணை ஐந்திற்கே உரியனவா? அவற்றின் பின்னர்க் கூறும் திணைகள் இரண்டிற்குந் தொடர்புடையனவா? எனுமையமகற்றித் தெளிப்பது இன்றியமையாததாகும். ஆகவே, இச்சூத்திரத்தால் இந்நூலார் அவ்வினாக்களுக்குரிய விடையிறுத்து விளக்கலாயினர், என்பதை இங்குத் தெளிதல் எளிது. இதில் "முன்னதற்கென்ப" என்பது காலம்பற்றி முன்னதையே குறிப்பதாகக்கொண்டு, இதற்கு முற்கூறிய திணையிரண்டனுள் பெருந்திணைக்கு முன்னதான கைக்கிளையைச்சுட்டும் என்று நச்சினார்க்கினியரும் இளம்பூரணரும் பொருள் காணுதலால், அம்முறையே இச்சூத்திரத்தில் வரும் "முன்னைய நான்கும்" என்ற சொற்றொடரும் காலத்தால் இதற்கு முற்பகுதியில் கூறப்பெற்ற நான்கே யாதல் வேண்டும் என்பது தேற்றமாகும். அவ்வாறு கூறிய நான்கு குறிப்புக்கள் பெருந்திணை கைக்கிளைகளை விளக்கும் இரு சூத்திரங்களுக்கும் முன் கூறப்பெற்றுள. ஆதலால் அவற்றையே இங்கு "முன்னைய நான்கும்" என்று சுட்டினர் இந்நூலார் எனத் துணிவதே பொருத்தமாகும். அவற்றின் விவரமும் பொருத்தமும் இனி ஆராய்வோம்.

கைக்கிளை பெருந்திணைகளின் இலக்கணம் கூறும் முன்னும், அன்பினைந்திணைகளின் பொது இலக்கணப் பகுதி கூறிமுடிந்த பின்னும், அவ்வைந்திணைகளுக்குப் பெருவரவினவாய் வந்துதவும் நான்கு செய்திகளைப்பற்றி விதிமுகத்தானும் விலக்குவகையானும் இந்நூலார் விளக்கிச் சில சூத்திரம் யாத்துளர் என மேலே காட்டினோம். அவை,

1. "நிகழ்ந்தது நினைத்தற் கேதுவாதல் (சூத். 43)
2. "நிகழ்ந்தது கூறி நிலையல் (சூத். 44)
3. "மரபுநிலை திரியாது விரவும் பொருள் விரவல் (சூத். 45.)
4. "உள்ளுறை உவம ஆட்சி (சூத்.46 முதல் 49வரை)

என்ற நான்கும் முன் ஒத்தகாமத்திணை ஐந்திற்கும் ஒத்து வழங்கும் பொது இலக்கணங்களாக கூறப் பெற்றன. இந்நான்கிலக்கணங்களும் அன்பினைந்திணைகளுக்கு உரியவாதலே யன்றி, அவற்றின்பின் கூறிய கைக்கிளைக்கும் ஒத்த உரிமை உடையனவாகும்; பெருந்திணைக்கு அவ்வாறு அமைந்தியையா; என்பதை வரையறுத்து, அச்சூத்திரம் இரண்டிற்கும் பின் புறனடையாக அக்கருத்தை விளக்க இச்சூத்திரம் எழுந்தது. இத்தொடர்பியைபுகளை நன்குணர்தற்கு இவ்வியலில் கூறும் சூத்திரத்தொகை வகைகளின் வைப்புமுறைப் பாகுபாடுகளை உய்த்துணர்தல் அவசியமாகும்.

இவ்வியலில், முதற் சூத்திரத்தால் அகத்திணை யெழென இந்நூலார் தொகுத்து விளக்கினர். இரண்டாம் சூத்திரத்தால் அத்திணைகள் ஏழனுள் முதலும் இறுதியும் ஆய கைக்கிளை பெருந்திணையெனக் குறித்த இரண்டும் கழித்து இடைநின்ற ஐந்தும் ஒத்தகாம உரித்திணைகள் என்றும், அவ்வைந்தின் நடுநின்ற பாலை யொழிய மற்றைய நான்கும் குறிஞ்சிமுதலிய நானிலங்களுக்கும் முறையே சிறப்புரிமையுடையன என்றும் கூறினர். பிறகு "முதல், கரு, உரி", யெனும் மூன்றாஞ் சூத்திர முதல் "எஞ்சியோர்க்கும்" எனும் நாற்பத்திரண்டாஞ் சூத்திரம்வரை அந்நடுவணைந்திணைகளின் பாகுபாடுகளும், அவ்வவற்றின் சிறப்பிலக்கணங்களும் வகைபெறக்கூறினர். பிறகு "நிகழ்ந்தது நினைத்தற்கு" எனும் (42-ம்) சூத்திர முதல் "ஏனை உவமம்" எனும் (48-ம்) சூத்திரம் வரை அவ்வைந்திணைகளுக்கும் அமைய வந்து பயிலும் நான்கு பொது இலக்கணங்களைக் கூறி முடித்தார். பிறகு "காமஞ்சாலா" எனும் (49-ம்) சூத்திரத்தில் கைக்கிளையையும், அதன் பிறகு "ஏறிய மடற்றிறம்" எனும் (50-ம்) சூத்திரத்தில் பெருந்திணையையும் விளக்கினர். அவற்றின் பின் "முன்னைய நான்கும்" என்னும் இச்சூத்திரத்தை நிற்கவைத்தார். இவற்றுள் மூன்றாம் சூத்திரத்தால் அன்பினைந்திணைகளும் முதல் கரு உரியென வகைபெற வழங்கும் எனக்கூறி, அவ்வகைகளை விளக்கப் புகுந்தவர் "புணர்தல் பிரிதல்" எனும் 14 ஆம் சூத்திரத்தில் உரிப்பொருள்களை வகுத்து, அதுமுதல் "எஞ்சியோர்க்கும்" எனும் 41 ஆம் சூத்திரம்வரை

அவ்வுரிப்பொருள்களுள் ஒவ்வொன்றன் தனிச்சிறப்பிலக்கணங்களையும் அவ்வத்திணையொடு நிரலே வகைபட விளக்கினர்.

இவையெல்லாம் அன்புரித்திணைகள் ஐந்தில் ஒவ்வொன்றற்கே சிறப்புரிமையுடையனவாதல் கூறி, இவற்றின்பின் "நிகழ்ந்தது நினைத்தற்கு" என்பது (சூத். 42) முதல் "ஏனையுவமம்" என்பது (சூத். 48) வரை ஏழு சூத்திரங்களுள் இறுதி நான்கில் உள்ளுறை யுவமம் ஒன்றும், முதல் மூன்று சூத்திரங்களில் தனிவேறு மூன்றுமாக நான்கு பொது இலக்கணங்களை ஒத்தகாமத்திணை ஐந்திற்கும் ஒத்த இயைபும் தொடர்பும் உடையனவாகத் தெள்ளிதிற் கொள்ளவைத்தார். இவற்றுள், முதலிரு சூத்திரங்களைப் (சூத். 43-44) பாலைக்கே உரியனபோல உரைகாரர் கூறுவது பொருத்தமற்றதாம்.

"இரண்டறி கள்வி நங்காத லோளே;
............கான நாறவந்து
நள்ளென் கங்குல் நம்மோரன்னள்,
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்து
.........................................
அமரா முகத்த ளாகித்
தம்மோரன்னள் வைகறையானே."
(குறுந். 312.)

எனத் தலைவிபால் நிகழ்ச்சி தலைவன் தன்னுள் நினைத்தற்கு ஏதுவானதைக் கூறும் குறுந்தொகை 312 ஆம் பாட்டும்,

"அம்ம வாழிதோழி...........
மாற்றலம் யாமென மதிப்புக் கூறி
நப்பிரிந் துறைந்தோர், மன்றநீ
விட்டனை யோஅவ ருற்ற சூளே."

என முன் தலைவன் நிகழ்த்தியசூளைத் தோழி தலைவியை நினைக்கச் செய்ததைக்கூறும் ஐங்குறுநூற்றுச் (227 ஆம்) செய்யுளும், பாலைபற்றிய அல்ல; ஈரிடத்தும் இவை குறிஞ்சித்திணையில் "நிகழ்ந்ததைப்பின் நினைத்தற்கு ஏது" வானதையே குறித்தன. "மின்னொளிர் அவிரறல்" என்னும் குறிஞ்சிக்கலி (19-ஆம்) பாட்டும் அனையதே. இனி, "தீம்பால் கறந்த கலமாற்றி" என வரும் முல்லைக்கலிச் (10-ஆம்) செய்யுளும், "கொடியவும் கோட்டவும்" எனவரும் குறிஞ்சிக்கலிச் (18-ஆம்) செய்யுளும் தலைவி "முன்னிகழ்ந்தது கூறி நிலையலை" உணர்த்துவன; இவை முறையே முல்லையினும் குறிஞ்சியினும் வந்தன. இவ்வாறே இவ்விரு சூத்திரக் குறிப்புக்களும், உரைகாரர் கூறுமாறு பாலைக்குத் தனியுரிமை கொள்ளாமல், ஐந்திணை அனைத்திற்கும் வந்து பயிலும். "மரபுநிலை திரியா மாட்சியவாகி விரவும் பொருளும் விரவுவதும்", "உள்ளுறையுவமம் பயிலுவதும்", ஒத்த காமத்திணை ஐந்திற்கும் ஒத்த உரிமையோடொன்றிப் பயிலும் என்பதை உரைகாரரும் கூறுகின்றனர். அதனால், அவற்றிற்கு மேற்கோள் மிகையாகும்.

சூத்திரம் 52.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்,
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரியதாகும், என்மனார் புலவர்:

கருத்து:—இது, உலகியல் வழக்கொடுபட்டதே புலனெறி வழக்கம் என்பதையும், அன்புத்திணைக்குச் சிறந்துரிய பாட்டு வகையும் கூறுகிறது.

பொருள்:—நாடக வழக்கினும் = உலகியலை ஒட்டி உயர் குறிக்கோளோடு சுவைபடக் காட்டும் 'பொருந' வகை மரபுகளோடும்; உலகியல் வழக்கினும் = உலக மக்களின் ஒழுகலாற்றோடும்; பாடல் சான்ற புலனெறி வழக்கம் = சிறப்புறப் புலவரால் அமைக்கப்படும் அகத் திணை மரபுகள்; கலியே பரிபாட்டாயிரு பாவினும் = கலி யும் பரிபாடலுமாகிய இரு பாவகைகளிலும்; உரியதாகும் = சிறப்புரிமை கொண்டு பயிலும்; என்மனார் புலவர் = என்று கூறுவர் பொருள்நூற் புலவர்.

(பொருந = நடிப்பு; ஒருவர்போல நடிப்பது.)

குறிப்பு:—புலவராற் பாடப்பெற்ற அகத்துறை மரபு கள் உலகியலைத் தழுவி அமைவதே இயல் நெறியின் இன்றியமையாக் குறிக்கோளும் பயனுமா மென்பதை இச்சூத்திரம் வற்புறுத்துகிறது. மக்கள் வாழ்க்கையொடு தொடர்பற்ற புலனெறி வழக்கம் எதுவாயினும் பயனும் சுவையும் பயவாது. அதனால் உலகியல் வழக்கொடு அகத் திணைப் புலனெறி வழக்குத் தழுவி நடக்கும் என இதிற் கூறப்பட்டது.

நாடகம் மக்கள் வாழ்க்கையையே உயரிய குறிக்கோளோடு இயைத்துச் சுவைபட நடித்துக் காட்டும் நோக்குடையதாய் உலகியலொடு ஒன்றுபட்டு ஒழுகுவதேயாமாகலின், உலகியல் வழக்கொடு நாடகவழக்கும் உடன் கூறப்பட்டது. உலகியல் வழக்கு, உள்ளவாறுலகத்தார் ஒழுகலாறும். அவ் வாழ்வொழுக்கச் சிறப்பைச் சுவைபட ஆடிக்காட்டுவதே நாடக வழக்காம். ஆதலால் இவ்விரண்டும் மக்களின் வாழ்க்கையொடுபட்ட இயல்புகளையே குறிப்பனவாம். அகத்திணைப் புலனெறிவழக்கம் எல்லாம் மக்கள் வாழ்க்கையின் மெய்யியல்புகளைத் தழுவியே நடத்தல் இன்றியமையாததாதலால், அவ்வாறு புலனெறி வழக்கஞ் செய்தலே தமிழ் மரபென்பதைத் தொல்காப்பியர் இச்சூத்திரத்தால் வலியுறுத்துவர்.

இனி, பலவகைப் பாக்களில், புறத்திணைக்குச் சிறப்பனவும் புறத்திணைக்கும் அகத்திணைக்கும் பொதுவாய் வருவனவுமான வெண்பா அகவல் வஞ்சிகளினும், கலியும் கலியுறுப்புக்கொண்டு நடக்கும் பரிபாட்டுமாகிய இரண்டுமே அகத்திணைக்குச் சிறந்து பயிலும் பெற்றியன. அகத்திற்குரிய பல்வேறுணர்ச்சிகளுக் கேற்பச் செவ்வி சிறந்த ஓசை வளமும், உள்ளியன உரைத்தற்கு வேண்டியாங்கு விரவும் துள்ளல்தூக்கு முடையன அவ்விரு பாக்களுமாதலால், பண்டைத் தமிழ்ப் புலவர் அவற்றை அகத்திணைக்குரியவாக் கொண்டனர். அதனால் இவ்வியலில் அச் சிறப்புரிமை சுட்டப்பட்டது.

சூத்திரம் 53.

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்.

கருத்து:—இது, அன்பினைந் திணைக்குச் சிறந்த ஒரு மரபு கூறுகிறது.

பொருள்:— மக்கள் நுதலிய அகனைந்திணையும் = மக்கள் மதிக்கும் காதல் சுண்ணிய நடுவனைந்திணை களிலும்; ஒருவர் சுட்டிப் பெயர்கொளப் பெறுஅர் =தலைமக்கள் தம்முள் யாரும் இயற்பெயர் சுட்டி அகவப் பெறார்.

குறிப்பு:—காதல் கண்ணிய ஐவகை அகவொழுக்கமும், நாண்—தன்னலமறக்கும் அன்பு—காதலாற் றவறுகாணு மடம்—முதலிய சால்புகளாற் சிறந்த மக்கட் தன்மைக்கே இயைவதாகலின், "மக்கள் நுதலிய அகனைந்திணை" எனக் கூறப்பட்டது. 'மக்கள் நுதலிய' என்பது, மக்கள் தாம் பொருளாகக் கருதிய எனவிரியும். இனி, மக்கள் என்பதை, மக்கட்டன்மை சுட்டுதலாகக்கொண்டு அத் தன்மை நுதலிய எனக் கொள்ளுதலும் ஒன்று.

தலைமக்கள் இருபாலோருள் எவரும் தம் பெயர் சுட்டி அகவப்பெறாராதலின், இருபாற்கு முரித்தாகிய 'ஒருவர்' என்னும் பொதுப் பெயரால் அம்மரபு கூறப் பட்டது.

'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்' என்பதனால், அளவளாவிற் அகவிச் சுட்டாத பிறவிடங்களில் தலை மக்கள் பெயர் கூறப் பெறுதல் தவறாகாதென்பதை, இளம்பூரணர் கொண்டபடி இதில் குறிப்பெச்சத்தாற் கொள்ளவிட்டு ஐயத்திற்கிடம் வையாமல், தொல்காப் பியர் அடுத்த சூத்திரத்தில் தெளியக் கூறுவர்.

சிலப்பதிகாரம் சிந்தாமணிபோன்ற பண்டைச் செய்யுட்களில், யாண்டும் தலைமக்கள் தம்முள் இயற் பெயர் சுட்டி அகவி அளவளவுதல் கூறப்பெறுமையும், அவ்வாறு அளவுதல் குறியாப் பிறவிடங்களில் தலைமக்கள் பெயர் கூறப்பெறுதலும் ஈண்டுக் கருத்தக்கன.

காதலாற் கலந்தார்க்கு, "ஈருயிரென்பர் இடைதெரி யார்," அவர் தம்முள் ஒருயிராக உணர்வாராதலின், அவ்வுணர்ச்சி வயப்பட்டாருள் ஒருவர் ஒருவரைத் தம்மில்வேறுபட்ட பிறர்போலப் பெயர்சுட்டியளவுதல் இருமை நீங்கிய அவர் ஒருமைக் காதலுணர்ச்சியோடு இயைவதன்று; ஆதலின் அவ்வாறு அளவுங்கால் 'என் னுயிர்' 'என் கண்' என்பன போன்ற வேறன்மையை விளக்குங் தற்கிழமைக் காதற்குறி யீடுகள் கூறி யளவு தலே இயல்பாகும்.

(1) "இவள்வயிற் செலினே யிவற்குடம்பு வறிதே;
இவன்வயிற் செலினே இவட்கும் அற்றே;
காக்கை யிருகணின் ஒருமணி போலக்
குன்றுகெழு நாடற்கும் கொடிச்சிக்கும்
ஒன்றுபோல் மன்னிய சென்றுவா ழுயிரே."

(2) "காணா மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர், மன்ற பொய்ம்மொழிந் தனரே;
யாஅங் காண்டுமெம் அரும்பெற லுயிரே;
சொல்லும், ஆடும், மென்மெல இயலும்,
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே."

என்ற பழம் பாட்டுக்கள், காதலிற் கலந்தாரின் ஒருமை யுணர்ச்சியை வலியுறுத்தும்.

அவ்வாறு ஒன்றுபட்ட காதற்றலைமக்கள், தம்முள் வேருயினூர்போல ஒருவரைபொருவர் பெயர்கூறி யளவ ளாவுதல் தம் காதற்செவ்விக் கியையாதாகலானும், அதுவேயுமன்றி ஒத்த அன்புக்கு இன்றியமையாத நன்கு மதிப்பைப் பிறர்போல் தம்முள் பெயர்சுட்டி அழைப்பது வளர்க்குமாறில்லை யாகலானும், தலைப்படுங்கால் ஒன்றிய காதலர் தம் உளத்துவளர் காதல் கமழும் மொழிகளால் ஒருவரையொருவர் பாராட்டுவதன்றிப் பெயர்சுட்டி யளவு தல் மெய்க்காதற் குறியன்ருகலானும், அவ்வுணர்வியலுக் கேற்பப் புலனெறி வழக்கில் தலைமக்கள் ஒருவரையொரு வர் அன்பொழுக்கத்தில் தம்முட் பெயர்சுட்டிக் அளவுதல் மரபன்றென இதில் வற்புறுத்தப்பட்டது.

இதுவும் இதனையடுத்த கீழ்ச்சூத்திரமும் அகப்பகுதி அனைத்திலும் தலைமக்கள் பெயர்கூறப் பெருமையே மரபெனக் கூறுங் குறிக்கோளுடையன போலக்கொண்டு, உரைகாரர் இவ்விரண்டிற்கும் வெவ்வேறு பொருள் கண்டனர். யாண்டும் பெயர்கூருமையே தொல்காப் பியர் கருத்துமாமேல், "மக்கள் நுதலிய அகனைந்திணை யுள், தலைவனும் தலைவியும் பெயர்கூறப்பெருர்." என்று இதனிலும், "அகத்திணை மருங்கில் வழக்காறில்லை" என்றடுத்த பின் சூத்திரத்திலும் தெளியவிளக்கி விலக்கி யிருப்பர். 'அகத்திணை ஏழனுள்' அல்லது 'அகத்திணை மருங்கில்' என்னுது", "அகனைந்திணையும்" என்றும்,

'தலைவனும் தலைவியும் பெயர்கூறப் பெறார்', அல்லது 'யாண்டும் கிழவோர் பெயர்கூறப் பெறார்' என்னாமல், "சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்" என்று இச்சூத்திரத்திலும், "அகத்திணை மருங்கில் வழக்காறில்லை" என்னாமல், "அகத்திணை மருங்கின் அளவுதலிலவே" என அடுத்த கீழ்ச் சூத்திரத்திலும் தொல்காப்பியர் கூறிப்போந்ததால், அவர்க்கது கருத்தன்மை தேற்றமாகும்.

(1) ஒத்தகாதற் றலைமக்கள் அன்பளவுதலில் தம்முள் பெயர் சுட்டாராகையால் 'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார் என்றும், (2) அவ்வாறு காதலிருவர் தம்முள் ஆதரவுபட்டு அளவுதல் கைக்கிளை பெருந்திணைகளிலின்மையால் அவ்விரண்டையும் விலக்கி "அகனைந்திணை" என்றெண் குறித்தும், (3) பெயர் சுட்டி 'அளவுதல்' அன்புத்திணை அனைத்திலும் வழக்காறன்மையால் "அகனைந்திணையும்" என முற்றும்மை கொடுத்தும், இங்குத் தொல்காப்பியர் கூறிய குறிப்புத் தேறற்பாற்று.

தலைமக்கள் தம்முள் அன்பளவுதலில்மட்டும் "சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்" எனவும், அவ்வாறு அவருள் அன்பளவுதலின் புறத்தே அகப்பகுதிகளில் ஏற்புடை யிடங்களில் பெயர்கூறப் பெறுதல் கடியப்படாதெனவும், முறையே இவ்விரு சூத்திரங்களானும் தொல்காப்பியர் விளங்கவைத்தார்.

இனி, இதுவே தமிழ்கூறும் நல்லுலகத்து வழக்கினும் செய்யுளினும் அடிப்பட்டு வந்த ஆன்றமரபாமென்

பது, சான்ரேர் செய்யுட்களாலும் தமிழ்மக்கள் கையா ளும் ஆன்ற வழக்காலும் தேறப்படும்.

சிலப்பதிகாரம் சிந்தாமணி இராமாயணம்போன்ற சான்ரேர் செய்யுட்களில் இம்மரபாட்சி கண்டு தெளிக.

“ மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே,
பெருங்குடி வாணிகன் பெருமடமகளே,
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப்பிறவா இசையே என்கோ?
தாழிருங்கூந்தல் தையால்! நின்னை.”

என்று சிலப்பதிகாரத்தின் தலைநாட் கூட்டத்துக் குப்பின் தன் தலைவியொடு அளவளாவும் கோவலன் அவள் நலம் பாராட்டும் குறிஞ்சித் திணையில் தலைவி பெயர்சுட்டாமல் அளவுதல், அகனைந்திணையில் தலை மக்கள் அளவளாவுமிடத்து ஒருவர் பெயரை மற்ருரு வர் சுட்டா மரபு காட்டும். அஃதல்லாவிடத்துப் பெயர் சுட்டும் வழக்குண்மையை,

“ வசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனையாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன! நின்னகர் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்

கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி,
கண்ணகி என்பது என்பெயரே".

எனக் கண்ணகி தென்னன் முன் கூறுதலால் அறிக. இவ்வடிகளில் தலைமக்கள் இருவர் பெயருமே கூறப்பெறுதலும் அறிக.

இனி, தமிழகத்தில் செய்யுள் வழக்கேயன்றி உலகியல் வழக்கிலும் இம்மரபுண்மை, பண்டை மரபழித்துப் பெண்டிரை யிழித்துமகிழ் பிறநாகரிகம் புகுந்த பிற்காலத் தமிழகத்திற் போலாது, அடிப்பட்ட பழந்தமிழ் மரபு பல வழுவாமற்பேணும் ஈழத்தில் இற்றை ஞான்றும் காணப்படும். நேரிற் பெயர் சுட்டாமை பெண்டிர்க்குப் போலவே ஆடவர்க்கும் உரித்தாய்க் கணவனும் மனைவி பெயர் சுட்டி அளவா வழக்கும், ஒருதலையாக இருபாலோரும் பன்மைக்குரிய இருபாற் பொதுச் சொற்களால் பேணிப் பேசித் தம்முள் அளவுதலும், தம்முள் அளவளவா இடங்களில் ஒப்ப இருபாலோரும் ஏற்புழி ஒருவர் பெயரை மற்றவர் கூறலும், ஈழத் தமிழருள் இன்றும் வழங்கக் காண்பாம். சிங்களர் முதலிய அந்நாட்டுப் பிறமக்களுள் என்றும் இம்மரபின்மையால், இது தமிழர் ஆண்டுத் தம்மொடு கொடுபோய்க் கையாளும் பழமரபேயாதல் வேண்டும்.

சூத்திரம் 54.

புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்லது
அகத்திணை மருங்கில் அளவுதலிலவே.

கருத்து:—இது, மேலதற்கோர் புறனடையாய், எய்தாதது எய்துவித்தது.

பொருள்:—புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்லது =(சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறுதல்) மேற்சூத்ரத்திற் கூறியாங்குத் தலைமக்கள் தம்முள் அளவளவாப் பிறவிடங்களில் ஐந்திணைப்புறனாய் அமைவதல்லால்; அகத்திணை மருங்கில் அளவுதல் இல=அகவொழுக்கத்தில் அவர் தம்முள் அளவளவலில் இல்லை.

குறிப்பு:— "சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறுதல்" என்னும் எழுவாய் மேற்சூத்திரத்தினின்று தொடர்புபற்றி வருவிக்கப்பட்டது. இனி, 'அளவு தலையே' எழுவாயாக்கி, "பெயர் சுட்டி அளவுதல் இல" என முடிப்பினும் அமையும்.

அகனைந்திணையில் தலைமக்கள் தம்முள் இயற்பெயர் சுட்டி அளவளாவல் மரபன்றென முற்சூத்திரத்திற் கூறப்பட்டது. எனவே, அளவளாவல் அல்லாத அன்பினைந்திணை கூறுமிடங்களில் தலைமக்கள் பெயர்கொளப் பெறுதல் கடியப்படுமோ எனும் ஐயம் நீக்கற்கு இச்சூத்திரம் எழுந்தமையால், இது முன்னதற்குப் புறனடையாயிற்று. இவ்வாறு காதலர் தம்முள் அளவளவுதல் ஒழிந்த ஏனை அன்பினைந்திணை அகப்பகுதிகளில் அவர் பெயர் சுட்டப்பெறுதலும், ஒருவர் பெயரை மற்றவர் கூறுதலும் இழுக்கன்று. இவ்வுண்மையை

"அரிமா சுமந்த அமளிமே லானைத்
திருமா வளவனெனத் தேறேன்,—திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன், தொழுதகைப்
போனவா பெய்த வளை"

என்னும் பட்டினப்பாலைத் தலைவனின் இயற்பெயர் சுட்டும் அகத்துறை வெண்பாவும்,

"நெடுவரைச் சந்தன நெஞ்சங் குளிர்ப்பப்
படுமடும் பாம்பேர் மருங்குல்—இடுகொடி
ஓடிய மார்பன் உயர்நல் லியக்கோடன்
சூடிய கண்ணி சுடும்."

என்னும் ஓய்மாநாட்டு நல்லியக்கோடன் இயற்பெயர் சுட்டும் பழைய வெண்பாவும் வலியுறுத்தும். இவ்விரண் டிடத்தும் தலைவி தலைவன்பெயர் கூறுதல் காண்க.

"தூஉத் தீப்புகை தொல் விசும்பு போர்த்ததுகொல்?
பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின் வாய்ப்பட்டான்
கொல்?
மாஅ மிசையான்கொல்? நன்னன் நறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு."

என்னும் பழைய வெண்பாவிலும் அகத்துறையில் தலைவன் பெயர்சுட்டுதல் காண்க.

இவை கைக்கிளைப் பாக்களாதலிற் பெயர் கூறப் பெற்றது என்பார்க்கு, பெண்பாற் கைக்கிளை பிற்காலப் பிழை வழக்காவதன்றிப் பண்டைப் புலவர் கொண்ட

ஆன்ற வழக்கன்மையானும், தொல்காப்பியர் கைக்கிளையை ஆடவர்க்கே அமைத்து பெண்டிரின் ஒரு தலைக் காமம் முதலிய மற்றனைத்தையும் பெருந்திணையிலடக்கி யமைவாராதலானும், இப்பழைய வெண்பாக்கள் அன்பினைந்திணைத்துறையே கூறுவனவாமெனக் காட்டி மறுக்க. மேலும், இதில் "ஐந்திணை மருங்" கென்னது, "அகத்திணை மருங்கில்" என்றதனல், இந்நூற்பாக் கட்டளைக்குக் கைக்கிளை விலக்கின்மையாலுமவர் கூற்றுப் பொருந்தாதென்க.

அகநானூறு கலித்தொகை முதலிய அகத்தொகைச் செய்யுட்களில் யாண்டும் தலைமக்கள் பெயர் கூறப்படாமை கொண்டு, அகத்திணைப பகுதி கூறும் செய்யுட்களில் இயற்பெயர்ச்சுட்டு யாண்டும் எஞ்ஞான்றும் கடியப்படு மெனக் கூறுவாருமுளர். யாரையுங் குறியாமல் அகத் துறைகளின் செவ்வியைப் புனைந்துரைப்பதையே குறிக்கோளாகக்கொண்ட தனிச் செய்யுட் தொகுதிகளில் எவர் பெயரும் சுட்டற்கிடமின்மை வெளிப்படை; அது கொண்டு சிறப்புடையோரின் சீரிய காதல் பாடும் புலவர் தம் செய்யுட்களில் யாண்டும் தலைமக்கள் பெயரே கூற லாகாதென விலக்குதல் அமைவுடைத்தன்று; அவ் விலக்கிற்கு விதியும் வழக்கும் இல்லை. பெயர்கூறும் வழக்குண்மை முன் சூத்திர உரையிற் காட்டியன கண் டுணர்க.

இனி, தக்கோர் தலைவராய் அவர் காதற் செவ்வியே பொருளாக வரும் பாட்டெல்லாம் அவர் பெயர் குறிப்ப

தனால்மட்டும் அகமாகாதென மறுக்குமாறில்லை. புறத்துறைப்பகுதி மிகுதியுமுடைய பட்டினப்பாலை காதல் கண்ணிய முடிவு ஒன்றுகொண்டு அகநூலாகக் கருதப்படுங்கால், காதலொழுக்கமே பொருளாய் வரும் செய்யுளில் காதலர் பெயர் குறிக்கப்படுவதால் மட்டும் அதைப் புறமென விலக்க விதி யாதும் யாண்டுந் தொல்காப்பியர் கூறவில்லை. ஆதலால் பெயர்சுட்டுதல் ஒன்றுகொண்டு கோவலன்-கண்ணகி, கோவலன்-மாதவி, மணிமேகலை-உதயகுமரன், சீதை - இராமன், ஜீவகன் - மனைவியர் முதலியோர் காதல் கூறும் பகுதிகளெல்லாம் புறத்திணையின் பாற்படுமென்பது பொருந்தாக் கூற்றாகும்.

இனி, 'புறத்க்கம்' என்றொன்றிமையான், 'அகப்புறம்' என்றொன்றமைப்பது தொல்காப்பியர் யாண்டுங் கருதாப் புதிய திணையாமாதலானும், அஃதமைவதன்று.

இச்சூத்திரத்தில், 'புறத்திணை' என்பதை மேற்சூத்திரத்திற் கூறிய அளவளவும் "அகனைந்திணைப்புறம்" என மாற்றிப் பொருள்கோடல் வேண்டும். அல்லாக்கால், 'அகமல்லாப்புறத்திணைக்குரியதனை மயக்கத்திற்கிடமாக தொல்காப்பியர் இவ்வகத்திணையியலில் மறந்து கூறினாரென அவருக்கு மற்றொன்று விரித்த குற்றம் சுமத்துவதாக முடியும். ஆதலால் அஃது அவர் கருத்தன்மை அறிக.

இனி, இங்குத் தொல்காப்பியர் புறத்திணையையே சுட்டுவதாகக் கொள்ளின், அளவளாவிடத்து அகத்திணை

யுள்ளும் பெயர் சுட்டல் அமையுமென ஐயமகற்றக் கருதி, அது கூறுமிச்சூத்திரத்தில் தலைமக்கள் சுட்டிப் பெயர் கொளப்பெறுதல் புறத்திணைக்கண் கடியப்படாதென் பதையும் "ஒன்றென முடித்தல், தன்னின முடித்தல்" எனுமுத்திகளால் ஈண்டு உடன்கூறினார் என அமைத்தல் வேண்டும்.

ஆகவே, அன்பினைந்திணை மருங்கினும் தலைமக்கள் தம்முள் அளவளவுதல் கூறுமிடத்துமட்டும் ஒருவரை ஒருவர் பெயர் சுட்டல் கடியப்படும் என்பதும், அவ்வாறு அளவுதலின் புறத்து ஐந்தகத்திணைகளிலும், அவற்றின் புறம்பே கைக்கிளை பெருந்திணை என்னும் அகப்பகுதி களிலும், புறத்திணையில் மக்களின் தூய காதல் கண்ணிய பாடாண் பகுதிக்கண்ணும், அவ்வாறு பெயர் சுட்டுதல் கடிதலில்லையென்பதும், இதுவே அவர்காலப் புலனெறி வழக்காமென்பதும், இவ்விரு சூத்திரங்களாலும் அம் மரபுகளைத் தொல்காப்பியர் விளங்க வைத்தார் என்பது தேற்றம்.

———(o)———

அகத்திணையியல்
முற்றிற்று.

# அகத்திணையியலுரைப் பிழை திருத்தம்.

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 2 | அகத்தினை | அகத்திணை |
| ,, | 6 | பொருட்பகுதியைப் | பொருட்பகுதியை |
| 2 | 11 | சிறப்பியல்புகளை | சிறப்பியல்புகளைக் |
| 3 | 14 | இவ்வியற்று வகத்தது | இவ்வியற்றுவக்கத்து |
| ,, | 20 | லொழுக்கங்களை | லொழுக்கங்களைத் |
| ,, | 25 | ஒருவர்பாற் கதிர்த்து | ஒருவன்பாற் கதிர்த்து |
| ,, | ,, | மற்றையோர் | மற்றையோள் |
| 4 | 7 | அப்பினைந்திணைகளை | அன்பினைந்திணைகளை |
| ,, | 12 | ஐந்தினைகளையும் | ஐந்திணைகளையும் |
| 6 | 7 | ஏற்ற பெற்றி | ஏற்றபெற்றி |
| ,, | 20 | அகத்துறைபில் | அகத்துறைபில் |
| 7 | 25 | தமிழ்மொழி வல்லார் | தமிழ் நூல் வல்லார் |
| 9 | 9 | மூலபடக்கிளந்த | முற்படக்கிளந்த |
| 10 | 8 | நெய்தலென | நெய்தலெனத் |
| ,, | 9 | பகுக்கக்படுதலானும் | பகுக்கப்படுதலானும் |
| 13 | 6 | நிரல் நிரை | நிரல்நிறை |
| ,, | 15 | திராவிடர் | தமிழர் |
| ,, | 18 | ஆராச்சிக்கட்டுரை | ஆராய்ச்சிக்கட்டுரை |
| 14 | 8 | மாலைப்பொருளாகிய | மாலையாகிய |
| ,, | 18 | புரட்டசியும் | புரட்டாசியும் |
| ,, | 20 | அல்லது | அதாவது |
| 15 | 18 | சிறைமணி | சிறைபனி |
| ,, | 22 | தான்றுளம் | தானுளம் |
| ,, | 23 | நானவில் | நாகவில் |
| 16 | 3 | குரிதலெனல் | குரித்தெனல் |
| ,, | 6 | குறிஞ்சிக்குரிமை | குறிஞ்சிக்குரித்தாதல் |
| ,, | 10 | குறிஞ்சிக்குறித்தா | குறிஞ்சிக்குரித்தா |
| 17 | 23 | நெயதல் | நெய்தல் |
| 25 | 21 | நெய்தக்கலி | நெய்தற்கலி |
| ,, | 24 | முயங்கப்பெரின் | முயங்கப்பெறின் |

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 25 | 26 | கூடிமுயங்கப்பெரின் | கூடிமுயங்கப்பெறின் |
| 26 | 18 | பகல் மாயக்ப்படு சுடர் | பகல் மாயந்திப் படுசுடர் |
| 27 | 23 | நெருங்லொருத்தி | நெருநலொருத்தி |
| 28 | 20 | நெடுவெண் | நெடுவேண் |
| 29 | 2 | நண்பகல | நண்பகல் |
| 30 | 25 | செல்வர் | செல்லார் |
| 31 | 8 | இளவேனிற் | இளவேனிலிற் |
| ,, | 14 | செங்கனிருங்குயி | செங்கணிருங்குயி |
| ,, | 15 | வேளிலும் | வேனிலும் |
| ,, | 16 | பெருங்கடுங் கோலின் | பெருங்கடுங் கோவின் |
| 32 | 7 | விளங்குகிறது | விளக்குகிறது |
| 33 | 10 | இங்கு கருத்தன்மை யறிக | இங்குக் கருத்தன்மை யறிக |
| 35 | 12 | செயகோ? | செய்கோ? |
| ,, | ,, | நற்றினைப் | நற்றிணைப் |
| 40 | 4 | ஏனும் | எனும் |
| 41 | 9 | ஒருக்க இயல் | ஒழுக்க இயல் |
| 42 | 8 | குறஞ்சி | குறிஞ்சி |
| ,, | 23 | ஒன்றன் | ஒன்றின் |
| ,, | 25 | இால்பையே | இயல்பையே |
| 43 | 2 | பாட்டில்லாத | பாடில்லாத |
| ,, | 14 | நிலனெகுங்கு | நிலனெருங்கு |
| 45 | 2 | குறிஞ்சித்தினையின் | குறிஞ்சித்திணையின் |
| ,, | 13 | (தினைமாலை 153ல்) | (திணைமாலை 150) |
| ,, | 14 | பால நிலத்து | பாலை நிலத்து |
| 47 | 3 | பிறத்தினையோடு | பிறதிணையோடு |
| ,, | 26 | கைக்கினை | கைக்கிளை |
| 48 | 6 | குறிஞ்சிலத்தில் | குறிஞ்சி நிலத்தில் |
| ,, | 12 | ஒற்றிய | ஒற்றிய |

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 48 | 18 | கழிதலா முரிப்பொ | கழிதலா முரிப்பொருள் |
| 49 | 9 | கலிழி | கலுழி |
| 52 | 6 | ஆண்டைப் | ஆண்டைப் |
| 58 | 10 | வியத்தற் குறித்து | வியத்தற் குரித்து |
| ,, | 16 | மாநீரத்திரையுட் | மாநீர்த்திரையுட் |
| 65 | 3 | பெயருங் | பெயரும் |
| | | விளையுமென் | வினையுமென் |
| 68 | 16 | வலிபெலுகின்ற | வலிபெறுகின்ற |
| 69 | ,, | புலங்தொகுத் | புலந்தொகுத் |
| | | தேனே | தோனே |
| ,, | 27 | திணைக்குரிமையுங் | திணைக்குரிமையும் |
| 70 | 4 | திணைநிலப்பெயர் | திணைநிலைப்பெயர் |
| 71 | 8 | பல சூத்திரங்களாற் | பல சூத்திரங்களால் |
| ,, | 23 | எனத் விளக்கும் | என விளக்கும் |
| 79 | 7 | செய்யிட் செய்தல் | செய்யுட் செய்தல் |
| 80 | 5 | அன்பிணைந்தினை | அன்பினைந்திணை |
| ,, | 6 | கைக்கினை | கைக்கிளை |
| ,, | 15 | 'எவன் மரபின்' | 'ஏவன் மரபின்' |
| 82 | 12 | மருதக்கவியில் | மருதக்கலியில் |
| 83 | 22 | ஒருவரிடைத் | ஒருவரிடத் |
| | | தடைந்து | தடைந்து |
| 85 | ,, | காவற்றெழுது | காவலற்றெழுது |
| 86 | 5 | புளத்துளாள் | புனத்துளான் |
| ,, | 6 | செவ்வதோ | செல்வதோ |
| ,, | 7 | திணைத்தாளுள் | தினைத்தாளுள் |
| 90 | 3 | கெல்லுதலும் | செல்லுதலும் |
| ,, | 6 | பொருத்தமேயாகும் | பொறுத்தமேயாகும் |
| ,, | 7 | தான | தானே |
| ,, | 13 | பாராட்டி பொருதல் | பாராட்டிப் பொருதல் |
| 93 | 24 | லியல்பாயிலும் | லியல்பாயினும் |
| ,, | 26 | மன்னற்குதானே | மன்னற்குத்தானே |

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 96 | 4 | நக்சினார்க்கினியர் | நச்சினார்க்கினியர் |
| ,, | 10 | அந்தணாராசரொடு | அந்தணரரசரொடு |
| 99 | 4 | ஒத்தின் | ஓத்தின் |
| 102 | 25 | சூத்திரய்களில் | சூத்திரங்களில் |
| 103 | 24 | ஆரெனவரூ உமாபெருந்தானையர் | ஆரெனவரூஉ மாபெருந்தானையர் |
| 111 | 18 | பொருள்:—(இ-ள்) | பொருள்:— |
| 114 | 4 | நற்றிணை | நக்றிணை |
| 115 | 22 | கருங்கோல் ஆகுவ, தறியும் | கருங்கோல், ஆகுவதறியும் |
| 118 | 7 | கொடுஞ் சோறுள்ளான் | கொழுஞ் சோறுள்ளான் |
| ,, | 24 | கூற்வேற் காளை | கூர்வேற்காளை |
| 119 | 2 | ஏமபபேரூர்ச் | ஏமப்பேரூர்ச் |
| 120 | 7 | தயருமுளரே | தாயருமுளரே |
| 125 | 5 | நெருக்கி | நெருங்கி |
| 127 | 12 | எனபதே | என்பதே |
| 129 | 6 | இலைகவரப் | இலைகவர் |
| ,, | 14 | நின்னலதில்லே | நின்னலதிலலே |
| 133 | 24 | மருதளின நாகனார் | மருதனிள நாகனார் |
| 135 | 21 | தோர்பாக்கிற் | புணர்ந்தோர் பாங்கிற் |
| 138 | 23 | ஐமபால் | ஐம்பால் |
| 139 | 3 | மெல்லியற் | மெல்லியல் |
| 144 | 2 | எனத்தொகுத்து | எனத்தொகுத்துக் |
| ,, | 9 | மறுபரம் | மறுபுறம் |
| 145 | 23 | இலைகவரப் | இலைகவர் |
| 146 | 10 | இலையிலஞ்சிணை | இலையிலஞ்சினை |
| 147 | 19 | உலவையாங்கட் | உலவையங்காட் |
| 150 | 22 | உடைய | உடைமையது |
| 151 | 4 | சேர்பினும் | செல்லினுஞ் |
| ,, | 11 | செகுத்தனன் | செகுத்தனென் |

| பக் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 155 | 19 | நறுந்தண்ணிய்ளே | நறுந்தண்ணியளே |
| ,, | 24 | மல்குசுனை புலர்ந்த | மல்குசுனை யுலர்ந்த |
| 156 | 17 | மன்னய | மன்னிய |
| 157 | 9 | விளைவயிற் | வினைவயிற் |
| ,, | 12 | (நற். 124) | (நற். 214) |
| 159 | 9 | ஒருகுறை ஒருவன் | ஒருகுழை ஒருவன் |
| 160 | 10 | நீகூறும் பொய்க்சூழ் | நீகூறும் பொய்ச்சூள் |
| ,, | 11 | வேற்றினி | மற்றினி |
| 162 | 18 | கானங்கேபழி | கானங்கோழி |
| 164 | 5 | யடைச்சில் | யடைச்சிப் |
| ,, | 11 | காக்கத்தன் | காக்க தன் |
| 168 | 15. | திணைத்தாள் | தினைத்தாள் |
| ,, | 19 | நீனைத்தற்குச் | நினைத்தற்குச் |
| ,, | 21 | முரண்காள் | முரண்கொள் |
| 169 | 15 | மண்ணுநர் | மண்ணுநள் |
| 170 | 3 | ஐந்திணைச் சூத்தி ரங்களிளடஙகாது | ஐந்திணைச் சூத்தி ரங்களிலடங்காது |
| 172 | 7 | துவர் செவ்வாய் | துவர்ச்செவ்வாய் |
| ,, | 8 | நன்றுதா | நன்னுதா |
| ,, | 12 | யைதேய்ந்கன்று | ஐதேய்ந்தன்று |
| ,, | 14 | ம்லையுமன்று | மலையுமன்று |
| 173 | 5 | அணிநிலை பொறாஅ | அளிநிலை பொறாஅ |
| 176 | 1 | அகத். சூ. 40 | அகத். சூ. 44 |

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்,
தஞ்சாவூர்

THE
C. M. V. PRESS
MADURA.